24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 08 கார்த்திகை 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 04 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# 225 பேரும் ஆதரவளித்தாலும் ரணிலை நியமிக்கவேமாட்டேன்

## மைத்திரி தொடர்ந்தும் பிடிவாதம்; குழப்பம் தீரும் அறிகுறியில்லை

கொழும்பு, டிசெ.4
நாடாளுமன்றத்தில் உள்ள 225உறுப்பினர்களும் ஆதரவளித்தாலும்கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சராக்க மாட்டேன் என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும்ஐக்கியதேசியமுன்னணிக்கும் இடையில் நேற்று இரவு நடைபெற்ற சந்திப்பும் முடிவெதுவும் எட்டப்படாமல் நிறைவடைந்துள்ளது.

"தலைமை அமைச்சர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்குமாறு ஐக்கிய தேசிய முன்னணியினர் பரிந்துரைத்தோம். எமது முன்மொழிவை » 24

## தான் நினைத்ததையெல்லாம் செய்யமுடியாது அரச தலைவர்

### ரணில் நேற்றுச் சீற்றம்

கொழும்பு, டிசெ.4
நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் உள்ளவரையே தலைமை அமைச்சராக நியமிக்க முடியும். அரச தலைவர், தான் நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது. அதற்கு அரசமைப்பிலும், சட்டத்திலும் » 25

# மகிந்தவின் அரசுக்கு இடைக் காலத் தடை

## மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, டிசெம்பர் 4
தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச இயங்குவதற்கும், அவரது அமைச்சரவை இயங்குவதற்கும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று இடைக்காலத் தடை விதித்தது.
மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட யாதுரிமை நீதிப்பேராணை நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே » 24

## இப்படியும் ஒரு புதுக்கதை

கொழும்பு, டிசெ. 4
மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதைத் தடுத்தமையாலேயே மட்டக்களப்பு வவுணதீவில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. » 25

## நீதிமன்ற தீர்ப்பினை மதித்து உடன் பதவி விலகிவிடுங்கள்

### மகிந்தவுக்கு ரணில் அறிவுரை

கொழும்பு, டிசெ.4
நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளித்து மதிப்பான முறையில் பதவிகளை உடன் துறந்து வெளியேறுமாறு மகிந்த ராஜபக்சவுக்கும், அவரது சகாக்களுக்கும் அவசர ஆலோசனை வழங்கியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.
காலியில் நேற்று » 24


seemorenewsin
newuthayan.com


## மகிந்த, பரிவாரங்களை முன்னிலையாக உத்தரவு

கொழும்பு, டிசெ.4
மகிந்த ராஜபக்ச உட்பட அமைச்சரவை உறுப்பினர்கள் 49 பேரும் மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.
மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிராக 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து தாக்கல் செய்யப் » 25

## மேன்முறையீடு செய்வார் மகிந்த



தலைமை அமைச்சர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அந்தப் பதவிகளை வகிப்பதை » 24

## பசில் குழுவுடன் மைத்திரி இரவிரவாக ரகசியப் பேச்சு

கொழும்பு, டிசெ. 4
தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணியுடன் நடத்தவிருந்த கூட்டத்தைத் திடீரெனக் கடைசி நேரத்தில் நேற்றுமுன்தினம் » 25

# ரணிலின் ஆட்சிக்கு ஆதரவளிக்க ரெலோ 5 நிபந்தனைகள் விதிப்பு

## ஏற்காவிட்டால் தமது எம்பிக்கள் இருவரும் எதிர்ப்பர் என்கிறார் சிறிகாந்தா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணிலின் அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டுமானால் மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை தற்காலிகமாக இணைத்தல் ஆகிய 5 முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்து மூலம் உறுதி வழங்கவேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது ரெலோ.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடக்க இருக்கும் நிலையில் தமது 5 நிபந்தனைகளையும் ஏற்றால் மட்டுமே தமது கட்சி உறுப்பினர்கள் ரணிலுக்கு » 24

## அரசியல் கைதிகள் விவகாரம்; வழமைபோன்று முடிவில்லை

கொழும்பு, டிசெ. 4
தமிழ் அரசியல் கைதிகள் விவகார்ம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் முடிவு எட்டப்படவில்லை.
'இப்போது நான் மட்டுமே அரசு. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட பின்னர், 2 வாரம் கழித்து அரசியல் கைதிகள் விவகாரம் குறித்துப் பேசுவோம்' என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந்திப்பில் நேற்றுக் » 25

## தமிழீழம் வழங்குவதற்கு ரணில் வாக்குறுதியாம்

### கண்டுபிடித்தது பெரமுன

கொழும்பு, டிசெ. 4
இலங்கையைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு கூறு போட்டேனும் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கான வாக்குறுதிகளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளார் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.
கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் தலைமையகத்தில் » 24

## மகிந்தவால் உயிர் அச்சுறுத்தல் என்பதெல்லாம் தேர்தல் 'புளுடா'

### இப்போது இப்படிக் கூறுகிறார் மைத்திரி

கொழும்பு, டிசெ. 4
மகிந்த ராஜபக்சவினால் தனது உயிருக்கு ஆபத்து இருந்தது என்று கூறியது, தேர்தல் மேடையைக் கவருவதற்கான கட்டுக்கதையே என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
சிலோன் ருடே ஊடகத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேர்காணல் வழங்கியிருந்தார். அதிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
உங்களின் » 24

## புலிகள் – கருணா பிளவுக்கும் ரணிலுக்கும் தொடர்பில்லை

### ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 4
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் பிளவை ஏற்படுத்தி கருணாவைப் பிரித்தெடுத்தமைக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, ரணில் விக்கிரமசிங்கவுக்கோ இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. ஐக்கிய தேசியக்கட்சியையும், ரணில் விக்கிரமசிங்கவையும் இந்த விடயத்தில் » 24

# பெரும்பான்மையுள்ள அரசை அமைக்க வேண்டும் மைத்திரி

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.4

**அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தான்தோன்றித் தனமாக அரசமைப்பை மீறிச் சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ள அனைத்துச் செயற்பாடுகளுக்கும் உயர் நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதால் உடனடியாக நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலமுள்ள தரப்புக்கு அரசை அமைக்க அவர் நடவடிக்கையெடுக்க வேண்டும்.**

இவ்வாறுமக்கள்விடுதலைமுன்னணி அரச தலைவருக்கு பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ளமக்கள்விடுதலைமுன்னணியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோது அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் வேண்டுமென்றே இந்த ஒருமாதகாலத்தில்அரசமைப்பைமீறிச் செயற்பட்ட சந்தர்ப்பங்களை நாட்டு மக்களுக்குவெளிப்படுத்தசிறப்புஆணைக் குழுவொன்றை அமைக்கவும், நிறைவேற்று அதிகாரத்தைஒழிக்கவும்அடுத்தடுத்து இரண்டு சட்டங்களை நாடாளுமன்றில் கொண்டுவரவுள்ளோம்.

வரலாற்றுசிறப்புமிக்கதீர்ப்பைமேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று (நேற்று) வழங்கியுள்ளது. அரசமைப்புக்குகட்டுப்படாது அரசமைப்பையும், சட்டத்திட்டங்களையும் மீறி அரசதலைவர் ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயற்பட்டமைக்கும்எதிராகதீர்க்கமானதீர்ப்புகள் தொடர்ந்து வெளியாகிக்கொண்டுள்ளன.

நாடாளுமன்றில் மகிந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் கடந்த 15ஆம் திகதி சபாநாயகர் கருஜயசூரிய அரச தலைவருக்கு அனுப்பியிருந்த கடிதத்தையடுத்து அவர் புதிய அரசை அமைத்திருக்க வேண்டும். ஆனால் அதைச் செய்யாது அரசமைப்பைத் தொடர்ந்து மீறிச் செயற்பட்டுக்கொண்டிருந்தார். அதற்கு எதிராக நேற்று மீண்டும் மேல்நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை அளித்துள்ளது. அதைக்கருத்திற்குகொண்டுநாடாளுமன்றில் பெரும்பான்மை பலமுள்ள தரப்புக்கு அரசை அமைக்கும் சந்தர்ப்பத்தை அவர் உடன் ஏற்படுத்த வேண்டும்.

இதேவேளை, அரச தலைவர் கடந்த ஒருமாதகாலமாக வேண்டுமென்றே அரசமைப்பை மீறியமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டுஅதனை நாட்டுக்குஅம்பலப்படுத்த சிறப்பு ஆணைக்குழுவொன்றைநாடாளுமன்றில்அமைக்க வேண்டும். அதற்கானசட்டத்தை நாங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளோம் என்பதுடன், அதனைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கான சட்டத்தையும் சபையில் சமர்ப்பிப்போம் - என்றார். (ந-10)

## இலங்கை நிலவரம் தொடர்பில் இந்தியக் குழுவுக்கு விளக்கம்

கொழும்பு, டிசெ. 4

இந்தியஇலங்கைஉறவுகள் குறித்தும், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பாகவும், இந்தியநாடாளுமன்றத்தின் அயலுறவுத்துறை நிலையியல் குழுவுக்கு, இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் மூத்த அதிகாரிகள்விளக்கமளிக்கவுள்ளனர்.

சசிதாரூர்தலைமையிலான இந்தியநாடாளுமன்றத்தின் அயலுறவுத்துறை நிலையியல் குழுவுக்கு, இந்திய அயலுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகள் எதிர்வரும் 14ஆம் திகதி விளக்கமளிக்கவுள்ளனர் என்று, இந்திய நாடாளுமன்ற செயலகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையியல் குழுவில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் அங்கம் வகிக்கிறார். இந்தக் குழுவின் முன்பாக, இந்திய அயலுறவுத்துறைச் செயலர் விஜய் கோக்ஹலே தலைமையிலான மூத்த அதிகாரிகள் முன்னிலையாகி விளக்கமளிக்கவுள்ளனர்.

பாதுகாப்பு நோக்கில் இலங்கையின் உறுதித்தன்மை இந்தியாவின் நலனுக்கு முக்கியமானதுஎன்றவகையில்,நிலையியல்குழுஉறுப்பினர்கள், இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக, நிச்சயம் கேள்வி எழுப்புவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் விரிவடைந்திருப்பது, அது உள்நாட்டு அரசியலில் ஏற்படுத்தியுள்ள தாக்கம், ஆகியன குறித்தும், அறிந்து கொள்ள நிலையியல் குழு அக்கறை கொண்டுள்ளதாகமற்றொருதகவல் தெரிவிக்கின்றது.

இலங்கையில் சீனாவின் தலையீடுகள் குறித்து இந்தியா கவலையடைந்துள்ள நிலையில், அதனைக் கையாளுவதற்கான வழிமுறைகள் குறித்து நிலையியல் குழு, கேள்விகளை எழுப்பும்என்றும்எதிர்பார்க்கப்படுகிறது. (5)

## சண்டித்தனமாகவும்பலவந்தமாகவும் நீதியை நிலைநாட்ட முடியாது

### அஜித் பி. பெரேரா எம்.பி தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.4

சண்டித்தனமாகவும் பலவந்தமாகவும் நீதியை நடைமுறைப்படுத்த முடியாது. மகிந்த ராஜபக்ச மற்றும்அவரதுஅமைச்சரவையும்சட்டவிரோதமானது என நிரூபித்து அதற்கான தடையுத்தரவைப் பிறப்பித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதியின் அதிகாரத்தை நிரூபித்துள்ளது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

நிறம் மற்றும் பெயர் அடிப்படையில் தலைமை அமைச்சரைத்தெரிவுசெய்யும்அதிகாரம்அரசதலைவருக்குக் கிடையாது. ஆகவே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுள்ளவரே தலைமை அமைச்சராகத்தெரிவுசெய்யப்படுவார்என்னும் அவர் தெரிவித்தார்.

அரசலைவரால் நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் மற்றும் அவர்களின் அமைச்சரவையை நீக்கக் கோரிநாடாளுமன்ற உறுப்பினர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அஜித் பி.பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவரே தலைமை அமைச்சராகத் தெரிவுசெய்யப்படுவார். அதற்குமாறாகதலைமைஅமைச்சர் நிறஅடிப்படையிலோ பெயர் அடிப்படையிலோ தெரிவுசெய்யும் உரிமைஅரச தலைவருக்குக் கிடையாது. அவ்வாறே 19ஆவது சீர்த்திருத்தம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் அரசமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கும் நாட்டின் நீதிக்கும் மதிப்பளிப்பது அவசியமாகும். சண்டித்தனமாகவும் பலவந்தமாகவும் நீதியை நடைமுறைப்படுத்த முடியாது என்பதை நீதிமன்றம் இன்று நிரூபித்துள்ளது - என்றார். (21)

## அடாவடியில் ஈடுபட்ட இருவருக்கு தலா 6 மாதங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம்.டிசெ.4

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியிலுள்ள இரும்பகம் ஒன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட இருவருக்கு தலா 6 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் சந்தியில் உள்ள இரும்பகம் (ஹாட் வெயார்) ஒன்றின் மீது கடந்த மார்ச் 9ஆம் திகதி பிற்பகல் கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியிருந்தது. தாக்குதலையடுத்து 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மேலும் பொலிஸாரால் தேடப்பட்டவர்களில் ஒருவர், சட்டத்தரணி ஊடாக மன்றில் முற்பட்டார். பின்னர் 4 பேர் கைது செய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டதுடன், மேலும் ஒருவரை அடையாளம் காணமுடியவில்லை என்று நீதிம ன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் சந்தியில் நண்பன் செந்தூரனின் பிறந்த நாளைக் கேக் வெட்டிக் கொண்டாடிய போது ஏற்பட்ட தகராறை அடுத்தே ஹாட்வெயார் மீது தாக்குதல் நடத்தினோம் என சந்தேக நபர்கள் தெரிவித்தாக பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்தனர். சில மாதங்களின் பின்னர் சந்தேகநபர்கள் அனைவருக்கும் பிணை வழங்கப்பட்டது. இந்த நிலையில் 9 பேருக்கும் எதிராக பொலிஸார் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தனர்.

எனினும் 9 சந்தேகநபர்களில் 4 பேர் மட்டும் நேற்று நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்களுக்கு குற்றப்பத்திரிகை வாசித்துக் காண்பிக்கப்பட்டது. சந்தேக நபர்கள் இருவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதுடன் ஏனைய இருவர் குற்றச்சாட்டை நிராகரித்து நிரபராதிகள் என்று மன்றுரைத்தனர்.

குற்றத்தை ஏற்றுக்கொண்ட இருவருக்கும் தலா 6 மாதங்கள் சிறைத்தண்டனையும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து நீதிவான் தண்டனைத் தீர்ப்பளித்தார்.

ஏனைய 7 சந்தேகநபர்களில் ஒருவரை விடுவிக்க அனுமதியளித்த நீதிவான் மிகுதி ஆறு பேரின் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

மேலும் மன்றில் நேற்று முன்னிலையாகத் தவறியோருக்கு திறந்த பிடியாணை உத்தரவை வழங்கிய நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், அவர்களை உடனடியாகக் கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு பொலிஸாரை

## மீண்டும் பதவியேற்கும் ரணில் அரசதலைவராக வரவேண்டும்

### சஜித்தின் விருப்பம் இது

கொழும்பு, டிசெ. 4



ஐக்கியதேசியக்கட்சிமீண்டும்ஆட்சிப்பீடம்ஏறியதும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் தலைமை அமைச்சராகப் பதவியேற்பார். இது எங்களின்ஏகமனதானதீர்மானமாகும். அதேவேளை, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலிலும் ரணிலே வேட்பாளராகக் களமிறங்கி வெற்றிவாகை சூட வேண்டும். இதுஎனதுதனிப்பட்ட விருப்பமாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறும் தலைமை அமைச்சராகப் பதவியேற்குமாறும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்குமாறும் பலர் எனக்கு அழுத்தம் கொடுத்தமை உண்மைதான். ஏன் இப்போதும்அந்தஅழுத்தங்கள் தொடர்கின்றன. எனினும், நான் தற்போது கட்சியின் தலைமைப்பொறுப்பையோ அல்லது தலைமை அமைச்சர், அரச தலைவர் பதவிகளையோ ஏற்பதற்குத் தயாரில்லை.

மைத்திரி - மகிந்த கூட்டணியின் அரசியல் சதி நடவடிக்கைக்கு எதிராக நாட்டு மக்களின் நலன் கருதி எம்மை அரவணைத்து ஜனநாயக வழியில் ஓயாமல் போராடி வரும் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் தலைமை அமைச்சராகப் பதவியேற்பார். இது ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகமனதான தீர்மானமாகும். அதே வேளை, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலிலும் ரணிலே வேட்பாளராகக் களமிறங்கி வெற்றிவாகை சூட வேண்டும். இது எனது தனிப்பட்ட விருப்பமாகும் - என்றார். (5)

# தலைமைஅமைச்சராகரணிலேநியமிக்கப்படுவார்

## ஐ.தே.முவினர் ஏகோபித்து முடிவு

கொழும்பு, டிசெ.4

ஐக்கியதேசியக்கட்சியின்தலைவர் ரணில்விக்ரமசிங்கவைதலைமை அமைச்சராக நியமிக்க ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஏக மனதாகத் தீர்மானித்துள்ளனர்.

அலரி மாளிகையில் நேற்று திங்கட்கிழமை ஐக்கிய தேசிய முன்னணி சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போதே இந்த இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் தலைமை அமைச்சராக ரணில் விக்ரமசிங்கவைத்தவிர வேறுஎவரையும் தெரிவு செய்யப்போவதில்லையென்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிருப்பினைவெளியிட்டாலும் வெளியிடாவிட்டாலும் பெரும்பான்மையைப் பெற்ற கட்சியின் தலைவரே தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்படுவார் என்றும் இந்த விடயமே அரச தலைவர் மைத்திரபாலசிறிசேனவுக்கும்அறிவிக்கப்படும் எனவும் இதன் போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (21)

# மட்டக்களப்பில் பொலிஸார் கொலை: இதுவரையில் 20 பேரிடம் விசாரணை

மட்டக்களப்பு, டிசெ.4

மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேசத்தில் பொலிஸார் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, இதுவரை பெண்கள், முன்னாள் போராளிகள் உட்பட 20 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

இருவரைதடுத்துவைத்துவிசாரணை செய்து வருவதுடன், பலகோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுணதீவுவலையிறவுப்பாலம்அருகில்பொலிஸ்வீதிச்சோதனைச்சாவடியில் கடமையில் இருந்த பொலிஸார் இருவர்கடந்தவியாழக்கிழமைநள்ளிரவு இனந் தெரியாதோரால் துப்பாக்கியால் சுட்டும், கத்தியால் குத்தியும் கொலைசெய்யப்பட்டனர்.

இதற்க்கானவிசாரணைக்காகசிறப்பு புலனாய்வு பிரிவு 7 பேர் கொண்ட குழுவை கொழும்பில் நியமித்துள்ளது. இவர்கள் பொலிஸாருடன் இணைந்து விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் 'தேசத்தின் வேர்கள்' அமைப்பின் தலைர் க.பிரபாகரன், அதன் உறுப்பினர், மறுவாழ்வளிக்கப்பட்ட போராளிகள், கட்சி உறுப்பினர் உட்பட முன்னாள் போராளிகள் மற்றும் பெண்கள் என 20 பேரை மட்டக்களப்பு பிராந்திய சி.ஐ.டி காரியாலயத்தில் வைத்து வாக்குமூலம்பெற்றபின்னர்விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் வைத்து கைது செய்யப்பட்ட இராசநாயகம் சர்வானந்தம் அங்கிருந்துமட்டக்களப்புக்குகொண்டு செல்லப்பட்டதுடன், அவருடன்மட்டக்களப்பு தாண்டியடி பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் உட்பட இருவரையும் தடுத்துவைத்து விசாரணை இடம்பெற்று வருகிறது.

சம்பவத்தில் உயிரிழந்த கல்முனை நீலாவணைப்பிரதேசத்தைச்சேர்ந்த கணேஸ்தினேஸ்என்றபொலிஸ்அதிகாரிமீது 6 கத்திக்குத்துக்களும் தலையில் ரி56ரகதுப்பாக்கியால்சுடப்பட்ட அடையாளமும்இருந்ததோடு,கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தது. காலியைச் சேர்ந்த பிரசன்ன மீது 21 கத்திகுத்தும்தலையில்துப்பாக்கியால்சுடப்பட்டுள்ளகாயமும்உடற்கூற்றுபரிசோதனையில்தெரியவந்துள்ளது.

பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட பகுதியிலுள்ள களப்பில் கடற்படை சுழியோடிகள் அழைக்கப்பட்டு, தேடுதல் நடத்தப்பட்டுள்ளதுடன், நேற்று வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பல பிரதேசங்களில் தீவிர தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

தடயங்களைத் தேடும் நடவடிக்கையில்,பலகோணங்களில்புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் அச்சத்துடன் இருப்பதுடன், மாலை6மணியுடன்வீடுகளில்முடங்கி விடுகின்றனர்.




## நாடாளுமன்ற ஜனநாயகத்தை நீதிமன்றம் காப்பாற்றியுள்ளது

*நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்னாயக்க தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.4



சட்டவிரோத அரசிலிருந்து நாடாளுமன்றஜனநாயகத்தை மேல்முறையீட்டு நீதிமன்றம் காப்பாற்றியுள்ளதாக நாடாளுமன்றஉறுப்பினர்சாகலரட்னாயக்க தெரிவித்துள்ளார்.

தனதுஉத்தியோகப்பூர்வகீச்சகப் பதிவில் இந்த விடயத்தை சாகல பதிவிட்டுள்ளார். "போலித் தலைமை அமைச்சரும் ,அவருடைய போலி அரசும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற ஜனநாயகத்தைச் சட்டவிரோத அரசிலிருந்து மேல்முறையீட்டு நீதிமன்றம் பாதுகாத்திருக்கிறது." என பதிவிட்டுள்ளார்.

## மாற்றுத்திறனாளிகளால் விழிப்புணர்வு நடவடிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 4

பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் நாளான நேற்று முல்லைத்தீவில் மாற்றுத்திறனாளிகள் கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் மாற்றுத்திறனாளிகளுக்கான செயலணிப் பணியாளர்கள் இணைந்தே இந்த கவனவீர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, முல்லைத்தீவு நகர் உள்ளிட்ட இடங்களில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அலுவலகங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

பிரதேசங்களில் உள்ள அரச மற்றும் தனியார் அலுவலகங்களில்மாற்றுத்திறனாளிகளைஅணுகும்வசதிகள்உண்டா என்பதை கேட்டறிந்ததுடன். இல்லாத நிலையில் அவற்றை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என் றும் தெரிவித்துள்ளனர். (ரி3)

# வித்தியா படுகொலை வழக்கின் முதலாவது சந்தேகநபர் விடுதலை

யாழ்ப்பாணம்.டிசெ.4

புங்குடுதீவுமாணவிவித்தியாபடுகொலைவழக்கில்நிரபராதியாகத் தீர்பளிக்கப்பட்டு பூபாலசிங்கம் இந்திரகுமார் என்பவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 14 மாதங்களின் பின்னர் அந்த வழக்கிலிருந்தும் பூபாலசிங்கம்இந்திரகுமார்விடுவிக்கப்பட்டார். அத்துடன், அவர் சுமார் 3 ஆண்டுகள் 6 மாதங்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவுமாணவிவித்தியாகொலைவழக்கின்முதலாவதுசந்தேகநபரானபூபாலசிங்கம்இந்திரகுமார்நிரபராதி என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற விசேட நீதாய விளக்கம், கடந்த ஆண்டுசெப்ரெம்பர் 27ஆம்திகதிதீர்ப்பளித்து விடுவித்தது.

எனினும் மாணவி வித்தியா படுகொலை வழக்கின் சாட்சியான பொலிஸ் உத்தியோகத்தர் கோபி என்பவருக்கு ஊர்காவற்றுறைநீதிமன்றவளாகத்தில்வைத்துகொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டு பூபாலசிங்கம் இந்திரகுமார் மீது பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது. அந்த வழக்கு கடந்த 14 மாதங்களாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தது.

மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மேல் நீதிமன்ற தீர்ப்பாயத்தில் முன்வைக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் பொலிஸ் அலுவலர் கோபி சாட்சியாக இல்லை என ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனால் பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிரான வழக்கை மீளப் பெற்று அவரை விடுவிப்பது தொடர்பான ஆலோசனையை சட்ட மா அதிபரிடம் கோரி, ஊர்காவற்றுறை பொலிஸார் அறிக்கையை அனுப்பிவைத்தனர். எனினும்சட்டமாஅதிபர்திணைக்களத்தின்முடிவுவருவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில்பூபாலசிங்கம் இந்திரகுமார் சார்பில் அவரது மனைவி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

வறுமை காரணமாக மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம்செய்யசட்டத்தரணிஒருவரைநியமிக்கமுடியாத நிலையில் இந்திரகுமாரின் குடும்பம் அவதியுற்றது. எனினும்இளம்சட்டத்தரணிசிவலிங்கம்ரிஷிகேசன் இலவசமாக முன்னிலையாகி இந்திரகுமாருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பத்தை தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி சி.ரிஷிகேசனுடன் சட்டத்தரணி வி.திருக்குமரனும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்னிலையாகி இந்திரகுமார் சார்பான பிணை மனுவுக்கு மன்றில் விண்ணப்பம் செய்திருந்தனர்.

சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், எதிர் மனுதாரரான சட்ட மா அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. சட்ட மா அதிபர் திணைக்கள அரச சட்டவாளர் மன்றில் முன்னிலையானார். பூபாலசிங்கம் இந்திரகுமாருக்கு எதிரான வழக்கை மீளப்பெறுவதாக மன்றில் விண்ணப்பம் செய்தார். அதனால் அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பூபாலசிங்கம் இந்திரகுமார் நேற்று விடுவிக்கப்பட்டார்.

மாணவி வித்தியா, 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதிபுங்குடுதீவில்கும்பல்ஒன்றால்கடத்திச்செல்லப்பட்டு படுகொலைசெய்யப்பட்டார். அந்தக்கொலையுடன்தொடர்புடையவர்என்றகுற்றச்சாட்டில்2015ஆம்ஆண்டுமே16 ஆம் திகதி பூபாலசிங்கம் இந்திரகுமார் முதலாவது சந்தேகநபராகக்கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டகாலபகுதியில் இருந்து இன்று வரையில் சுமார் 3 ஆண்டுகள் 6 மாதங்கள் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (37)

# தற்போதைய அரசியல் குழப்பம் நாட்டுமக்களுக்கே பெரும்பாதிப்பு

கொழும்பு, டிசெ. 4

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களினால் நாட்டு மக்களுக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"தற்போது நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை எமக்கே உண்டு என்பதனை நாடாளுமன்றத்தில் நிரூபித்துள்ளோம்.

இந்த நிலையில், மீண்டும் நாட்டை அசாசாதாரண நிலைக்குக் கொண்டு செல்லும் பொறுப்பு அரச தலைவரிடமே உள்ளது. மக்களுக்கான நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, நாட்டின் எதிர்காலத்திற்காக விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கின்றோம். தற்போதுநாட்டின்பொருளாதாரம்நூற்றுக்கு50சதவீதத்தால் மிகவும் மோசாமாக வீழ்ச்சியடைந்துள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பட்டதாரிகளின் போராட்டத்தில் கண்ணீர்புகைக் குண்டுத் தாக்குதல்

கொழும்பு,டிசெ.4

கொழும்பில் வேலையில்லா பட்டதாரிகள்நடத்தியபோராட்டத்தில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டுத்தாக்குதல்நடத்தியதால்பெரும்பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று வேலையில்லாப் பட்டதாரிகளால் போராட்டம் ஒன்றுமுன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு கோட்டையிலிருந்து அரச தலைவர் செயலகத்துக்கு பேரணியாக செல்வதற்கு முற்பட்டுள்ளனர்.

பேரணியாகசெல்லும்முயற்சியில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை, பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்ட வேளையில் இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்துஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸார் கண்ணீர்ப்புகைதாக்குதல்நடத்தியுள்ளனர்.

# பதவி ஆசையால் மகிந்த மீதான வழக்குகளை பிற்போடும் மைத்திரி

## கூறுகின்றார் நலிந்த ஜயதிஸ்ஸ எம்.பி

கொழும்பு, டிசெ. 4

மகிந்ததரப்பினருடன் இணைந்து மீண்டும் அரசதலைவராகப் பதவியேற்பதற்காகவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவர் மீதான அனைத்து வழக்குகளையும் பிற்போடுவதற்கு உதவியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, தானே இறுதியான நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் எனக் கூறினார். ஆனால், அதனை இல்லாதொழிக்க அவர் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை.

தற்போதைய அரச தரப்பினருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்கும் நோக்கமில்லை. மைத்திரிக்கு அடுத்த அரச தலைவர் தேர்தலிலும் போட்டியிட ஆசை வந்துவிட்டது.

அந்த வகையில் ஐக்கிய தேசியக் கட்சி பொது வேட்பாளரை களமிறக்கப்போவதில்லை என்று அறிவித்தவுடன், தற்போதுமகிந்ததரப்பினருடன்இணைந்து கொண்டுள்ளார். அவருக்கு அதிகாரத்துக்குவரவேண்டும்என்றஆசைத்தான் இத்தனைப் பிரச்சினைகளுக்கும் காரணம்.

மகிந்தவுக்கு எதிரான அனைத்து வழக்குகளும் பிற்போடப்பட்டுள்ளன. இவையனைத்தும் 2015 ஆம் ஆண்டு மக்களின் ஆணையை மீறும் ஒரு செயற்பாடாகும். இதேவேளை அனைவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறுபெரியளவில்அரசியல்சூழ்ச்சியில்ஈடுபட்டவர்களை, மக்களின்பலத்துடன் தோற்கடித்து நாடாளுமன்றத்தை அரசமைப்புக்கு இணங்க கலைக்க வேண்டும்." என்றார். (ஐ)

# கொழும்பு தாமரைக் கோபுரம் இந்த மாதம் திறப்பு



கொழும்பு, டிசெ.4

ஆசியாவின் உயர்ந்த கட்டடம் என அழைக்கப்படும் கொழும்பு தாமரைக் கோபுரம் இம்மாதம் 25ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் திறந்துக்கப்படவுள்ளது.

சீனவங்கியானஎக்சிம்வங்கியின்சுமார்100மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியில் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்தகோபுரத்தின்உயரம் 356 மீற்றர் ஆகும்.

இலங்கையின் அடையாளமாக அமையப்போகும் தாமரை கோபுரத்தின் கட்டுமானப் பணிகளுக்குச் செலவிட்ட பணத்தை 14 வருடங்களில் ஈடுசெய்ய முடியும் என இத்திட்டத்தைத் தயாரித்த பேராசிரியர் சமிந்த மாணவாடு நம்பிக்கை வெளியிட்டுள்ளார். 14 வருடங்களின் பின்னர் ஈட்டப்படும் வருமானம் நாட்டுக்கு இலாபமாக அமையும்.

இந்தஅடையாளச்சின்னமானது பகல் வேளைகளில் மாத்திரமன்றிஇரவுவேளைகளிலும் தெளிவாகத் தெரியும் வகையில் அணைந்து அணைந்து எரியக்கூடிய மின்விளக்குஅலங்காரங்களையும் கொண்டதாக அமையவுள்ளது. (ஐ)

# டி.எம்.பி.பீ. தசநாயக்கவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினார் அரச தலைவர்

கொழும்பு, டிசெ. 4

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிகதசநாயக்கவின்தந்தையான காலஞ்சென்ற டி.எம்.பி.பீ. தசநாயக்கவின் பூதவுடலுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று இறுதி மரியாதை செலுத்தினார்.

பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பொரளை தனியார் மலர்சாலைக்கு சென்ற அரச தலைவர், மறைந்த டி.எம்.பி.பீ. தசநாயக்கவின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், தம்மிக தசநாயக்க உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்தார். (ஐ)





# புதிய தூதுவர்கள் நால்வர் நியமனம்

கொழும்பு, டிசெ. 4

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளநான்குதூதுவர்கள் நேற்று அரச தலைவர் மாளிகையில் வைத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நற்சான்று பத்திரங்களை கையளித்தனர்.

குரோஷியா, கானா, கொங்கோ மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் தூதுவர்களேஇவ்வாறுநியமிக்கப்பட்டுள்ளனர்.

குரோஷியாநாட்டிற்கு பெடட் லூபியிக், கானாவிற்கு மைக்கேல் நில் நாட்டே ஒக்கேய், கொங்கோவிற்கு ஆண்ட்ரே போஹ், இத்தாலிக்குதிருமதி ரீட்டா கியுலியானா மன்னெல்லா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)




# தலைமை அமைச்சராக ரணிலை நியமிக்க வேண்டும்

*ரிசாட் எம்.பி*

கொழும்பு, டிசெ. 4

ரணில் விக்ரமசிங்கவை உடனடியாக தலைமை அமைச்சராக நியமிக்க அரசதலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்றின் தீர்ப்பிற்கு மதிப்பளித்து 122 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து அரச தலைவர் ரணில் விக்ரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். அத்துடன் இதற்கு முன்னதாக பதவி வகித்த அமைச்சரவையை அவ்வாறே பதவியில் அமர்த்த வேண்டு - என்றார். (ஐ)

# திலங்க சுமதிபாலவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 4

திலங்க சுமதிபாலவிற்கு எதிரான வழக்கை ஜனவரி மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைக்குமாறு மேன்முறையீட்டுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டுநீதிமன்ற தலைமை நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் முன்னிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதேமேற்படிஉத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துடுப்பாட்டநிறுவனத்தின் தலைவர் பதவிக்கு திலங்கசுமதிபாலபோட்டியிடுவதற்காக வழங்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலைநிராகரிக்க உத்தரவொன்றைபிறப்பிக்குமாறு நிஷாந்த ரணதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும் நேற்றைய தினம் வேறுபலவழக்குகள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால்இந்தவழக்கை ஒத்தி வைக்குமாறு மேன்முறையீட்டுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# பன்னாட்டு லயன் கழக வலையமைப்பின் தலைவி இலங்கை வருகை



கொழும்பு, டிசெ. 4

இலங்கைக்கு வருகை தந்துள்ள 206 உலகநாடுகளில்சுமார்14லட்சம்உறுப்பினர்களைக்கொண்டுள்ளபன்னாட்டு லயன்கழகவலையமைப்பின்தலைவி திருமதி. குட்ருன் யெங்வோடோடிர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று அரசதலைவர் அலுவலகத்தில் வைத்து சந்தித்தார்.

குட்ருன்யெங்வோடோடிர் அம்மையாரின்இலங்கைபயணத்தைமுன்னிட்டு நினைவு முத்திரையொன்றும் இதன் போதுவெளியிடப்பட்டது. (ஐ)

## நாட்டின் உறுதியற்ற அரசியல் நிலமைக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பு நல்வழியைக் காட்டும்

*சீ.பி.ரத்நாயக்க தெரிவிப்பு*



கொழும்பு, டிசெ.4
நாட்டில் ஏற்பட்டுள்ள உறுதியற்ற அரசியல் நிலமைக்கு எதிர்வரும் 7ஆம் திகதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நல்ல வழியை காட்டும் என்பதில் எமக்கு நம்பிக்கையுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

கொத்மலை தவலந்தென்ன பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிமன்ற தீர்ப்புக்கு அப்பால் சிறந்த அரசு ஒன்றை உருவாக்க தேர்தல் ஒன்றின் ஊடாக மக்கள் நல்ல தீர்ப்பினை வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்து ஆட்சியினை கொண்டு செலுத்திய கடந்த அரசில் பல்வேறு அபிவிருத்திகள் செய்யப்பட்டன.

நமது நாட்டு மக்களுக்கே சொந்தமான துறைமுகம், வானூர்தி நிலையம், அதிவேக வீதிகள், எண்ணெய் தாங்கிகள் என அபிவிருத்தி செய்யப்பட்ட வளங்களை அதில் குறைபாடு ,இதில் குறைப்பாடு என குறை கூறிக்கொண்டு வெளிநாடுகளுக்கு தாரைவார்த்து கொடுக்க தனவாத அரசியலை கொண்டு செலுத்தும் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து இந்த வளங்களையும் நாட்டு மக்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்கவே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிந்தவுக்கு தலைமை அமைச்சர் பதவியை வழங் கினார்.

இதனை எதிர்த்தும் நாடாளுமன்றத்தை அரச தலைவர் கலைத்தமையை எதிர்த்தும் உயர் நீதிமன்றம் சென்றனர்.

இதற்கு காரணம் ரணிலுக்கு நாடுபற்றிய கவலையில்லை மாறாக பதவியே தேவை என்பது தான்.

எதிர்வரும் 7ஆம் திகதி வரை தற்காலிக தடை விதித்துள்ள நீதிமன்றம் நாட்டின் எதிர்காலத்தை கருதி நல்ல தீர்பை வழங்கும் என்ற நம்பிக்கையுள்ளது.

ஆனால் நீதிமன்ற தீர்ப்பு புதிய அரசுக்கு சாதகமாக அமையும் பட்சத்தில் முறையற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரை மேற்கொண்டமைக்கு சபாநாயகர் நாடாளுமன்றத்தின் செலவீனாங்களுக்கு பொறுப்புக் கூறவேண்டும்-என்றார். (ஐ)

## அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் வெகு விரைவில் கிடைக்கும்

*ஹரின் பெர்னாண்டோ எம்.பி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 4
நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றம் வெகு விரைவில் கிடைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். ஐ.தே.க தலைமையில் முன்னெடுக்கப்பட்ட நீதிக்கான பாத யாத்திரை பயணத்தினூடாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் பேரணி ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டங்களையும் சவால்களையும் வெற்றி கொள்வதனூடாகவே வெற்றியினை அடைய முடியும்.

வெற்றியின் பயணத்தில் போராட்டங்களைக் கண்டு அஞ்சாததாலேயே மக்கள் அனைவரும் நீதியின் பயணத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்சவும் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## நாட்டை மீட்டெடுக்க தேர்தல்தான் ஒரே வழி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 4
நாட்டை தற்போதைய நிலமையில் இருந்து மீட்டெடுக்க ஒரேவழி பொதுத்தேர்தலை நடத்துவதே. இதனால் ஆட்சி அதிகாரம் எவரிடம் இருக்க வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்கட்டும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களும் தற்போது தேர்தல் ஒன்றையே எதிர்பார்த்துள்ளனர். எனவே நாட்டின் தற்போதைய நிலைமையை சரி செய்யும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

நாடாளுமன்றில் யார் இருக்க வேண்டும் என்பதையும் அவர்களே தீர்மானிக்கட்டும் - என்றார். (ஐ)

# கட்சிகளின் தேவைக்கு ஏற்ப சட்டங்களை மாற்றமுடியாது

*கூறுகின்றார் ராஜித சேனாரத்ன*



கொழும்பு, டிசெ. 4
அரசியல் கட்சிகள் நாட்டின் அரசியல் திட்டங்களுக்கு ஏற்றவாறே செயற்பட வேண்டுமே தவிர கட்சிகளின் தேவைகளுக்கேற்ப சட்டங்களை மாற்ற முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிகாலத்தில் ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் சட்ட திட்டங்களுக்கு முரணான வகையிலும் செயற்பாடுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை ஆனால் தற்போது கட்சிகளின் தேவைகளுக்காக இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்த அரசியல் திட்டங்களை மாற்றியமைக்கும் செயற்பாட்டை இப்போதுள்ள அரசு மேற்கொள்ள முனைகின்றது - என்றார். (ஐ)

## மைத்திரி, மகிந்த ஆட்சியை கைப்பற்றி அவர்களுக்கு நீதியான ஆட்சியை கற்பிப்போம்

கொழும்பு, டிசெ. 4
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆகியோரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி, நீதியான முறையில் எவ்வாறு ஆட்சி நடத்துவது என்பது தொடர்பில் அவர்களுக்கு கற்பிப்போம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரச தலைவராக மீண்டும் வருவதற்கு ஆசைப்படும் மைத்திரியின் கனவையும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, தன்மீதுள்ள குற்றங்களிலிருந்து தப்பிக்க முனையும் எதிர்ப்பார்ப்புக்களையும் தோல்வியடைய செய்ய வேண்டும்.

அரச தலைவர் நாட்டின் ஜனநாயகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சட்டத்துக்கு புறம்பாக செயற்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியிலிருந்து நீக்கி பெரும் துரோகத்தினை இழைத்துவிட்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனக் கூறிய மைத்திரி, அந்தப்பதவி ஆசைக்காக சிந்திக்காமல் செயற்படுகின்றார். இதனால் மக்களும் அரசின் மீது நம்பிக்கை யற்றவர்களாக மாறிவிட்டார்கள்.

ஆகையால் நாட்டின் எதிர்காலத்தை சிறந்த முறையில் அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவை அரச தலைவராக மக்கள் நிச்சயம் தெரிவுசெய்வார்கள்.

அந்தவகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்புக்களையும் அவரிடம் வழங்குவதற்கு தற்போது தீர்மானித்துள்ளோம்" - என்றார். (ஐ)

## தமிழ் மக்கள் மகிந்தவின் ஆட்சியை விரும்பவில்லை

*கூறுகின்றார் சாந்தி எம்.பி.*



கொழும்பு, டிசெ. 4
போர்க்காலத்தில் தமிழ் இனத்தை அழித்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவை, தமிழ் மக்கள் எவ்வாறு ஆதரிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்காந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தற்போதைய சூழ்நிலையில் சிறுபான்மையினரின் ஆதரவு அரசுக்கு மிகவும் தேவை. இதனால் பலகோடி ரூபா வழங்குவதாக விலை பேசி, ஆசை வார்த்தைகளை கூறி சிறுபான்மையினரை ஏமாற்ற முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் எமது இனத்தை அழித்து, அந்தத்துயரத்தில் வெற்றியைக் கொண்டாடிய மகிந்த ராஜபக்ச, தமிழ் மக்களிடம் கையேந்தும் நிலைமை தற்போது உருவாகியுள்ளமையை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தகைய ஒருவருக்கு ஆதரவை வழங்குவதற்கு தமிழ் மக்களால் முடியுமா?

இதேவேளை தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அவர்களது சொத்துக்களை பறித்தல் மற்றும் மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளை அழைத்து விசாரணைகளை நடத்துவது இன்னும் பெரும்பான்மையினரால் அரங்கேற்றப்பட்டே வருகின்றது.

தமிழ் மக்கள் மகிந்தவின் ஆட்சியை விரும்பவில்லை. இதனால் அந்த மக்களின் குரல்களுக்கு ஏற்றவாறே எமது செயற்பாடுகளும் அமையும் - என்றார். (ஐ)

## சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு கட்சிகளுக்கு அழைப்பில்லை

கொழும்பு, டிசெ. 4
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிறப்பு மாநாட்டுக்கு, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கோ அல்லது வேறு கட்சிக்கோ அழைப்பு விடுக்கப்படவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிறப்பு மாநாடு இன்று கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் போது, தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சிறப்புக் கருத்தை வெளியிடுவார் என மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நான் அரசியலுக்கு வரமாட்டேன்

*கூறுகின்றார் நாமல் குமார*

கொழும்பு, டிசெ.4
நான் அரசியலுக்கு வருவதை சில அரசியல்வாதிகள் விரும்பவில்லை இதனால்தான் அரசியலுக்கு வரவிருந்த தீர்மானத்தை மாற்றிக்கொண்டுள்ளேன் என்று ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாமல் குமார தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ந்தும் ஊழல், மோசடி தொடர்பான விடயங்களை அம்பலப்படுத்தி நாட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் பிரிதிநிதிகளுக்கு மேலாக நாட்டிற்கு சேவை செய்வேன். இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக கூட்டங்கள் மற்றும் மாநாடுகள் நடத்தவுள்ளேன். இதன் முதற் கட்டமாக எதிர்வரும் 5ஆம் திகதி அம்பாறை மஹஓய நகரில் கூட்டம் இடம்பெறவுள்ளது- என்றார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக நாமல் குமாரவால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதன் விளைவே நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டதுடன், இன்றுவரை நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கும் காரணமாக அமைந்துள்ளது. (ஐ)

### கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தால்

# படகுகளைப் பதிவு செய்யும் பணிகள் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

**கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் இதுவரை பதிவுசெய்யப்படாத படகுகளைப் பதிவுசெய்யும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்தது.**

நெடுந்தீவு, ஆழியவளை, வேலணை, ஊர்காவற்றுறை பிரதேசங்களில் இதுவரைக்கும் பதிவு செய்யப்படாத 300க்கும் மேற்பட்ட படகுகள் அண்மையில் பதிவுசெய்யப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இதுவரை 700க்கும் மேற்பட்ட படகுகள் பதிவுசெய்யப்படாமல்உள்ளன. அவ்வாறுபதிவுசெய்யப்படாமல்உள்ளபடகுகளைப்பதிவுசெய்யும்நடவடிக்கைகள்விரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளன. கொழும்பில்இருந்துகடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தைச் சேர்ந்தோர் இந்தப் பதிவு நடவடிக்கைகளுக்காக விரைவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். இந்தஆண்டுக்குள்இந்தப்பதிவுநடவடிக்கைகள் முழுமை பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)



## மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம், டிசெ. 4

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப வித்தியாலயத்தில் இருந்து தோற்றி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு பாடசாலையின் முதன்மைமண்டபத்தில்அதிபர்திருமதிபு.மங்களேஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயநிர்வாகப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் த.கிருபாகரனும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகன், மக்கள் வங்கி உதவி முகாமையாளர்சரணன், கொடிகாமம்திருநாவுக்கரசுமகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் த.கந்தையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

லண்டனில் வசிக்கும் பழைய மாணவர் சுப்பிரமணியம் சபேசன் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்ற 9 மாணவர்களுக்கு ஈருருளிகளைஅன்பளிப்பாகவழங்கினார், மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. (ம-159)


## விபத்துகளில் 4 பேர் காயம்

சாவகச்சேரி, டிசெ. 4

தென்மராட்சிப் பிரதேசத்தில் சாலை விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நான்கு பேரில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றன.

சாவகச்சேரி நகர், சங்கத்தானை, நுணாவில் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சாலை விபத்துக்களில் சாவகச்சேரி டச்சு சாலையைச் சேர்ந்த 30 வயது குடும்பத் தலைவரும் நுணாவிலைச் சேர்ந்த 72 வயது முதியவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

அதேநேரம் வெவ்வேறு விபத்துக்களில் சங்கத்தானையைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் கச்சாய் சரசாலையைச் சேர்ந்த 23வயது இளைஞனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-9)



## வருடாந்த ஒன்றுகூடலும் சுற்றுலாவும்

கொடிகாமம், டிசெ. 4

சாவகச்சேரி மகளிர் கல்லூரி சேவையாளர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும் சுற்றுலாவும் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை அதிபர் திருமதி ல.முகுந்தன் தலைமையில் இடம்பெற்றன.

கந்தரோடைதொல்பொருள்களம், மாவிட்டபுரம்கந்தசுவாமி, கீரிமலைநகுலேஸ்வரம், ஜம்புகோளப்பட்டணம் சங்கமித்தைத் துறை, பொன்னாலைவரதராசப்பெருமாள் ஆலயம் என்பவற்றை தரிசித்த சுற்றுலாக் குழு நண்பகல் 12 மணியளவில் வருடாந்த ஒன்று கூடலை காரைநகர் ஹமன் ஹீல் விருந்தினர் விடுதியில் நடத்தியது. (ம-159)

## விதிமுறையை மீறிய 27 சாரதிகளுக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம்!

சாவகச்சேரி, டிசெ. 4

போக்குவரத்து விதி முறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய 27 சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 2 லட்சத்து 20 ஆயிரத்து 50ரூபாவும்அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு 50 ஆயிரம்ரூபாவும்தண்டமாக விதிக்கப்பட்டது.



சாவகச்சேரி பொலிஸ் நிலைய பறக்கும் பொலிஸ் படையால்நடத்தப்பட்டஇந்தத்திடீர்பரிசோதனையின் போது போக்குவரத்து விதி முறைகளை மீறினர் என 27சாரதிகள் அகப்பட்டனர். மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, ஆவணங்கள் இன்றி வாகனங்கள் செலுத்தியமை, சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாதஒருவருக்குஉந்துருளியைக் வழங்கியமை, தலைக்கவசமின்றிப் பயணித்தமை, வேகமாகச் சென்றமை மேலதிகமாக ஆள்களை ஏற்றிச் சென்றமை உள்ளிட்ட குற்றங்களின் அடிப்படையிலேயே குறித்த சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கைளடுக்கப்பட்டது. (ம-9)



## கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியில் ஆரம்பமானது புலமைப்பரிசில்நிதியம்

கொடிகாமம், டிசெ. 4

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் புலமைப் பரிசில் நிதியம் கடந்த 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதிபர்க.மங்களேஸ்வரன்தலைமையில்நிகழ்வுநடைபெற்றது. கொடிகாமத்தைச் சேர்ந்த க.ஞானலிங்கம் அவரது மனைவியின் ஞாபகார்த்தமாக குடும்பத்தின் சார்பில் ஒரு லட்சம் ரூபா முதலிட்டு புலமைப் பரிசில் நிதியத்தை ஆரம்பித்து வைத்தார். (ம-159)



*காரைநகர்கிழவன்காடுகலாமன்றத்தால்நாவலர் குருபூசை நிகழ்வு காரைநகர் கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் மன்ற அரங்கில் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ம)*

## வெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்தனது அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வெள்ள நிவாரணமாக ஒருவருக்கு 4 ஆயிரத்து 500 ரூபா வீதமான உலர் உணர்வுப் பொருள்களை கடந்த 23ஆம் திகதி சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வைத்து வழங்கியது. சங்கத்தலைவர்நா.கணேசன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. (ம-63)

## அவகாசம் வழங்கியும் நிபந்தனைகளை நிறைவேற்ற தவறிய உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

சாவகச்சேரி, டிசெ. 4

ஒரு மாதகால முன்னறிவித்தல் வழங்கியும் சுகாதாரப் பகுதியினரால் வழங்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாத சாவகச்சேரி நகரப் பகுதி உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராகயாழ்ப்பாணமாவட்டஉணவுமருந்துகள் பரிசோதகர் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகளைப்பதிவு செய்துள்ளார்.

சாவகச்சேரிநகரபொதுச்சுகாதாரப்பரிசோதகரும், யாழ்ப்பாணமாவட்டஉணவுமருந்துகள்பரிசோதகரும்சாவகச்சேரிநகரப்பகுதியில்உள்ளஉணவகங்கள் மீது கடந்த ஒக்டோபர் மாத நடுப்பகுதியில்திடீர்பரிசோதனைகளைமேற்கொண்டனர். அதன்போது உணவகத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய ஒரு மாதகால அவகாசம் வழங்கியிருந்தனர்.

கால அவகாசம் வழங்கி ஒன்றரை மாதங்கள் கடந்தநிலையில்முன்னறிவித்தல்வழங்கப்பட்ட உணவகங்களை கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை நடத்தியபோது நான்குஉணவகங்கள்வழங்கப்பட்டநிபந்தனைகள் நிறைவேற்றப்படாத நிலையில் இயங்கி வந்ததை அடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகவழக்குகள்தாக்கல்செய்யப்பட்டன. (ம-9)



# 1,900 ஹெக்டேயர் நிலப்பரப்பில் குடாநாட்டில் சி.வெங்காயம் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயிகள் பெரும்போகத்துக்கான சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். சுமார் ஆயிரத்து 900 ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கையாளர்கள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடவுள்ளனர்.

தற்போது மழையின் தாக்கம் குறைவடைந்ததைத் தொடர்ந்தே செய்கையாளர்கள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபடத் தயாராகியுள்ளனர். சில செய்கையாளர்கள் உண்மை விதைகளைப் பயன்படுத்தி நாற்றுமேடை அமைத்து வருகின்றனர்.

கடந்த சிறுபோகத்தின்போது செய்கையாளர்கள் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொண்டனர். விளைச்சல் அதிகரிப்பால் இந்தக் காலபோகத்தின்போது வெங்காயத்துக்கான பற்றாக்குறை தவிர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

# சீ.ரி.ஸ்கானர் பழுதால் நோயாளர்கள் சிரமம்!

யாழ்ப்பாணம், டிசெ. 4

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இயங்கிய சீ.ரி. ஸ்கானர் பழுதடைந்ததை அடுத்து நோயாளர்கள் வவுனியா உள்ளிட்ட வெளிமாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்று நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் 30 மருத்துவமனைகளுக்கும்பொதுவாகயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மட்டுமேசீ.ரி. ஸ்கானர்உள்ளநிலையில்குறித்த ஸ்கானரும் கடந்த 20 தினங்களாக பழுதடைந்த நிலையிலேயே உள்ளது. இதன் காரணமாக நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையில்இருந்துவெளி மாவட்டங்களுக்கேஅனுப்பிவைக்கப்படுகின்றனர். இதற்கு நோயாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனையின்பணிப்பாளர் சத்தியமூர்த்தியுடன்தொடர்புகொண்டுகேட்ட போது, "யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் உள்ள ஸ்கானர் 8 ஆண்டுகள் பழமையானது. அதேநேரம் போதனா மருத்துவமனையின் பயன்பாட்டுக்கு இரண்டு ஸ்கானர்கள் தேவையானபோதிலும் ஒரேயொரு ஸ்கானர் மட்டுமே உள்ளது. இந்த ஸ்கானரில் நாள் ஒன்றுக்கு 60 ஸ்கானிங் இடம்பெற்றன. இவ்வாறுஅதிகரித்தவேலைப் பளுவின் காரணமாக குறித்த ஸ்கானர் பளுதடைந்திருக்கலாம். எனினும் குறித்த ஸ்கானர் சீர்செய்ய ஆவண செய்யப்பட்டுள்ளது" - என்றார். (ம-105)

# தலைமைத்துவ பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ். மாவட்டத்தில் வதியும் 18க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களுக்கான எட்டுநாள் வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சி முகாம் இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை தொண்டமானாறு செல்வச்சந்திதிசந்நிதியான்ஆச்சிரமத்தில்நடைபெறவுள்ளது. யோகா, தியானம், பிராணயரமம், சுதர்சனகிரியா போன்ற பயிற்சிகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. வதிவிடப் பயிற்சிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு இன்று காலை வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-9)

# வீரசிங்கத்தின் நினைவுதினம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
கூட்டுறவுப் பெரியார் வி. வீரசிங்கத்தின் 54ஆவது நினைவுதினம் நாளை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் தி. சுந்தரலிங்கத்தின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணப்பல்கலைக் கழகதுணைவேந்தர்பேராசிரியர்இ. விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

# யாழ்.தமிழ்ச்சங்கநாவலர்விழா

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம்நடத்தியநாவலர்விழாநல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உபதலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

நாவலர் விழாவின் தலைமையுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உபதலைவரும், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர்பேராசிரியர் சண்முகதாஸ்தொடக்கவுரையையும் நிகழ்த்தினர். நாவலர் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட நாவலர் வினைத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-9,159)





*எழுத்தாளர் ராணி சீதரனின் 'புறங்கைச் சுமை' சிறுகதைத் தொகுப்பும் புத்தக வெளியீடும் அவரது மணிவிழாவும் ஒருங்கே பண்ணாகம் அம்பாள் கலை மன்ற கலாசார மண்டபத்தில் கடந்த 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. (ம)*

# நிர்வாகத் தெரிவு

தென்மராட்சி, டிசெ. 4
வடமாகாண்சமூகசேவைகள் அலுவலர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கைதடிசாந்திநிலையமண்டபத்தில் கடந்த 30ஆம் திகதிநடைபெற்றன.

நடப்புவருடநிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றித்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்எனச்சங்கத்தின் செயலர் வ. சுரேஸ்குமார் அறிவித்துள்ளார்.

தலைவராக நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த த. கனகராஜாவும், உப தலைவர்களாக கிளிநொச்சி மாவட்ட அலுவலர் வே. தபேந்திரன்முல்லைத்தீவு மாவட்ட அலுவலர் ந. தசரதராஜகுமாரன் ஆகியோரும், செயலாளராக யாழ்ப்பாணப்பிரதேசசெயலகத்தின் வ. சுரேஸ்குமாரும், உதவிச் செயலாளராகயாழ்ப்பாணப்பிரதேச செயலகத்தின் திருமதி மு. விஜயகுமாரியும், பொருளாளராக தென்மராட்சி பிரதேச செயலகத்தின் வி. சண்முகநாதனும் தெரிவானார்கள்.

மாவட்ட இணைப்பாளர்களாக கிளிநொச்சிக்கு பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்தத. ஜெயானந்தராஜாவும், யாழ்ப்பாணத்துக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தி. கணேசராஜாவும், முல்லைத்தீவுக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி. சிவகௌரிநாயகியும், மன்னாருக்கு மன்னார் மாவட்ட அலுவலர் திருமதி ஜே. மரியப்பிள்ளையும், வவுனியாவுக்குவவுனியா பிரதேச செயலகத்தைச் சேர்ந்த க. பாலகுமாரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-9)

## அச்சுவேலி நெசவு நிலைய விவகாரம்

# பொலிஸாரின் உதவியைப் பெற்று வலி.கிழக்கு அதிகாரிகள் பார்வை

அச்சுவேலி, டிசெ. 4
கிறிஸ்தவ மத போதகரின் ஆக்கிரமிப்பில் உள்ள அச்சுவேலி நெசவு நிலைய வளவை வலி கிழக்கு பிரதேச சபை அதிகாரிகள் அச்சுவேலிப் பொலிஸாரின்உதவியுடன்அண்மையில்நேரில் சென்று பார்வையிட்டனர்.

பொதுச்சொத்தாகிய அச்சுவேலிநெசவு நிலையத்தை போதகர் எந்தவிதமான அனுமதியும் பெறாமல் பயன்படுத்தி வருவதோடு பிரதேச சபையின் அனுமதி இன்றி கட்டுமானங்களையும் மேற்கொண்டு வந்தார். மேற்படி விடயம் தொடர்பாக வலி கிழக்கு பிரதேச சபைக்கூட்டத்தில் இரண்டுதடவைகள் ஒருமனதாகத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது தடவை மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் பிரதேச சபையில் அனுமதிபெறாதவிடயங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுவதுஎனத்தீர்மானிக்கப்பட்டது. இரண்டு தடவைகள் பிரதேசசபை அதிகாரிகள்நெசவுநிலையத்தைப்பார்வையிடுவதற்கு முயன்ற போது போதகர் தடுத்து நிறுத்தியதுடன் அச்சுவேலிப் பொலிஸார் பிரதேச சபை அலுவலர்களின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. பொலிஸார்ஒத்துழைப்பு வழங்கிஅரசஅதிகாரிகள்தமதுகடமையைச் செய்ய உதவ வேண்டும் என்ற அடிப்படையில்விடயத்தைகாங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா நிரோஷ் கொண்டு சென்றார். காங்கேசன்துறைப்பொலிஸ் அத்தியட்சகரின்பணிப்புக்குஅமைய அச்சுவேலிபொலிஸ்நிலையபொலிஸாரின் உதவியுடன்அண்மையில்அச்சுவேலி நெசவு நிலைய வளவை வலி கிழக்கு பிரதேச சபை அதிகாரிகள் பார்வையிட்டனர்

"அச்சுவேலி நெசவு நிலைய பொதுச் சொத்து அதனை இளைஞர், யுவதிகள் தொழில் முயற்சிக்கான மையமாக பயன்படுத்த வேண்டும். இதற்கு போதகர்இடையூறாகஇருப்பதைஅனுமதிக்க முடியாது. போதகர் இதுவரை பிரதேச சபையின் அனுமதி எதனையும் பெறாமல் கட்டுமானங்களை மேற்கொண்டு வந்துள்ளார். இதனை அனுமதிக்கமுடியாது போதகரின் செயற்பாட்டை முன் உதாரணமாகக் கூறி வரியிறுப்பாளர்கள்மற்றும்பொதுமக்கள்நடந்துகொள்ளக் கூடிய நில்ல காணப்படுகின்றது. நெசவு நிலையம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் ஏனைய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. விரைவில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்" எனத்தவிசாளர்தெரிவித்தார். (ம-11)



*திருமறைக் கலாமன்றத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் முதன்மைச் சாலையில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் குருதிக்கொடை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ம-23)*

## ஒளிவிழா நிகழ்வுகள்



வவுனியா.டிசெ.4
வவுனியா வேப்பங்குளம் பாரதி முன்பள்ளியின் ஒளி விழா நிகழ்வுகள் தலைவர் நெ. லோறன்ஸ் தலைமையில் நடந்துள்ளன.
நிகழ்வில். சிறப்பு விருந்தினராக சனசமூக நிலையத்தின் தலைவர் கணேசராசா சனசமூக நிலையத்தின் செயலர் சிவராஜசேகரம் மற்றும் வேப்பங்குளம் வாழ் மக்களும் கலந்து கொண்டனர். (222)



பளை. டிசெ.4
பளைவேம்பொடுகேணி பாடசாலை மாணவர்களால் ஒளிவிழா நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டன.
அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பளைப் பிரதேச பங்குத் தந்தை அருட்பணி இ.செபஸ்ரியன் அடிகளும் சிறப்பு விருந்தினராக பளை மத்திய கல்லூரி அதிபர் க.பாலகிருஷ்ணனும் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (9)



யாழ்ப்பாணம்,டிசெ.4
இளவாலை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தினரின் கலை விழா பண்டத்தரிப்பில் அமைந்துள்ள தியான இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.
மறைக்கோட்ட இயக்குநர் அருட்திரு அன்ரன் புனித குமார் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு ம.ஜேசுரட்ணம் அடிகளாரும் கலந்து கொண்டனர். (222)

# இலங்கை மின்சார சபையால் தறிக்கப்படும் தென்னை மரங்கள்

## தமது வருமானம் அழிவதாக மக்கள் விசனம்

மன்னார், டிசெ.4
**மன்னார் சாந்திபுரம் கிராமம் ஊடாக, இலங்கை மின்சார சபையினால் அதி உயர் மின் கம்பங்கள் நடுவதற்காக கிராம வீடுகளில் உள்ள தென்னை மரங்களை வெட்டுவதற்கு இலங்கை மின்சார சபைப் பணியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.**



இந்த நிலையில். சாந்திபுரம் கிராம மக்களின் எதிர்ப்பை அடுத்து தென்னை மரம் வெட்டும் நடவடிக்கைகள் கைவிடப்பட்ட நிலையில், இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.
கடந்த சனிக்கிழமை காலை முதல், கிராமத்தில் உள்ள சில வீடுகளின் வீட்டு முற்றத்தில் காணப்பட்ட தென்னை மரங்கள் சிலவற்றை அங்கு சென்ற இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் பலவந்தமாக வெட்டியுள்ளதாகவும், கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:
வட பிராந்திய மின்சார சபையினால் மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் கிராமத்தின் ஊடாக அதி உயர் மின்கம்பம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.
அந்தப்பகுதியில் வீட்டு வளாகத்தினுள் காணப்பட்ட பயன் தருகின்ற தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்ட வேண்டும் என்று மின்சார சபைப் பொறியியலாளரினால் கிராம மக்களுக்கு அறிவுறுத்தல்விடுக்கப்பட்டிருந்தது.
7 தினங்களுக்குள் வீட்டின் உரிமையாளர்கள் தென்னை மரங்களை வெட்டி அகற்றாது விட்டால் இலங்கை மின்சார சபைப் பணியாளர்கள் அதனை அகற்றுவார்கள் எனத் தெரிவித்திருந்தனர்.
சம்பவம் தொடர்பாக உடனடியாக சாந்திபுரம் கிராம மக்கள் மன்னார் பிரதேச செயலர் மற்றும் மன்னார் நகர சபையின் தலைவர் ஆகியோருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தனர்.
கடந்த சனிக்கிழமை காலை முதல் இலங்கை மின்சார சபையின் பணியாளர்கள் சாந்திபுரம் கிராமத்துக்குச் சென்று சில வீடுகளில் பலவந்தமாக தென்னை மரங்களை வெட்டியுள்ளதோடு,பல வீடுகளில் உள்ள தென்னை மரங்களை வெட்ட முயன்றனர்.
கிராம மக்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவர்கள் தென்னை மரங்களை வெட்டாது அங்கிருந்து சென்றதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.
கிராம மக்களின் வீடுகளில் காணப்படுகின்ற தென்னை மரங்களினால் அதன் உரிமையாளர்கள் வருமானத்தை பெற்றுக்கொள்ளுவதாகவும், குறித்த நடவடிக்கைகளை ஒரு போதும் தாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என சாந்தி புரம் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.
எனவே இதற்கு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார் பிரதேச செயலர் மற்றும் மன்னார் நகர சபையின் தவிசாளர் ஆகியோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனச் சாந்திபுரம் கிராம மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (56)



## "ஒளிரும் கிராமம்" ஆரம்ப நிகழ்வு

வவுனியா.டிசெ.4
தமிழ்த் தேசிய இளைஞர் கழகம் மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களை தாயகப் பகுதியில் செயற்படுத்திவருகின்றனர்.
தாண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் திருநாவற்குளம் கிராமத்தில் தமது ஆரம்ப நிகழ்வினை அண்மையில் நடத்தியிருந்தனர்.
கழகத்தின் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிகரன் கேசவன் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. (110)

## குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்

மாங்குளம்,டிசெ.4
மாங்குளம் தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளி மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
பங்குதந்தையின் கோரிக்கைக்கு அமைவாக முன்னாள் வட மாகணசபை உறுப்பினர் ஆண்டிஐயா புவேனஸ்வரனுடைய ஏற்பாட்டில் குடிநீர் சுத்திகரிப்புச்சாதனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.
மறைந்த விசுவமடு வர்தகர் அமரர் பொன்னுத்துரை பத்மநாதன் நினைவாக அவரின் மகள் திருமதி .றயினியால் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (222)






## புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கல்

மன்னார்,டிசெ.4
கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவும் வகையில், லைகாவின் ஞானம் அறக்கட்டளையால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மாந்தை மேற்கு மற்றும் மன்னார் பிரதேசச் செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 700 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
கடந்த வியாழக்கிழமை மாலை மடுப் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (56)

# மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து 239 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு

மன்னார்,டிசெ.4

மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து தற்போது வரை 239 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளதோடு, மேலும் பல எலும்புக்கூடுகள் கண்டு பிடிக் கப்பட்டுள்ளன.



மன்னார்மனிதப்புதைகுழியின்அகழ் வுப் பணிகள் நேற்று திங்கட்கிழமை 109 ஆவதுதடவையாக முன்னெ டுக்கப்பட்டது.

மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா வின்மேற்பார்வையில்,சட்டமருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ தலைமை யில் அகழ்வுப் பணிகள் இடம் பெற் றது.

தற்போது வரை 239 மனித எலும்புக் கூடுகள்மீட்கப்பட்டுள்ளதோடு,மேலும் பல மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அகழ்வுப்பணிகள்இடம்பெற்றுவரும் நிலப்பகுதிபரவலாக்கப்பட்டுள்ளநிலை யில், பரவலாக்கப்பட்டுள்ள பகுதிகளி லும் மனித எலும்புக்கூடுகள் காணப்ப டுகிறது.

சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜ பக்ஸ தலைமையில் குழுவினர் இணைந்து அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருவதோடு, அகழ்வு இடம் பெறும் இடத்தில் தேங்கி இருந்த மழைநீர்வெளியேற்றப்பட்டுதொடர்ச் சியாக அகழ்வு பணிகள் இடம் பெற்று வருகின்றன. (56)



## கலைஅறிவைஊக்குவிக்கும்விழா

யாழ்ப்பாணம்,டிசெ.4

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தின் கீழ் உள்ள அனைத்து திருச்சபைகளின் சிறுவர்களை ஒன்றி ணைத்து, சமயமற்றும்கலைஅறிவைஊக்குவிக்கும்வகை யில் இந்த விழா இடம்பெற்றுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான விழா, சனிக்கிழமை யாழ் வட்டுக் கோட்டையில்அமைந்துள்ளதலைமைபேராலயமண்டபத் தில் இடம்பெற்றது.

விழாவில் வடக்கு கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகம் உள்ளிட்டபலபகுதிகளிலிருந்தும்பெருமளவானோர்கலந்து கொண்டனர். (6)



## காணிச்சட்டம் தொடர்பான கருத்தரங்கு

மாந்தை, டிசெ. 4

மாந்தை கிழக்குப்பிரதேசமக்களுக்கான காணிச்சட்டம் மற் றும்நம்பிக்கைநிதியம்ஆகியவைதொடர்பானகருத்தரங்கு கள் பிரதேசக் கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக நடத்தப்பட் டுள்ளன.

பிரதேச செயலக காணி அலகின் அலுவலர் சட்டம் மற்றும் நம்பிக்கைநிதியத்தின் இணைப்பாளர் ஆகியோர்வளவாளர் களாகக் கலந்து கொண்டு, காணிச் சட்டம் மற்றும் காணிப் பிணக்குகள் தொடர்பான கருத்துரைகளை வழங்கியுள் ளனர்.

கிராம அலுவலர் பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அலு வலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் உட்பட பொது மக்களும் பங்குபற்றியுள்ளனர்.

பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான், பாண்டி யன்குளம், செல்வபுரம் நட்டாங்கண்டல், மூன்று முறிப்பு, சிராட்டிக்குளம், பொன்னகர், விநாயகபுரம், பூவரசங்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் கருத்தரங்குகள் நடத்தப் பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது. (9)



## ஈருருளி வழங்கல்

முல்லைத்தீவு,டிசெ.4

தாயகத்திலே போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வரும்வறிய குடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களின் கற்ற லுக்காக உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவுதண்டுவான் அரசினர்தமிழ்க்கலவன்பாடசா லையில் தரம் 11 இல் கல்வி கற்று வரும் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் மாணவி செல்வி. பா.நிசாந்தியின் பாடசாலை போக்கு வரத்துச் சிரமத்தை நீக் குவதற்காக ஈருருளி வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (222)

## சிறார்களுக்கு மதிப்பளிப்பு

முல்லைத்தீவு,டிசெ.4

தரம்1க்குப்பாடசாலைக்குச்செல்லவிருக்கும், றோயல்முன் பள்ளிச் சிறார்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

முன்பள்ளிகற்கைகளை முடித்து, 2019 ஆம் ஆண்டில், முத லாந் தரத்திற்கு பாடசாலைக்கு செல்லவிருக்கும் முல்லைத் தீவு கள்ளப்பாடு, வடக்கு றோயல் முன்பள்ளிச் சிறார்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (222)




## மாற்றுத்திறனாளிகள்தினநிகழ்வு

மாந்தை, டிசெ. 4

மாந்தை கிழக்குப் பிரதேச மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் ஏற்பாட்டில்மாற்றுத்திறனாளிகள்தினநிகழ்வுகள்கடந்த 1ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மைவிருந்தினராகமாந்தைகிழக்குப்பிரதேசசெயலர் ரஞ்சனா நவரத்தினமும், சிறப்பு விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவனத் திட்ட முகாமையாளரும் கலந்து கொண்ட னர்.

நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளின் கலைநிகழ்வுகள் இடம் பெற்றன.

வேள்ட்விஷன்நிறுவனத்தினரால்மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (9)



## மகாறம்பைக்குளத்தில் குழு மோதல்

வவுனியா,டிசெ.4

வவுனியா மகாறம்பைக்கு ளத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றகுழுமோதலில் மூன்று இளைஞர்கள் படு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில்சேர்க் கப்பட்டுள்ளனர்.

மகாறம்பைக்குளம் பகுதி யில் நேற்று முன்தினம் இரவுஇரு இளைஞர் குழுக் களுக்கிடையேஇடம்பெற்ற கருத்து முரண்பாடு மோத லாகமாறியதால், கண்ணா டிப்போத்தல்போன்றவெவ் வேறு பொருள்களினால் தாக்குதல்மேற்கொண்டுள் ளனர்.

தாக்குதலுக்குள்ளாகிபடுகா யமடைந்த நிலையில் மூன்று இளைஞர்கள் வவு னியா மாவட்ட பொது மருத் துவமனையில்சேர்க்கப்பட் டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைமகாறம் பைக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (110)

## சாரணியமாணவர்களுக்கானஅங்கத்துவப்பயிற்சிநிறைவு

கொடிகாமம், டிசம்பர் 3

கிளிநொச்சிஇந்துக்கல்லூரியில்சார ணியமாணவர்களுக்கானஅங்கத் துவப் பயிற்சிகளை நிறைவு செய்த வர்களுக்குசின்னம்சூட்டும்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள காந்தி நிலையத்தில் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் கி. விக்னராஜா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில், உதவி மாவட்ட ஆணையாளர்களான மு.பிறே ம் குமார், ந.மதுராகரன், ம.ஜெகதீஸ்வரன், ச.பெர்னாண்டோ, செல்வி த.மேகலா, த.கும ணன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, வட்டக்கச்சி மத்திய கல்லூரி



சாரண மாணவர்களையும் இணைத்து மேலதிகபயிற்சியையும்வழங்கிஆண்சார ணர்களுக்கும் பெண் சாரணர்களுக்கும் அங்கத்துவச் சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றன. (159)

## கசிப்பு காச்சியவர் கைது

முல்லைத்தீவுபுதுக்குடியிருப்புவேணாவில் குளப்பகுதியில் கசிப்புக் காச்சிய ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புதுக்குடியிருப்புவேணாவில்குளக்கட்டுப்பகுதி யில் நீண்டகாலமாகக் கசிப்புக் காச்சப்பட்டு வருவதாகப்பொலிஸாருக்குகிடைத்ததகவ லையடுத்து,கிளிநொச்சிமுல்லைத்தீவுமாவட்ட குற்றத்தடுப்பு மற்றும் போதை ஒழிப்பு பொலிஸார்மேற்கொண்டதேடுதல்நடவடிக் கையின் போது 2 ஆம் திகதி மாலை கசிப் பினை காச்சிக்கொண்டிருந்தவரைக்கைது செய்துள்ளனர். இரண்டுபெரல்கோடா மீட்கப் பட்டுள்ளதுடன், அவைஅழிக்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் முன்னி லைப்படுத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரி3)




## தபால் பெட்டி சேதப்பட்டும் கண்டுகொள்ளப்படவில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 4

தபால் பெட்டிக் கதவின் பூட்டு வேலை செய்யாத நிலையை அறியாது பொதுமக்கள் அதனுள் தபால்களைப் போட்டுவிட்டுச் செல்கின்றனர். கதவு சேதமடைந்தமை குறித்துத் தபால்த் திணைக்களம் இது வரை கண்டுகொள்ளவில்லை என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் கந்தர்மடம் சந்தியில் உள்ள தபால் பெட்டியே இவ்வாறு சீர்கேடாகவுள்ளது. அந்தப் பெட்டி இன்றுவரை பயன்பாட்டில் உள்ளபோதும் அதன் சேதங்களைச் சீரமைக்கவில்லை. பொதுமக்கள் தபால்களை அந்தத் தபால் பெட்டியில் போட்டுச் செல்கின்றனர். தபால்த் திணைக்கள ஊழியர்கள் தம்வசம் உள்ள திறப்பைக்கொண்டு அதற்குள்ளிருக்கும் தபால்களை எடுத்துச் செல்வது வழமை.

தபால் பெட்டி பாதுகாப்பற்ற முறையில் சாதாரணமாக எவரும் திறந்து சாத்தும் தன்மையுடனேயே காணப்படுகின்றது. ஒருவர் போட்டுச் செல்லும் தபாலை ஏனையவர்கள் எடுக்க வாய்ப்புள்ளது.

எனவே நம்பகத் தன்மையை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

"இந்த தொடர்பில் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று வடக்கு மாகாண பிரதித் தபால்மா அதிபர் தெரிவித்தார். (4.105)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடம் 4 ஆயிரத்து 600 வீடுகள் அமையவுள்ளன

### பயனாளிகள் தெரிவில் இழுபறி வரலாம் என்று பிரதேச செயலகத்தினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான வீடமைப்புத் திட்டத்தில் 4 ஆயிரத்து 600 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அதில் கோரப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம்நெடுந்தீவு 50, வேலணை 150, ஊர்காவற்றுறை 75, காரைநகர் 75, யாழ்ப்பாணம் 175, நல்லூர் 175, சண்டிலிப்பாய் 250, சங்கானை 250, உடுவில் 200, தெல்லிப்பளை ஆயிரத்து 500, கோப்பாய் 550, தென்மராட்சி 600, கரவெட்டி 250, பருத்தித்துறை 150, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு 150 வீடுகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது பட்டியல் வந்துள்ளதை உறுதிப்படுத்தினர். எனினும் பயனாளிகளின் விவரங்களை உடனே அனுப்புவதில் சிக்கல் உள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

பயனாளிகளின் பட்டியல் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர் விவரங்கள் தொடர்பான அறிவித்தல்கள் ஆட்சேபனைகள் முறைப்பாடுகளுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டு ஆட்சேபனைகள், முறைப்பாடுகள் கிடைக்காத பட்சத்தில் அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் புதிய பயனாளிகள் தெரிவு போன்றவற்றால் தாமதம் ஏற்படலாம் என்று தெரிவித்தனர்.

வருட இறுதியில் வீடமைப்புத் திட்டப் பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளதால் பயனாளிகளின் பட்டியல் மாவட்டச் செயலகத்துக்குப் பிரதேச செயலகங்களால் அனுப்பப்பட்டு அங்கிருந்து மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்பி அங்கிருந்து அங்கீகாரம் கிடைப்பதற்குள் வருடம் முடிந்து விடும். வருடம் முடிவதற்குள் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்பதால் பயனாளிகள் ஆரம்பக் கட்டப் பணிகளை ஆரம்பிக்க சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமென்று பொதுமக்கள் முறைப்பாடு கூறுவர்.

மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வீட்டுத் திட்டங்களுக்கும் ஒரே நேரத்தில் அத்திபாரக் கற்கள், மணல்கள் பறிக்கப்படவேண்டும். பயனாளிகளின் அவசரத்துக்காக கற்கள், மணல் போன்றவற்றின் விலைகள் திடீரென அதிகரிக்கலாம். இதனால் பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்படும் தொகையைவிட மேலதிகமாகச் செலவு ஏற்படலாம் என்று தெரிவித்தனர். (4,9)

## சமாதானத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் சுவரொட்டி

கிளிநொச்சி, டிசெ. 4

சமாதானத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கிளிநொச்சி நகர்ப் பகுதிகளிலும், விசுவமடு, வட்டக்கச்சி எனப் பல இடங்களில் கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நாட்டின் சமாதானத்தை மீறுவோர் நாட்டின் துரோகிகள், பாதாள மற்றும் வன்முறைக் காரருக்கு இடமளிக்க வேண்டாம், சமாதானத்தை நடைமுறைப்படுத்த ஒன்று சேருங்கள், சமாதானத்தை மீற இடமளிக்க வேண்டாம் என்பன உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. நேற்றுக்காலை தொடக்கம் இவை ஒட்டப்பட்டுள்ளன. அவை எழுத்துப் பிழைகளுடன் காணப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,35)

## விருந்துக்கு வந்தவர் மீது வாளால் வெட்டியவர் கைது

### அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 4

அயல் வீட்டுக்கு வந்த விருந்தினரை வாளால் வெட்டினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளோம் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் அச்சுவேலி மகிழடி வைரவர் கோயிலுக்கு அருகில் உள்ள வீட்டில் வைத்து நேற்று முன்தினம் வாள்வெட்டு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தமது வீட்டுக்கு வந்திருந்த விருந்தினரை அயல் வீட்டில் வசிக்கும்நபர் திடீரென்று தமது வீட்டுக்குள் புகுந்து வாளால் வெட்டியுள்ளார் என்று முறையிட்டதன்பேரில் அயல்வீட்டைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

வாள்வெட்டுக்கு இலக்கானவர் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். விசாரணை நடத்தப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,8)



## மனித நேய அமைப்பு 2021வரை செயற்படும்

### திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டு வாழ்வாதாரங்களுக்கான வலுவான சிவில் சமூக அமைப்புகள் எனும் கருத்திட்டம் 2021ஆம் ஆண்டுவரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் மனித நேய அமைப்பின் திட்டப்பணிப்பாளர் சி.செந்தூரன் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

போருக்குப் பின்னர் வடக்கில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பெண்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் மற்றும் இயலாமையுடைய பெண்களின் பொருளாதார மற்றும் சமூக பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் மனிதநேயம், இயலாமை சம்பந்தமான தகவல்களை வழங்குதல் தடையற்ற சூழலை ஏற்படுத்துவதற்கான நிலையம் யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம் மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் திட்டத்தை முன்னெடுக்கிறது.

2018ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சி கிழக்கு, வலி. கிழக்கு, தென்மராட்சி, பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கு, மடு மற்றும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகளை இலக்குப் பிரதேசங்களாகக் கொண்டுள்ளன.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், கால்நடை சுகாதாரத் திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, வடக்கு மாகாண சபை, மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய அரச நிறுவனங்களுடனும் இணைந்து திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன - என்றுள்ளது. (4)

### வவுனியாவில்

## இரவில் அச்சுறுத்தும் மர்ம நபர்கள் யார்?

### லிங்கநாதன் சுட்டிக்காட்டு

வவுனியா, டிசெ. 4

வவுனியாவில் இரவில் மக்களை அச்சுறுத்தும் நபர்கள் தொடர்பாக அனைவரும் கரிசனைகொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.

வவுனியா தம்பனைச்சோலையில் நேற்று நடைபெற்ற முன்பள்ளி நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:

சிவில் உடையில் திரியும் இனம்தெரியாத சிலர் இரவு நேரங்களில் தோட்டக் காவலுக்குச் செல்லும் மக்களை வழிமறித்து நீண்ட நேரம் இருத்தி வைக்கிறார்கள் என்று மக்கள் முறையிடுகின்றனர். சிலவேளைகளில் அதிகாலை 2 மணிவரைக்கும் இருத்தி வைக்கிறார்கள். அதனால் தமது காணிகளில் பயிரிடப்பட்டவற்றை யானைகள் அழித்து விடுகின்றனர். இதை யார் தட்டிக்கேட்பது என்றும் மக்கள் கேட்கின்றனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் இந்தப் பிரச்சினையைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருக்கிறேன்.

பழையகுருடி கதவைத் திறவடி என்பது போல ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் சிவில் உடையில் வந்து தமிழ்மக்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் ஆரம்பித்துள்ளன. இது ஆபத்தானது. அரசின் பங்காளிகளாக இருக்கின்ற தமிழ்க் கட்சிகளும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் இந்த விடயத்தைக் கருத்தில் எடுத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி பற்றிக் கூறிய கருத்து மறுவாழ்வுபெற்ற 12 ஆயிரம் போராளிகளின் எதிர்காலத்தைச் சூனியமாக்கும் செயற்பாடு என்றே கருதுகின்றேன். போராளிகளைப் பலிக்கடாவாக மாற்றுவதை ஏற்கமுடியாது - என்றார்.

தம்பனைச்சோலை பாராதி முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும், மாணவர் மதிப்பளிப்பும் தம்பனைச் சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (4,110)

# யானை தடுப்பு வேலி அமைக்க விசுவமடுவில் எல்லையிடும் பணி

## நீண்ட இழுபறிக்கு மத்தியில் ஆரம்பிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 4

விசுவமடுவில் யானை வேலி அமைக்கப்படவுள்ளது. அதற்கு முதற் கட்ட நடவடிக்கையாக யானைவேலி அமைப்பதற்கான எல்லைப் படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச அமைப்புகள் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இடைக்காட்டுக்குளம்தொடக்கம்கல்மடு குளம் வரையான 20 கிலோமீற்றர் தூரம்கொண்டபகுதியில்யானைவேலி அமைப்பதற்கான நடவடிக்கைகளில் வனஜீவராசிகள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரியில் யானை வேலி அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசுவமடுப்பகுதியில் நீண்டகாலமாக யானைகளின் தொல்லையால் மக்கள் வாழமுடியாத நிலையிலுள்ளனர்.

மக்களின் பயிர்கள் பயன்தரு மரங்கள் யானைகளால் சாய்க்கப்பட்டிருந்தன. பலரதுவீடுகள்சிதைக்கப்பட்டன. பெரும் பொருளாதார இழப்பை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர். அந்தஇழப்பிலிருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை. இந்த அவல நிலை வருடங்களாகத் தொடர்ந்தன. பாதிப்புகளால், இழப்புகளால் அவதிப்பட்டபிரதேசமக்கள், கிராமஅமைப்புகள் உட்படப் பல்வேறு தரப்பினரும் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்குக் கடிதங்கள் கொடுத்திருந்தனர். இழுபறியின் மத்தியில் அதற்கான நடவடிக்கையாக எல்லையிடும்நடவடிக்கை மட்டும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (4,ரி3)



## தென்னிந்தியதிருச்சபையின் சிறப்புற்ற பிள்ளைகள் விழா

யாழ்ப்பாணம். டிசெ. 4

தென்னிந்திய திருச்சபையின் வருடாந்த பிள்ளைகள் விழா சிறப்பாக இடம்பெற்றது. தென்னிந்திய திருச்சபையின்பேராயர்அதி. வண கலாநிதிடானியல். எஸ். தியாகராஜாதலைமையில்யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள தலைமைப் பேராலய மண்டபத்தில்கடந்தசனிக்கிழமைஇது இடம்பெற்றது. தென்னிந்திய திருச்சபையின்யாழ்ப்பாண ஆதீனத்தின் கீழ் உள்ள அனைத்துதிருச்சபைகளின் சிறுவர்களையும் ஒன்றிணைத்து, சமய மற்றும் கலை அறிவுகளை ஊக்குவிக்கும்வகையில்இதுஇடம் பெற்று வருகின்றது.

வடக்கு கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகம் உள்ளிட்டபலபகுதிகளிலிருந்தும் பெருமளவானோர் இதில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறார்களுக்கான குழுப் பாடல், தனிப்பாடல், விருத்தம், மனனவசனம், சித்திரம், கட்டுரை, வேதாகமப் புதிர் போட்டிகள் என்பன இடம்பெற்றன. 14 வயது மற்றும் 19 வயது பிரிவினருக்கான பேராயர் கிண்ண வேதாகமப் புதிர் போட்டிகளும் இடம்பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. திருச்சபை ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் அதில் கலந்து கொண்டனர். (4)

## அன்னதான மண்டப அடிக்கல் நடப்பட்டது

வலி. வடக்குகொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயஅன்னதானமண்டப அடிக்கல்நடும்நிகழ்வுகடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணமாவட்டமேலதிகசெயலர் (காணி) எஸ். முரளிதரன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் சி. சிவசிறி, உதவிப்பிரதேசசெயலர்திருமதி சங்கீதா, பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4,23)





தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழா பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் சி.சிவசிறி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில்பிரதேசகலைஞர்கள்மதிப்பளிப்புமற்றும் கலைநிகழ்வுகளும்இடம்பெற்றனஎனத்தெரிவிக்கப்பட்டது. (4,9)

## வீதி சீரமைக்கப்படாததால் போக்குவரத்தில்நெருக்கடி

### அடுத்த வருடமே சீரமைக்கலாம் என்று கூறுகிறார் சபைத் தவிசாளர்

சாவகச்சேரி, டிசெ. 4

வெள்ளம் வழிந்தோட வெட்டிய குழி இரண்டு வருடங்களாகியும் சீரமைக்கப்படாததால் கிராமத்துக்கான போக்குவரத்து தடைப்பட்டு வேறு மார்க்கமாக சகலருக்கும் பயணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். என்றுமறவன்புலவின் குறித்த பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

2016 ஆம் அண்டு சாவகச்சேரிப் பிரதேச சபையினர் மறவன்புலவு மேற்கில் உள்ளமணல்காடுவீதியைச் சீரமைத்தனர்.

மழை வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் மதகு அமைக்குமாறும் அல்லது சாய்வு ஏற்படுத்துமாறு பிரதேச மக்கள் தெரிவித்தனர். அவ்வாறு செய்யாமல் வீதி சீரமைத்திருந் தனர். அந்த வருடம் பெய்த கடும் மழையால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் அந்தப் பகுதியில் உள்ளகுடியிருப்புகளுக்குள் வெள்ளம்புகும்நிலைஏற்பட்டது. வயற்கரைபிள்ளையார் கோவிலுக்குமுன்பாகஇனந்தெரியார் இரவு வெள்ளம் வழிந்தோடக்கூடிய வகையில் வாய்க்கால் வெட்டியுள்ளனர். பெருமளவுவெள்ளம் வழிந்தோடிமறுநாள்காலையில் மூன்று அடி ஆழத்துக்குப் பெரிய குழி ஏற்பட்டது. இதனால் வீதியை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. பேருந்துகள், உள்ளிட்ட அனைத்து வாகனங்களும் வேறு பாதையூடாகவே பயணித்தன எனவும் தெரிவித்தனர். வீதியின் இருபுறமும் நெல்வயல்கள் காணப்பட்டன. நெற்செய்கையாளர்கள் தமது வாகனங்களைக் கொண்டுசெல்லமுடியாமல் பாதிப்புக்கு உள்ளாகி வேறு இடங்களிலிருந்து மணல் கொண்டு வந்து போட்டு வீதியைச்சீர்செய்துபோக்குவரத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாகப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது. அதிகாரிகள் அந்த இடத்தில் மதகு அமைத்து வீதியைச் சீரமைத்துத் தருவதாகக் கூறிச்சென்றனர். இதுவரை சீரமைக்கப்படவில்லை.

அண்மையில்பெய்தபெருமழையால் ஏற்பட்ட வெள்ளம் இந்தப் பகுதியால் வழிந்தோடி பள்ளத்தில் போடப்பட்டிருந்தமண்ல்வெளியேறியதால் வாகனங்கள் செல்ல முடியாதஅளவுக்குமீண்டும் குழி ஏற்பட்டுள்ளது. பிரதேச மக்கள் வேறு வீதிகளில் பயணிக்கின்றனர். கடந்தவாரம் பயணிகளுடன் வந்த தனியார் பேருந்து சாலை வளைவில்வயலுக்குள்முன்சில்லு இறங்கியதால் மாணவர்கள் உட்பட பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கினர்.

நெற்செய்கை காலம் என்பதால் நெற்செய்கையாளர்கள் மற்றும் பிரதேச மக்களின் நலன்கருதி இந்த வீதியைச் சீரமைத்து வழங்குமாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளரைக் கோரியுள்ளோம்எனவும்தெரிவித்தனர்.

இதுதொடர்பாகபிரதேசசபையுடன் தொடர்பு கொண்டபோது, சபையில்போதியநிதி இல்லை. அடுத்தவருடத்துக்கான உத்தேச வரவு- செலவுத் திட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் அடுத்தவருடமேமேற்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)



## பயனாளிகள் 33 பேருக்கு ஈருருளிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4

33பயனாளிகளுக்குசுமார் 4லட்சத்து80ஆயிரம்ரூபா நிதிஒதுக்கீட்டில்ஈருருளிகள் வழங்கப்பட்டன.

பாசையூர் கடற்கரை முன்றலில் கடந்த சனிக்கிழமை இவை வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாநகர முதல்வரும், வடக்கு மாகாண சபையின்முன்னாள்உறுப்பினருமான இம்மானுவல் ஆனல்ட் மாகாணசபை உறுப்பினர்களுக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஈருருளிகளே பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

அவற்றைமாநகரமுதல்வர் இம்மானுவல் ஆனல்ட் வழங்கினார். (4,23)

## வாசிப்புமாதபோட்டிகளின் பரிசளிப்பு சிறப்புற்றது

கொடிகாமம், டிசெ. 4


சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் பாடசாலை மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் வாசகர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டிமட்டுவில்கமலாசனி வித்தியாலய மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் இவை நடைபெற்றன.

முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஜீ. விஜயகுமார், சிறப்புவிருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அலுவலர் க.க. ஈஸ்வரன், வித்தியாலய அதிபர் ஐ. தேவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மட்டுவிலைச் சேர்ந்த எழுத்தாளர் செ. சுதாகரன் மதிப்பளிக்கப்பட்டார்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள், முன்பள்ளிச் சிறார்கள், வாசகர்களுக்குப்பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலைநிகழ்வுகளும்இடம்பெற்றன. (4,159)





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி . : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களை மிரட்டலாமா?

தமிழ் மக்கள் அமைதியான வாழ்வை விரும்பாவிட்டால் மீண்டும் வீதிகளில் சோதனைச் சாவடிகளை அமைக்கவேண்டி வரும் என்று தெரிவித்திருக்கிறார் தரைப்படையின் யாழ். மாவட்டக்கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல்தர்ஷனஹெட்டியாராச்சி. வட்டுக்கோட்டையில் நடந்த நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். மட்டக்களப்பில் இரு பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டு, அவர்களது ஆயுதங்களும்அபகரிக்கப்பட்ட பின்னணியில் படை அதிகாரியின் இந்தக் கருத்து வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தவிர வேறு எந்தவொரு சம்பவமும் வடக்கு கிழக்கில் அரசபடையினருக்கு எதிரான வன்செயல்களாகப் பதிவாகவில்லை. எனவே மட்டக்களப்புச் சம்பவத்தை மனதிலிருத்தியே யாழ். மாவட்டத் தளபதி ''தமிழ் மக்கள் அமைதியான வாழ்வை விரும்பாவிட்டால்'' என்கிற பதத்தைப்பயன்படுத்தியிருப்பார்என்று கொள்ளவேண்டும். அப்படிப்பார்த்தால் இது ஒரு வகையில் தமிழ் மக்களை மிரட்டும், எச்சரிக்கும் ஒரு கருத்துத்தான்.

மட்டக்களப்புச்சம்பவம் தொடர்பில்சந்தேகநபர்கள் இருவர்கைது செய்யப்பட்டிக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தானே இந்தக் கொலைகளைச்செய்தேன் என்றுகூறி கிளிநொச்சியில் பொலிஸாரிடம் தன்னை ஒப்புவித்தார்என்றும்கூறப்படுகின்றது. இந்தச்சம்பவத்தின்பின்புலத்தில்தமிழ்மக்கள்சார்பிலானவன்முறை எவையும் தொடங்கப்படுவதற்கானமுன்முயற்சிகள் இருந்தன என்கிற தகவல்களும் இல்லை. இது ஒரு போராட்ட முயற்சி என்பதான தகவல்கள்கூட இல்லை.

அப்படியிருக்கும்போது இந்தச் சம்பவத்துடன் தொடர்புபடுத்திதமிழ்மக்கள்அமைதியைவிரும்பாவிட்டால் மீண்டும் துன்பப்படுவீர்கள் என்று அவர்களை எச்சரிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. தனிநபர் குற்றங்களை ஓர் இனத்துடன் தொடர்புபடுத்தி அந்த இனத்தையேகூட்டுத்தண்டனைக்கு உள்ளாக்க முயற்சிக்கும் வகையில் அமைந்துள்ளது யாழ். தளபதியின் கருத்து.

70களில் தமிழ் இளைஞர்கள் சிலர் ஆயுதம் ஏந்தத் தொடங்கியபோதும் அதனைக் கட்டுப்படுத்த முயன்றஅதிகாரிகள்இதுபோன்றகூட்டுத்தண்டனை வழிவகைகளையும் பழிவாங்கல் நடைமுறைகளையும் முன்னெடுத்தமைதான் இளைஞர்கள் ஆயுதங்களின்மீது அதீத நம்பிக்கை வைப்பதற்குக்காரணமாக இருந்தது. போர்க் காலம் முழுவதும் இலங்கையின் அனைத்துப் படைகளும் இதே அணுகுமுறையுடனேயே நடந்துகொண்டன என்பதற்கு ஒவ்வொரு தமிழர்களும் சான்று.

குற்றங்களில் ஈடுபடுவோரைச் சரிவரக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்து தண்டனைக்கு உள்ளாக்க வேண்டியதே சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின்கடமை. அதற்குரியவகையில்தம்மை நவீனப்படுத்தி, பலப்படுத்தி வைத்திருப்பது அவர்களின் தேவை. அதில் பலவீனங்களை வைத்துக் கொண்டு குற்றவாளிகளைத்தப்பவிட்டுவிட்டு அதற்காக மக்களைக் குற்றஞ்சாட்டுவது நல்லதல்ல. அதிலும் இதுபோன்று இன ரீதியில் எடுத்த எடுப்பில் குற்றச்சாட்டை முன்வைப்பது படைத்தளபதி கூறும் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஒருபோதும் கொண்டு வராது.

ஒருசிலரின்குற்றங்களுக்குஓர்இனத்தையேபொறுப்பாளியாக்கி அதனடிப்படையில் அந்த இனத்தை எச்சரிக்கும்அதிகாரம்ஓர்அரசஅதிகாரிக்குஎப்படிவந்தது என்பதற்கான ஆணிவேர் ஆராயப்பட்டு அதனைக் களைய உரிய நடவடிக்கை எடுக்கப்படுமானால் மட்டுமே இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

# அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் வாசல்படி வரை...

ஏரம்பு சுப்பையா



பௌத்த பிக்குகளும், "சிங்கள தீவிரவாத அமைப்புக்களும் சிறுபான்மை இனமொன்றில் சிங்கள இனம் தங்கி நிற்பதா? உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்" எனக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

"உனக்கு உன் எதிரியுடன் அமைதி வேண்டுமானால் நீ உன் எதிரியுடன் இணைந்து பணியாற்றவேண்டும் அப்போதுதான் எதிரி உன்னுடைய பங்காளியாக மாறுவான்" இது தென்னாபிரிக்கக் கறுப்பினத் தலைவரான நெல்சன் மண்டேலா குறிப்பிட்டது. தென்னாபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையர்கள் தமது ஆட்சியைப் பெரும்பான்மைக் கறுப்பினத்தவர்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தார் கள். இந்த நிலையில் அங்குள்ள ஒரு பெரும்பான்மை இனத் தலைவரே நீ அமைதியைப் பெற வேண்டுமானால் எதிரியுடன் சமரசம் செய்யத் தயாராக இருப்பது அவசியம் என்று வலியுறுத்துகிறார். கறுப்பினப் பெரும்பான்மையினரின் தலைவரான இவர் தனது மக்களின் விடுதலையைச் சட்டபூர்வமாகப் பெறுவதற்காக 27ஆண்டுகள் சிறையில் அடைபட்டுக் கிடந்தார். ஈற்றில் அவருடைய முயற்சி வெற்றி பெற்றது. இலங்கையின் சனத்தொகையில் ஏறத்தாழ பத்து சதவீதத்தினரான தமிழர்கள் தமது மக்களின் அமைதியை நிலை நிறுத்து வதற்காக எதிரியுடன் மிக அதிகமாகச் சமரசம் செய்து கொள்ளவேண்டிய நிலை இருப்பதை நெல்சனின் கூற்றை எடுத்து நோக்கினால் புரிந்து கொள்ள முடியும். அதிலும் தமிழரின் அதி உச்ச எதிரியான மகிந்தவுடன் தமிழர் தரப்பு அதிகம் சமரசம் செய்துகொள்ள வேண்டியுள்ளது

**கூட்டமைப்பின் ஆதரவு பற்றிய அறிவிப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தன்னுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்கவிருப்பதாக எழுத்து மூலக் கடிதம் ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வழங்கியிருக்கிறது. இந்த அறிவிப்பு வெளியாகிய இன்று மாலையே பௌத்த பிக்குகளும், "சிங்கள தீவிரவாத அமைப்புக்களும் சிறுபான்மை இனமொன்றில் சிங்கள இனம் தங்கி நிற்பதா? உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும்" எனக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. இது வடக்குக் கிழக்குத் தமிழருக்கு இனிவரும் நாள்களில் பெரிய நெருக்கடியைக் கொடுக்கவிருக்கும் முன்னறிவிப்பாகவே கருதப்படத்தக்கது.

**தமிழர் அரசியலால் பன்னாடுகளுக்குப் பாதிப்பில்லை**

இலங்கைத் தமிழர் விடயத்தில் இலங்கைத் தமிழர்களை மையமாக வைத்து அரசியல் நடத்த வேண்டிய தேவை இந்தியாவுக்கோ, சீனாவுக்கோ , அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கோ இல்லை. இலங்கை விவகாரத்தை கையாள்வதற்குப் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கட்சிகளும் தலைவர்களும் பொதுமானவை. இதில் முதன்மையானதாக ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்க சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் போதுமானவை. தமிழரே, முஸ்லிம்களோ அரசியலைக் கைவிடுவதால், மேற்படி நாடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடப் போவதில்லை அவர்களுக்குத் தேவை பொரும்பான்மையினரான சிங்களவரின் கட்சிகளைக் கையாள்வதாகும். தமிழ் மக்கள் தமது வாக்குகளை எந்தக் கட்சிக்கு வழங்கினாலும் அந்த வாக்குகள் இறுதியில் ஏதோவொரு பெரும்பான்மைக் கட்சிக்கே வாய்ப்பாக அமைகின்றன. சிங்கவர்களுக்கிடையில் நிலவுகின்ற அரசமைக்கும் போட்டியில் தமிழ் முஸ்லிம் கட்சிகள் பேரம் பேசப்படுவதும், பணத்துக்கு விலைக்கு வாங்கப்படுவதும், உறுப்பினர்களைக் கட்சி மாற்றுவதும் நிகழ்கின்றன. இவ்வாறான சூழலால் பேரம் பேசக்கூடிய நிலையிலிருக்கின்ற தமிழ், முஸ்லிம் கட்சிகள் இறுதியில் தமது மக்களின் தேவைகளைக் கைவிட்டு தாமாகவே மேற்படி கட்சிகளுடன் இணைந்து போக வேண்டிய நிலை காணப்படுகின்றது. இந்த நடைமுறை பெரும்பாலும் நிபந்தனை யற்ற ஆதரவு என்று அறிவிப்பதுடன் முடிந்து விடும். இந்த முடிவானது அவர்கள் சார்ந்திருக்கும் மக்களுக்கு எந்தவித பயனையும் கொடுக்கப் போவதில்லை. இதில் பாதிக்கப்படுகின்ற இளைஞர், யுவதிகள் சிங்களக் கட்சிகள் சார்ந்து நிற்கின்ற தமிழரைப் பதவிக்குக் கொண்டுவரும் நிலையை ஏற்படுத்தும்.

**பாரம்பரியத் தமிழ், முஸ்லிம் கட்சிகள் கரைந்துபோகும் நிலை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி ஏற்கனவே சிதைவடையத் தொடங்கி விட்டது. தற்போது அது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு துணைக் கட்சியாக வெளிப்படையாக மாறியிருக்கிறது. இந்த முதன்மைக் கட்சிகளின் அரசியலால் தமிழ்க் கட்சிகள் தமது தனித்துவத்தை இழப்பதுடன் தமிழ் மக்களது தீர்வு விடயத்தை வெளி நாடுகளுக்கு எடுத்துக்கூறி நியாயம் கேட்க முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது. தற்போதுள்ள இலங்கை நாடாளுமன்ற நடைமுறைச் சிக்கலுக்கு மத்தியில் அரச தலைவரிடம் கூட்டமைப்பு எழுத்து மூல ஆதரவை வழங்கியதன் மூலம் முடிவொன்று எட்டப்பட்டுள்ளது.

**வாய்ப்புக்களைத் தவறவிட்டால்...**

ஒரு பெண் தனது இளமையும் அழகும் நிறைந்திருக்கின்ற திருமண வயதில் திருமணம் செய்துகொள்வதற்குத் தனக்கிருக்கின்ற வாய்ப்புக்களைத் தவறவிட்டால், அவள் முதிர் கன்னியாக வந்த பின் செயற்கை அழகுபடுத்தல் மூலம் தன்னை இளமையானவளாக அழகு படுத்த வேண்டியிருக்கும். இத்தகையநிலையே இன்று தமிழரின் அரசியல் காணப்படுகின்றது. வடக்குக் கிழக்குத் தமிழரின் அரசியல் ஏனைய சக்திகளால் இலகுவாகக் கையாளும் நிலையிலே உள்ளது. இலங்கையின் உள்நாட்டு அரசியலும், பிராந்திய அரசியலும் எவருடைய கையில் இருக்கவேண்டும் என ஆதிக்க சக்திகள் விரும்புகின்றனவோ அவர்களின் பக்கமே தமிழர்களாலும் நிற்கமுடிகிறது. தவிர சுயமாக நிற்க முடியாதுள்ளது.

இலங்கையின் ஜனநாயகமும், நீதித்துறையும் நாடாளுமன்ற அதிகாரங்களும், தமிழருக்கான அரசியல் தீர்வொன்றை எழுத்து மூலம் முன்வைத்தாலும் அந்தத் தீர்வுத் திட்டம் இலங்கையின் அதியுயர் பௌத்த பீடமான அஸ்கிரிய, மற்றும் மல்வத்த பீடங்களின் வாசல்படி வரைதான் செல்ல முடியும் என்பதைக் காலம் மறுபடியும் மறுபடியும் தமிழர்களுக்குக் கற்றுக் கொடுத்துக்கொண்டே இருக்கும்.

# அமைதியான குளத்தில் மீன்பிடிப்பது எளிது!

செ.உமாசுதன்

தமிழினம் எப்போதுமே வேதனைகளையும். சோதனைகளையும் தாண்டிய சாதனைக்குரியது. அவர்களுடைய அடையாளம் என்பது தோல்வியைத் தாண்டிய வெற்றி எனலாம். ஓராயிரம் தோல்விகளைக் கற்றுத் தெளிந்த இனம் என்பதனாலோ, என்னவோ, இலங்கை அரசுக்கு முண்டு கொடுக்கின்ற உலக வல்லரசு நாடுகளின் மறைமுகமான இராஜதந்திர நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் இலகுவாக மோப்பம் பிடித்து அதற்கான எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்த முனைகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் போதித்துப் பயணித்த விடுதலை என்ற உணர்வின் பாதை வழி நடைபயிலத் தலைப்படுகின்றனர். இதையே அண்மையில் தமிழர் தாயகமெங்கும் நிகழ்ந்தேறிய நவம்பர் 27 மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் எடுத்தியம்பி நிற்கின்றன.

**நயவஞ்சகச் செயற்பாடுகளை மக்கள் அறிந்துகொண்டுள்ளனர்!**

சூழ்ச்சியால் மட்டுமே தமிழரை வெல்ல முடியும் என்பதற்குப் பல்வேறு சான்றுகளைக் காலம் காலமாக வரலாறாக அறிந்து வந்தாலும், 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் வல்லரசு நாடுகள் பலவும் இலங்கை அரசோடு கூட்டிணைந்து ஈழத்தில் நடத்திய வரலாறு காணாத இனப்படுகொலைச் சம்பவம் மனிதமுள்ளவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்ச்சியின் கொடூரமாக நிலைபெற்றிருக்கிறது. உண்மையில் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், ஓலமிட்டு, உதவிக் கரம் நீட்டுங்கள் என்று அவலக்குரல் எழுப்பியபோது வல்லரசு நாடுகள் எந்த உதவியையும் செய்யவில்லை. மனிதாபிமான உணர்வற்ற தேசமாக, 'ஐயோ!' என்ற பரிதாபத்துடன் பார்த்த இந்தியா உட்பட்ட ஏனைய உலக நாடுகளின் இரக்கமற்ற இந்த உலோபித் தனத்தையும், நயவஞ்சகத் தனத்தையும் தமிழ் மக்கள் நன்கு புரிந்து வைத்துக் கொண்டுள்ளனர்.

**பன்னாடுகள் சுயநல நோக்கோடு செயலாற்றுகின்றன!**


தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்குவாரங்கள் குறித்துப் பன்னாடுகள் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அதீத அழுத்தங்களைக் கொடுப்பதாகத் தெரியவில்லை. வெறுமனே வார்த்தை நயத்தோடு, தங்கள் நாட்டைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கைக்கான தூதுவர்களை உசுப்பிவிட்டு, உப்புச் சப்பில்லாத நிகழ்த்துக் கலைகளையே அவ்வப்போது அரங்கேற்றி வருகின்றன. ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டுகொள்ள முடியவில்லை. சுயநலமும், சூழ்ச்சியும் மிக்க இராஜதந்திர மனநலக் குறைவே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

அரசியல் என்ற குட்டையில் அதிகார மீன்களாக வலம் வருவதற்கு அவ்வப்போது காய்களை நகரத்துபவர்களுக்குச் 'செண்டு' கொடுக்கின்ற விகார வண்டுகளாகவே இவர்கள் பறந்து திரிகின்றனர். தமிழினப் படுகொலை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட ஐ.நாவின் தீர்மானங்கள் தனித்து ஓசை தரும் ரீங்காரமாகவே காலத்தின் வழி கடந்து போகின்றன. இலங்கை அரசின் அகங்காரங்களை அடக்கி ஒடுக்குவதாகத் தெரியவில்லை.

**பொருத்தமான அரசமைப்பு இன்மையால் ஜனநாயகம் சிதைவடைந்துள்ளது!**

ஆண்டாண்டு காலமாக இலங்கையில் மாறிமாறிப் பெரும்பான்மைக் கட்சிகளாக அரச சிம்மாசனத்தின் சூட்டில் திளைத்துக் கிடந்தவர்கள் தற்போது பிரிந்து நின்று மல்லுக்கட்டுகின்றனர். அதிகாரப் போட்டியில் திழைத்து இனவாதக் கருத்துக்களை உச்சரிக்கின்றனர். ஜனநாயகத்தை அந்தரிக்கச் செய்துள்ளனர். மக்களை மயக்க நிலையில் வைப்பதற்கான உத்திகளைத் தேடிக் கண்டுபிடித்து அதை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். மாறி மாறி அரசியல் பாதையில் நடந்து வருகின்ற இவர்கள் புதிய வழியை மக்களுக்கு உருவாக்குவதாக வீரவசனம் பேசியே கடந்த காலத்தில் தமிழ் மக்களின் ஆதரவைத் தமதாக்கிக் கொண்டுள்ளனர். நல்லாட்சிக் கரங்கள் நாற்றமெடுக்கத் தொடங்கிவிட்டன. மைத்திரி ரணில் கூட்டு, மைத்திரி மகிந்த கூட்டு என அங்குமிங்கும் ஆட்சியதிகாரம் இழுபறிப்பட்டுத் தீராத தொற்று வியாதிகள் ஏற்பட்டுள்ளன. பேரம் பேசல்கள், பணப் பரிமாற்றங்கள், கட்சி தாவுதல்கள், அதற்கேற்ற சால்வையைப் போர்த்திக் கொள்ளுதல்கள், அதற்குரிய விளக்கங்கள்... என அத்தனை குணங்குறிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இழிவுத்தனத்தை எடுத்தியம்பி நிற்கின்றன. நிலையற்ற, பொருத்தமான அரசமைப்பு இன்மையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

> இந்த அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் ஆட்சி அமைக்கும் தரப்பைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் முன்னிலை பெறுகின்றது. கூட்டமைப்பின் தேவை என்பதும் அதன் முக்கிய பீடமும் பலசந்தர்ப்பங்களில் உணரப்படுகின்றன.



**வினைத்திறனற்ற தமிழர் பிரதிநிதித்துவங்கள்**

இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வழக்கம்போல வினைத்திறனற்றுச் செயலாற்றத் தொடங்கியுள்ளனர்.

இந்த அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் ஆட்சி அமைக்கும் தரப்பைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் முன்னிலை பெறுகின்றது. கூட்டமைப்பின் தேவை என்பதும் அதன் முக்கிய பீடமும் பலசந்தர்ப்பங்களில் உணரப்படுகின்றன. அதைத் தமது மக்களுக்குச் சாதகமான முறையில், ஏதாவது ஒரு பயனுறுதியையாவது பெற்றுக் கொள்வதாக மாற்றியமைக்கும், வெற்றி கொள்ளும் திறன் கூட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரிய வில்லை. தெளிவாக இருக்கிற குளத்தில் மீனை இலாவகமாகப் பிடிக்க முடியும். அண்மைய நாளில் மைத்திரிபால சிறிசேனவுட னும், ரணில் விக்கிரம சிங்கவுடனும் இடம் பெற்ற சந்திப்புக்களின்போது, போர்க்குற்ற விசாரணை தொடர்பில் வலியுறுத்தவில்லை. தீர்க்கமான நிலைப்பாடின்றிக் கடந்த ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த சூழ்ச்சி அரசியல் நகர்வுக்கு முன்பான அரசுக்கு (ஐக்கிய தேசிய முன்னணி) ஆதரவு தருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் பொருத்தமான அடைவுகள் இதுவரை கண்டுகொள்ளப்படாத நிலையில், இவர்களுடைய முடிவை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்ற குழப்பத்தில் மக்கள் உள்ளனர். மக்களுடைய கருத்து இதற்கு முரணானதாகவே காணப்படுகிறது. மக்கள் மனங்களில் விதந்து கிடக்கின்ற கருத்துக்களைத் தலைவர்கள் மனங்கொள்ள வேண்டும். இந்த நிலமைகள் தொடர்ந்தால் புரட்சியாளன் டெஸ்கார்ட்ஸ் கூறியது போல, "எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்...!" என்று ஆபத்தைச் சந்திக்கத் தயாராகி எண்ணற்ற மக்கள் ஒன்றுதிரண்டு கூடும் காலம் விரைந்து வரலாம்.

உலகைத் தன்னுடைய படைகளாலும், நடவடிக்கைகளாலும் மிரள வைத்துக் கொண்டிருந்த ஹிட்லரின் சாவு அவருடைய அவசரத்தால்தான் தீர்மானிக்கப்பட்டது. எப்படியும் ரஷ்யாவை வீழ்த்திவிட வேண்டும் என்பதில் அவர் காட்டிய அவசரம், ரஷ்ய பனிமலைகளில் ஜேர்மானியப் படைகளைத் தோல்வியடையச் செய்தது. அமைதியான குளத்தில் மீன்பிடிப்பது எளிது. அதை விடுத்துக் கலங்கிய குட்டையில் என்னதான் நீங்கள் சிரமப்பட்டுத் தூண்டில் வீசினாலும் மீன்கள் அகப்படுவது அரிது! புரிந்துகொண்டு செயலாற்றுங்கள். அவசரம் அபாயகரமானது என்ற வெற்றியாளர்களின் வேதசூத்திரம் உங்களுக்குள் ஒரு மந்திரமாகவே ஒலித்துக் கொண்டிருக்கட்டும்!

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப் படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



## ராஜீவ் கொலை விவகாரத்தில் சிறை அனுபவிப்பவர்களை விடுதலைசெய்யக்கோரிவைகோ தலைமையில் ஆர்ப்பாட்டம்

சென்னை.டிச.4

பேரறிவாளன் உட்பட 7பேரை விடுதலை செய்யக்கோரி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் தலைமையில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது. ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை காலம் முடிந்தும் விடுதலை செய்யப்படாமல்உள்ளபேரறிவாளன்உட்பட7பேரைவிடுதலை செய்யக் கோரி நேற்று ஆளுநர் மாளிகை முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்திருந்தார். இந்தப் போராட்டத்துக்கு தி.மு.க. உள்ளிட்ட தோழமைக் கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

அதன்படி ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் ஏராளமான கட்சி நிர்வாகிகள் சைதாப்பேட்டை சின்னமலை அருகேஒன்றுகூடிஆர்ப்பாட்டம்நடத்தினார்கள். ஆர்ப்பாட்டத்தில் பேசிய வைகோ, "பேரறிவாளன் உட்பட 7 பேரை விடுதலை செய்வதற்கு ஆளுநர் மறுத்து வருவது அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. கண்டிக்கத்தக்கது. உடனே அவர்களை விடுதலை செய்ய வேண்டும்" என்றார். வைகோ முன்னெடுத்த போராட்டத்துக்கு ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன், விடுதலைச்சிறுத்தைகள்கட்சித்தலைவர்திருமாவளவன்மற்றும் வன்னியரசு, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன், துணைப் பொதுச் செயலாளர் சத்ரியன் வேணுகோபால், மே17 இயக்க நிர்வாகிகள், இயக்கத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர்பங்கேற்றனர். போராட்டத்தில்மத்திய மாநில அரசுகளைக்கண்டித்துக்கோஷம்எழுப்பப்பட்டது. இந்தப் போராட்டத்தையொட்டிக் கடுமையான பொலிஸ் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

## பிரான்ஸில் வரலாறு காணாத வன்முறை

# எரிபொருள்விலை உயர்வுக்குஎ

# அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பி



பாரிஸ்.டிச.4

பிரான்சில் பெட்றோல், டீசல் விலை உயர்வுக்கு எதிராக இலட்சக்கணக்கானோர் திரண்டு'மஞ்சள்அங்கியை'அணிந்துபெரும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதனால் அந்த நாடு ஸ்தம்பித்துள்ளது. வன்முறைச் சம்பவங்கள்பெருமளவில்நடந்துவருவதால் அவசரகாலச்சட்டத்தைநடைமுறைப்படுத்து வது குறித்து பிரான்ஸ் அரசு பரிசீலித்து வருகிறது.

பிரான்ஸ்அரசுபெற்றோலியஎரிபொருள்களுக்கு விதித்திருந்தவரிவிதிப்பைத்தொடர்ந்துஅவற்றின் கொள்வனவுவிலைகள்அதிகரித்துள்ளன.இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான இடங்களில் ஆயிரக்கணக்கானமக்கள்திரண்டுபோராட்டம்நடத்தியுள்ளனர். போராட்டத்தால் பிரான்ஸ் ஸ்தம்பித்து போயுள்ளது. போராட்டத்தையொட்டி பெரும் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளனன. ஆயுதங்களுடன் சுற்றிய இளைஞர்கள் பாரீஸ் வீதிகளில் இறங்கி வாகனங்களைச் சேதப்படுத்தினர். வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. வன்முறை கட்டுக்கடங்காமல் நீடிப்பதால் நாட்டில் அவசரநிலையை அறிவிப்பதற்குஅரசுபரிசீலித்துவருகிறது.இதுதொடர்பாகஅதிபர்இமானுவேல்மக்ரோன்உள்துறை அமைச்சருடன்ஆலோசனையைநடத்தியுள்ளார். இதையடுத்துபாதுகாப்புகருதிதலைநகர்பாரிஸில் உள்ள மிகவும் பிரபலமான சுற்றுலாத்தலமான சாம்ஸ்எலிஸீசைப்பொலிசார்நேற்று முன்தினம் மூடினர். மேலும் அங்குவந்த பொதுமக்களைச் சோதனை செய்து அனுப்பினர். இதனால் பொலிசாருக்கும்,போராட்டத்தில்ஈடுபட்டபொதுமக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கடைகள், வங்கிகள்,வணிகவளாகங்கள்,விடுதிகள்மூடப்பட்டன. இதற்கிடையே, பொலிசார் மீது போராட்டக்காரர்கள் மஞ்சள் நிறத் தீந்தையை அள்ளி வீசினர். அத





னால்அங்குவன்மு
தது. போராட்டகார
கலைப்பதற்குக் க
புகை குண்
வீசப்பட்டுள்ளன. இ
பிரான்ஸ்முழுவதும்
600 இடங்களில் பே
கள் வெடித்துள்ளன
லட்சத்துக்கும்மேற்ப
பங்கேற்றுள்ளனர். சி
ளில் போராட்டக்கார
முறையில் ஈடுபட்டு
சொத்துகளைச்சேதப்
ளனர். சிலபோராட்ட
முகமூடிகளை அ
கொண்டு பொலிசார்
களை உடைத்துள்ள
னால் அங்கு பதற்ற
நிலை நிலவுகிறது. அ
தப்பட்டிருந்த சில மகி
. விடுதிகளுக்குவெளி
கப்பட்டிருந்தகிறிஸ்து
களுக்கு ஆகியவற்று
கள் தீயிட்டுள்ளனர்
முன்தினம் நடந்த
போராட்டத்தில் 5 அ

## ஆபாசமாக ஆடை அணிந்த நடிகை மீது வழக்கு

கெய்ரோ.டிச.4

கெய்ரோ பன்னாட்டுத் திரைப்பட விழாவுக்கு ஆபாசமாகஆடைஅணிந்துவந்தநடிகைரானியாயூசெப்மீது கெய்ரோ நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கெய்ரோபன்னாட்டுத்திரைப்படவிழாவில்அந்த நாட்டின் நடிகை ரானியா யூசெப், தொடை தெரிகிற அளவுக்கு ஆபாசமாக மெல்லிய துணியிலான ஆடை அணிந்து வந்து கலந்துகொண்டார். இது அங்கு பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.



இது தொடர்பாக அவர் மீது அம்ரோ அப்தெல் சலாம், சமிர் சப்ரி ஆகிய 2 சட்டத்தரணிகள் கெய்ரோ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அந்த வழக்கில் நடிகை ரானியா யூசெப் ஆபாச உடை அணிந்து வந்தது பாலுணர்வைத் தூண்டுவதாக அமைந்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதையடுத்து, தான் அவ்வாறு ஆடை உடுத்திக்கொண்டு வந்து, திரைப்படவிழாவில்தோன்றியதற்காக நடிகை ரானியா யூசெப் மன்னிப்புக்கேட்டுக்கொள்வதாகக்கீச்சகத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். "இப்படி நான் உடை உடுத்தியது இதுவே முதல் முறை. இது பெருத்த கோபத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும்எனநான்உணரவில்லை" என்றுஅதில்அவர்குறிப்பிட்டுள்ளார். "எகிப்து சமூகத்தின் மதிப்பினைக் காக்க நான் மீண்டும் உறுதி எடுத்துக்கொள்கிறேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிரியாவில்அமெரிக்கக் ஐ.எஸ்.அமைப்பின்மூத்

டமாஸ்கஸ்,டிசெ. 04

அமெரிக்கக் கூட்டுப்படைகள் சிரியாவில் நடத்திய வான்வழித் தாக்குதலில் அந்த நாட்டில் பதுங்கியிருந்த ஐ.எஸ். அமைப்பின் மூத்த தலைவர் சாவடிக்கப்பட்டனர். சிரியாமற்றும்ஈராக்நாட்டில்இருந்து விரட்டப்பட்ட ஐ.எஸ். ஆயுததாரிகள் இரண்டு நாட்டுஎல்லைகளில்உள்ளமலைப்பகுதிகளில்பதுங்கி வாழ்ந்து வருகின்றனர். இவர்களை அங்கிருந்து முழுமையாக அகற்றுவதற்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் தரைவழியாகவும் வான் வழியாகவும் தாக்குதல் நடத்தி வருகின்றன.



இந்த நிலையில், சிரியா நாட்டில் நேற்று அமெரிக்க கூட்டுப்படைகள்நடத்திய வான் வழித் தாக்குதலில் ஐ.எஸ். இயக்கத்தின் மூத்த தலைவர் அபு அல் உமரய்ன் என்பவர் கொல்லப்பட்டதாகக் கூட்டுப்படையின் செய்தி தொடர்பளர் சீன் ரியான் தெரிவித்துள்ளார். கூட்டுப்படைகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கிவந்த அபு அல் உமரய்ன், அமெரிக்க இராணுவச் சிப்பாயான பீட்டர் கசிக் கொல்லப்பட்டதில் தொடர்புடையவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், ரஷ்யா பல
பகுதிகளில் நடத்திய தாக்

# ற

# எதிராகப் போராட்டம்;
# பிப்பதற்கு யோசனை



ன்முறைவெடித்
டகாரர்களைக்
தக் கண்ணீர்ப்
ண்டுகள்
ன. இப்படியாகப்
வதும் ஆயிரத்து
ல் போராட்டங்
ளன. அதில் 1
மேற்பட்டவர்கள்
னர். சில இடங்க
க்காரர்கள் வன்
பட்டுப் பொதுச்
சேதப்படுத்தியுள்
ராட்டக்காரர்கள்
ள அணிந்து
லிசாரின் தடுப்பு
துள்ளனர். இத
தற்றமான சூழ்
து. அங்கு நிறுத்
மகிழுந்துகள்
வெளியேவைக்
ரிஸ்துமஸ்மராங்
வற்றுக்கு அவர்
ளனர். நேற்று
டந்த இந்தப்
5 ஆயிரத்துக்

கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர்.

**பின்னணி**

பிரான்சில் பெட்றோல் மற்றும் டீசலுக்கு அண்மைக்காலத்தில் கூடுதல் வரி விதிக்கப்பட்டது. இதனால் பெட்றோல் மற்றும் டீசல் விலை உயர்ந்தது. அங்கு பயன்படுத்தப்படும் மகிழுந்துகளின் முக்கிய எரிபொருள் டீசல். அதன் விலை, கடந்த 12 மாதங்களில் 23 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது. உலக வெப்பமயமாதலைத் தவிர்க்க எரிபொருள் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பிரான்ஸ் அரசு கூறுகிறது. இதன் காரணாமாகவே, கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுக்கள் மீதான வரியையும் அது உயர்த்தியுள்ளது. இது 2019ஆம் ஆண்டு மேலும் உயரும் என்றும் அறிவித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான முதலீடுகளுக்கு நிதி தேவைப்படுவதால் எரிபொருள் மீது அதிகப்படியான வரி விதிக்கப்படுவதாக அதிபர் மக்ரோன் கூறியுள்ளார். இதுமட்டுமின்றி மின் கட்டணத்தையும் உயர்த்துவதற்குப் பிரான்ஸ் அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இரண்டு வாரங்களுக்கு முன்பு பாரிஸ் நகரில் போராட்டம் ஆரம்பமாகியிருந்தது. எரிபொருள் விலை உயர்வால் அன்றாட செலவுகள் அதிகரிப்பதாக மக்கள் குற்றம்சாட்டினர். மஞ்சள் அங்கியை அணிந்து போராட்டத்தை இளைஞர்கள் சிலரே ஆரம்பத்தில் முன்னெடுத்தனர். பிரான்ஸில் வாகன ஓட்டுநர்களின் ஆடையைக் குறிக்கும் விதமாக இந்த ஆடையை அணிந்து போராட்டம் நடத்தினர். மகிழுந்து ஓட்டுநர்கள் ஒருங்கிணைத்தனர். இந்தப் போராட்டம் பின்னர் மக்கள் போராட்டமாக மாறியது. முகநூல், கீச்சகம் வழியாகவும் பிரான்ஸ் அதிபர் மக்ரோனுக்கு எதிராக தொடர் பரப்புரைகள் நடந்தன. ஆங்காங்கே இளைஞர்கள் கூடிப் பிரான்ஸ் அதிபரைக் கண்டித்துப் போரட்டம் நடத்தினர்.

# க் கூட்டுப்படை தாக்குதல்
# த்த தலைவர் ஒருவர் சாவு



டைகளின் துணையுடன் பல
ாக்குதலில் ஐ.எஸ். ஆயுததாரி

கள் குழுவைச் சேர்ந்த சுமார் 270 பேர் கொல்லப்பட்டதாகச் சிரியா இராணுவம் அறிவித்துள்ளது.



# ஆப்கானிஸ்தானில் வான்வழித் தாக்குதல் தலிபான்களின் முக்கிய தளபதி சாவு!

காபூல்.டிச.4

ஆப்கானிஸ்தானில் அரச படைகள் நடத்திய வான்வழித்தாக்குதலில் தலிபான்களின் முக்கிய தளபதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் தென் பகுதியில் உள்ள ஹெல்மாண்ட் மாகாணத்தில் தலிபான்கள் பதுங்கியிருக்கும் பகுதிகளில் ஆப்கான் அரசு மற்றும் அமெரிக்கப் படைகள் சனிக்கிழமை அன்று வான்வழித் தாக்குதல் நடத்தியிருந்தன. இந்த வான்வழித் தாக்குதலில் 29 தலிபான்கள் சாவடிக்கப்பட்டனர்.

இதன்போதே அப்துல் மனன் என்ற தலிபான் தளபதி ஒருவரும் சாவடிக்கப்பட்டார் . சாவடைந்த அப்துல் மனன் ஹெல்மாண்ட் மாகாணத்தில் தலிபான் பகுதிகளைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் முக்கிய நபராக இருந்தவர். அரசுக்கு எதிராகத் தீட்டப்பட்ட பல போர்த் திட்டங்களில் முக்கிய பங்குவகித்தவர். அப்துல் மனனின் சாவு தலிபான்களுக்குப் பெரும் இழப்பாகக் கருதப்படுகிறது.

அப்துலின் சாவைத் தலிபான்களும், அந்த மாகாணத்துக்குப் பொறுப்பான ஆளுநரான முகமது யசின் கானும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எனினும் அப்துல் மனனின் சாவு குறித்து அமெரிக்காவிடமிருந்து இதுவரை அதிகாரபூர்வ தகவல் ஏதும் வெளிவரவில்லை.

தலிபான்களின் பிடியில் இருந்த ஆப்கானிஸ்தானை, 2001ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான 'நேட்டோ' படைகள் மீட்டன. எனினும், ஆப்கானிஸ்தானில் அண்மைக்காலமாக இராணுவத்தினர், பொலிசாரைக் குறிவைத்துத் தலிபான் அமைப்பினர் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# 'ஒபெக்'கிலிருந்து விலகுகிறது கட்டார்!


டோஹா.டிச.4



பெட்றோலியப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பான 'ஒபெக்' அமைப்பில் இருந்து விலகப்போவதாகக் கட்டார் திடீரென அறிவித்துள்ளது. இதுகுறித்துக் கட்டாரின் பெட்றோலியத்துறை அமைச்சர் சத் அல் காவ்பி அதன் தலைநகர் டோஹாவில் செய்தியாளர்களிடம் கூறுகையில், "'ஒபெக்' கிலிருந்து வெளியேற முடிவுசெய்துள்ளோம். ஜனவரி 1ஆம் திகதி முதல் இந்த முடிவு நடைமுறைக்கு வருகிறது. 'ஒபக்' நாடுகளின் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

அந்தக் கூட்டத்தில் எங்கள் முடிவைத் தெரிவித்து விடுவோம்" என்றுள்ளார்.

கட்டாரின் இந்த முடிவு பெட்றோல், டீசல் விலை நிலவரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் எனத் தெரிகிறது. அதுபோலவே அரபு நாடுகளிடையே மீண்டும் மோதல் தொடங்கும் சூழல் உருவாகியுள்ளது. ஆயுத அமைப்புக்களுக்குக் கட்டார் ஆதரவு அளிப்பதாகக் குற்றம் சாட்டி அந்த நாட்டுடன் சவூதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 4 நாடுகள் தூதரக உறவைத் துண்டித்தன. இதனால் மிகப்பெரிய பின்னடைவையும், பொருளாதார பாதிப்பையும் கட்டார் சந்தித்தது. அந்த நாட்டுடன் விமானசேவை நிறுத்தப்பட்டது. தனக்குத் தேவையான பொருள்களைத் தரை வழியாக அயலிலுள்ள நாடுகளான மற்றைய அரபு நாடுகள் வழியாகத் தான் கட்டாரால் இறக்குமதி செய்ய முடியும். ஆனால் அந்தப் பாதையைச் சவூதி அரேபியா அடைத்ததால் பெரும் இன்னலுக்குக் கட்டார் ஆளானது. உணவின்றித் தவிக்கும் சூழல் ஏற்பட்டு அந்த நாட்டுப் பொருளாதாரம் முடங்கியது. இதன் பிறகு அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் தலையிட்டுப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு கண்டன. இந்தச் சிக்கலில் இருந்து கட்டார் தற்போது தான் வெளியே வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான், எண்ணெய் வள நாடுகளான அரபு நாடுகளை மையமாகக் கொண்டு இயங்கும் பெட்றோலியப் பொருள்களின் உற்பத்தி நாடுகள் கூட்டமைப்பான 'ஒபெக்கில்' இருந்து வெளியேறப்போவதாகக் கட்டார் திடீரென அறிவித்துள்ளது.



# சவால்கள் பிடிக்கும் – சமந்தா

திருமணத்துக்குப் பின்னர்தான் சமந்தாவின் சினிமா வாழ்க்கை உச்சத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. கதாநாயகியாக அவர் நடித்த 'யுரொன்' படம் வெற்றி அடைந்ததால் தொடர்ந்து அதுபோன்ற படங்களில் நடித்து வருகிறார்.

தென் கொரியாவில் 2014ஆம் ஆண்டு வெளியான படம் மிஸ் கிரானி. வயதான பெண் எதிர்பாராதவிதமாக இளவயதுத் தோற்றத்தை அடைவதை மையமாகக் கொண்டு உருவாகி வசூல் ரீதியாக நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்தப் படத்தின் தெலுங்கு ரீமேக்கை நந்தினி ரெட்டி இயக்குகிறார். இதில் 50 வயதுப் பெண்ணாகச் சமந்தா நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு தற்போது தொடங்கியுள்ளது. இந்தக் கதாபாத்திரம் குறித்துச் சமந்தா தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுவரை நான் செய்யாத சுவாரசியமான கதாபாத்திரத்துக்காகத் தயாராகி வருகிறேன். இப்போது யோசித்துப் பார்த்தால் நான் பயப்படுபவளாகவும் எப்போதும் பதற்றம் கொண்டவளாகவுமே இருந்திருக்கிறேன். ஆனால் ஒரு போதும் சவாலை எதிர்கொள்ளத் தவறியதில்லை. சவால்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். பெரும்பாலான நேரங்களில் நாம் நினைப்பதை விடவும் தைரியமானவர்களாகவே நாம் இருக்கிறோம் என்று படத்தின் பெயரைக் குறிப்பிடாமல் தனது கதாபாத்திரம் குறித்துக் கூறியிருப்பதுடன் படங்களைத் தேர்வு செய்யும்போது இருக்கும் மனநிலை குறித்தும் பதிவு செய்துள்ளார்.




**மேடம்:** வாழ்வில் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டி மறையும். வருமானம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் வருமானம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** அவசரப்பணியால் சிரமத்துக்கு ஆளாகலாம். அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபாரம் மந்த கதியில் இருக்கும். இலாபம் சுமார்.

**கடகம்:** பொது விஷயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் பன்மடங்கு உயரும்.

**சிங்கம்:** மனதில் சந்தோஷம் குடியிருக்கும். நீண்டநாள் திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் பெருகும்.

**கன்னி:** மற்றவர் மீது அதிருப்தி கொள்ள நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் குளறுபடியை சரி செய்வீர்கள். செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும்.

**துலாம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். உற்சாகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும்.


**விருச்சிகம்:** வெளி வட்டாரத் தொடர்பால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்தியளிக்கும். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.


**தனுசு:** பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மகரம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.


**கும்பம்:** நல்லவர்களின் அறிமுகமும், நட்பும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**மீனம்:** நேர்மை மிக்கவராக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில்லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.






## அன்று - இன்று




விதி விளையாடுதுன்னு சொன்னா....



ஸ்கோர் எவ்வளவுன்னு கேக்கிறான்....

பாறைகளின் இடுக்குகளில் வளர்வது தாவரங்கள் அல்ல
**தன்னம்பிக்கை**

தேன்கூட்டில் இனிப்பது தேனல்ல
**உழைப்பு**

கூட்டைப் பிளந்து வெளியே வருவது குஞ்சுகளல்ல
**விடாமுயற்சி**

நம்ம ஊர் மக்கள் இலவசம் என்றதும் மூஞ்சியைச் சுழிக்கும் ஒரே விசயம்...



இலவசக் கழிப்பிடம் மட்டுமே.!



சம்பளம் வாங்கும் முன்னாடி

சம்பளம் வாங்கிய அன்று...

சம்பளம் வாங்கி ஏழு நாள் கழித்து...

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 6 | 5 | | | |
| | | | | 4 | 1 | | 2 | |
| 9 | | | | | 3 | 5 | | 1 |
| | 1 | 8 | 7 | | 9 | | | 5 |
| | | | | 2 | | 8 | | |
| 7 | 3 | 6 | | 8 | | | 1 | |
| | | 3 | 6 | 1 | 2 | | | 4 |
| 5 | 6 | 4 | 3 | | | | | |
| | | | | | | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 8 | 4 | 7 | 9 | 6 | 1 | 3 |
| 3 | 9 | 4 | 1 | 8 | 6 | 2 | 5 | 7 |
| 7 | 1 | 6 | 2 | 3 | 5 | 4 | 9 | 8 |
| 1 | 7 | 3 | 5 | 6 | 2 | 9 | 8 | 4 |
| 9 | 4 | 2 | 8 | 1 | 3 | 5 | 7 | 6 |
| 6 | 8 | 5 | 7 | 9 | 4 | 1 | 3 | 2 |
| 4 | 3 | 1 | 9 | 2 | 8 | 7 | 6 | 5 |
| 2 | 6 | 9 | 3 | 5 | 7 | 8 | 4 | 1 |
| 8 | 5 | 7 | 6 | 4 | 1 | 3 | 2 | 9 |

விளையாடித் திரிந்த வீதிகளை விதவைகளாக்கிய பெருமை அலைபேசிகளையே சாரும்.......!!

# சுவர் இருந்தால்தான் ....



புத்தகப் பையுடன் பள்ளிக்கூடம் புறப்பட்டான் அப்பு.

"அப்பு குளிக்கவில்லையா" என்றாள் சமையல் அறையில் இருந்து அம்மா. " நேரம் போச்சம்மா நாளைக்கு இன்றைக்கும் சேர்த்துக் குளிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அப்பு ஓடி விட்டான். அப்பு ஐந்தாம் தரம் படிக்கிறான். வகுப்பில் முதல் மாணவன் அவன்தான். அவனது அம்மாவுக்கும் அது பெருமைதான் என்றாலும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை என்பதில் அவளுக்கு மகவும் கவலை. காலையில் குளிப்பதில் விருப்பமில்லை, பல்துலக்குவதில் அக்கறையில்லை, அம்மாவின் கட்டாயத்துக்காக பல் துலக்குவதுபோல பாசாங்கு செய்வான் அவனது நண்பர்கள் "ஏன் நீ பல்துலக்குவதில்லை?" என்று கேட்டால், "ஆடு, மாடு, பூனை, நாய்க்குக் கூட பல் இருக்கிறது. அவை பல்துலக்குவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" எனக் கிண்டலாகப் பதில் கூறுவான். அப்பு நன்றாகப் படிப்பதால் ஆசிரியர் கூட அவனிடத்தில் இது விடயங்களில் கண்டிப்பாக நடந்து கொள்வதில்லை. நாளாக நாளாக வயது ஏற அவன் திருந்திவிடுவான் என நினைத்துக் கொள்வார். அரையாண்டுப் பரீட்சை வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருந்தான். முதல் மாணவன் என்ற இடத்தைத் தன்னைக் தவிர எவரும் எடுத்து விடக் கூடாது என்பதில் அவன் மிக்க கவனமாக இருந்தான். "அப்பு குளிச்சுப் போட்டு இருந்து படிச்சுப்பார். இன்னும் உற்சாகமாகப் படிக்கலாம்" என்றாள் அம்மா "குளிக்கிற நேரத்தில ஒரு பாடமாவது படிசச்சிடலாம் அம்மா" அவன் பதில் " சரி பல்லை விளக்கி விட்டாவது படிக்கலாமே" அம்மாவுக்குக் கொஞ்சம் கோபம் ஏறி விட்டது. "அப்பு நீ மட்டுமா எனக்குப் பிள்ளை உன் தம்பி தங்கைகளையும் நான் கவனிக்க வேண்டாமோ" என்று அலுத்துக் கொண்டாள். "சரி சரி ... நான் எல்லாம் செய்யுறன் ஆனா படிக்கமாட்டன் போதுமா? என்றான் அப்பு "சரி நீ போய்ப்படி" எங்கே அவன் படிக்காது விட்டு விடுவானோ என்று அம்மா. இந்தநிலையில்,

பரீட்சைக்கு இரண்டுநாள்கள் இருக்கையில் அப்புவுக்கு பல்வலி ஏற்பட்டது. அன்று பாடசாலை சென்று திரும்பும்போது அவன் தாடைப்பகுதி வீங்கி, வலியும் கூடியிருந்தது. உடலும் கொஞ்சம் கொதிக்கத் தொடங்கியது. ஆசிரியரின் ஆலோசனைப் படி அம்மா அவனை மருந்துவமனையில் சேர்த்தார்.

பற்களைப் பரிசோதித்த மருத்துவர் பற்களை ஒழுங்காகக் கவனிக்காததால் பற்சூத்தை ஏற்பட்டுள்ளதென்றும் அது பல்வேரை பாதித்துள்ளதென்றும் உடனேயே பல்லைப் பிடுங்க வேண்டும் இல்லையேல் ஆபத்தென்றும் கூறினார். சொத்தைப்பல் நீக்கப்பட்டது ஒரு வாரம் வரை அப்பு வைத்தியசாலையில் இருந்தான். பரீட்சை எழுதவில்லை தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட்டது. தான் முதல் மாணவனாக வராததையிட்டு அப்பு தேம்பித் தேம்பி அழுதான். " சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால் தான் எதையும் வெற்றிகரமாகச் செய்யமுடியும் என்று ஆசிரியர் அப்புவை சாமாதானம் செய்தார்.

**சுத்தம் சுகம்தரும்**
**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**

## அறிஞர்களின் சிந்தனைகள்

- பகைவனின் புன் சிரிப்பை விட நண்பனின் கோபம் மேலானது.
  - ஜேம்ஸ்ஹோபெல்-
- நல்ல யோசனை தோன்றும்போது அதை உடனே செய்து முடியுங்கள் வெற்றி உங்கள் பக்கம்
  -ஸ்டோன்-
- எந்தத் தொழிலும் இழிவில்லை, தொழில் எதுவும் செய்யாதிருப்பதுதான் இழிவு
  -டால்ஸ்டாய்-
- தம் கால்களால் பறவைகள் மனிதனிடம் சிக்கிக்கொள்ளும் தன் நாவால் மனிதன் துன்பத்தில் சிக்கிக்கொள்வான்.
  -தோமஸ்புல்லர்-
- எவரிடம் உன் எண்ணங்களை வெளிப்படையாகச் சொல்ல முடியுமோ அவனே உன் உண்மையான நண்பன்.
  - எமர்சன்-
- அன்னையின் இதயமே குழந்தைகளின் பள்ளிக்கூடம்
  -டீச்சர் -
- தன்னை தனியே எவனொருவன் நிற்கத்துணி கிறானோ அவனே உலகில் வலிமைமிக்க மனிதன்.
  - மத்தியூஸ்-
- பொறுமை இல்லாதவர்கள் நீதிமான்களாக இருக்க முடியாது
  -மார்க்ஸ்-
- அளவில்லாத சோதனைகளைத் தாங்கிச்சாதனை படைக்கிறவன்தான் மேதை
  - ஹோம்கின்ஸ்-
- உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒரு நாளும் துன்பமடையார்.
  -காந்தியடிகள்-

# தாயுமானவர்

பிரிட்டனில் உள்ள 'பிளக் பூல்' உயிரினப் பூங்காவில் வாழ்ந்து வரும் வாலஸ் ஆண் சிங்கம் ஒன்று இதுவரை ஆண் சிங் கங்கள் பற்றி ஆய்வாளர்கள் கருதி வந்த எண்ணங்களை மாற்றியமைத்துள்ளது. இந்தப் பூங்காவில் வாழ்ந்த ஆணும் பெண் ணுமான இரண்டு சிங்கங்களுக்கு 2015இல் ஹர என்ற ஆண் குட்டி ஒன்றும் பிறந்தது. குட்டி பிறந்த 9 மாதங்களில் தாய்ச் சிங்கம் நோய்வாய்ப்பட்டு இறந்துபோனது. பெண் சிங்கங்களே குட்டிகளை வளர்ப்பது இயல்பு. குட்டிகளுக்கு வேட்டையாடக் கற் றுக் கொடுத்துப் பராமரிப்பதும் அவைகளே. ஆண் சிங்கங்கள் இனப் பெருக்கம் செய்வதோடு கடமையை முடித்து விடுகின்றன.




தமக்குப் பசி எடுக்கும் போது மட்டும் ஆண் கள் வேட்டையாடும்.

அதுவும் பெண் சிங்கங்கள் தான் வேட்டை யாடுவதில் அதிக அக்கறை காட்டும் பெண் வேட்டையாடுவதிலே ஆண் சிங்கம் பங்கு போட்டு உண்ணும். அவ்வளவுதான்.

ஆனால் கண் முன்னே தன் துணை இறந்த சோகத்தில் இருந்த வாலஸ் என்ற அந்தச் சிங்கம் சில நாள்களில் குட்டியை அன்புடன் கவனிக்க ஆரம்பித்தது. தனக்கு அளிக்கப்படும் உணவைக் கொடுத்து குட் டியைச் சாப்பிட வைத்தது. குட்டியும் தொடர்ந்து சென்றது. தகப்பன் கர்ஜிப் பதைப் பார்த்து வெகு விரைவி லேயே குட்டியும் கர்ஜிக்கத் தொடங்கியது. வேட்டையா டும் வித்தையை யும் கற் றுக் கொண்டது. "ஆண் சிங்கம் பற்றிய எண் ணத்தையும் அது தொடர்பான பல்வேறு பட்ட ஆய்வு முடிவு களையும் மாற்றியுள் ளது வாலஸ் என்ற இந்த சிங்கம் என்கிறார் உயிரினப் பூங்காவின் அதிகாரியான அடம்.

## வர்ணம் தீட்டுவோம்



# சகிப்புத் தன்மை!

ம. இராமநாதன்

## சமுதாயப் பண்பாடுகளில் முதன்மையான ஒழுக்க நெறி

அந்தப்பேருந்து மெல்லமெல்ல நகர ஆரம்பித்ததும் எங்கிருந்தோ ஓடி வந்து அவசரமாய்த் தாவி ஏறி, கூட்டத்தினுள் முண்டியடித்து நுழைய முற்பட்ட அந்த இளைஞன் தெரியாத்தனமாய் ஒரு நடுத்தர வயதுக்காரரின் காலை தன் பூட்ஸ் காலால் மிதித்துவிட்டு நடுநடுங்கிப் போனான். தொடர்ந்து அவரிடமிருந்து வந்து விழப் போகும் வசை மழைகளைத் தாங்கிக் கொள்ள அவன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்க, அந்த நடுத்தர வயதுக்காரரோ சிறிதும் கோபமின்றி 'பார்த்துத் தம்பி" என்று அமைதியாகச் சொல்லிவிட்டு சிநேகமாய்ப் புன்னகைத்தார். வியப்பு மேலோங்க விக்கித்துப் போய் சிலையாய் நின்றான் அந்த இளைஞன். 'இந்தக் காலத்திலும் இப்படியொரு மனிதரா?"


மேலே விவரிக்கப்பட்ட காட்சியில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய பாத்திரம், 'அந்த நடுத்தர வயதுக்காரர்" என்றால் அதைவிடக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய அம்சம் அந்தப் பாத்திரத்தின் குணாதிசயம். ஆம், சகிப்புத் தன்மை!

மனிதனுடைய சமுதாயப் பண்பாடுகளில் மிகவும் முக்கியமானவொன்று சகிப்புத் தன்மை. இது ஆண்டவன் தந்த பரிசு எனலாம். ஏனெனில் இது எல்லா மனிதர்களிடத்திலும் சமமான அளவில் இருப்பதில்லை. சிலர் மிகவும் சகிப்புத் தன்மை உடையவர்களாக இருப்பர். சிலரோ சிறிதும் சகிப்புத் தன்மை அற்றவர்களாக இருப்பர். பொதுவாகவே சகிப்புத் தன்மைக் குணம் அதிகமாய் உள்ளவர்கள் வாழ்க்கையை எல்லாச் சூழ்நிலைகளிலும் எளிதாகக் கடந்து விடுகின்றனர். மாறாக சகிப்புத் தன்மைக் குணம் குறைவாய் உள்ளவர்களோ அரைவேக்காட்டுத் தனமான அதிரடி முடிவுகளால் அல்லலுற்று, அவதிப்பட்டு அழிந்து விடுகின்றனர்.

**சகிப்புத் தன்மை வலிமையின் அடையாளம்!**

நடப்புச் சமூகத்தில் நல்லவர்களாகவும், பெருந்தன்மைப் பண்பாளர்களாகவும் இருப்பவர்கள் பலமுனைகளிலிருந்து வருகின்ற பலவகையான சொல்லடி மற்றும் இடர்பாடுகளைத் தாங்க வேண்டியிருக்கும். அவ்வாறான பல்முனைத் தாக்குதல் நிகழும் போது அவர்கள் தங்கள் சகிப்புத் தன்மைக் குணத்தைக் கேடயமாக்கி அமைதி காப்பர். அந்த அமைதிதான் அவர்களின் ஆற்றலுக்கு அறிகுறி. வலிமைக்கு உதாரணம்.

அவர்களுடைய அந்த ஆற்றலானது நாட்பட நாட்பட ஆன்மபலமாக மாறி அவர்களின் வாழ்க்கையை மேலும் மேலும் வளம் பெறச் செய்து விடுகின்றது. சகிப்புத் தன்மையில் பக்குவமடைந்தோர் என்றுமே பிறருடன் பிணக்குகள் கொள்வதில்லை. மாறாகப் பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் கூட இன்சொல் கொண்டு இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வர்.




ஒரு நிறுவனத்தில் மேலாளர் பொறுப்பில் இருக்கும் ஒருவருக்கு இந்தச் சகிப்புத் தன்மைக் குணமானது தலையாய பலமாகும். அவர் தன் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் சிறு சிறு தவறுகளுக்காக அவர்களைத் தண்டிப்பது, பணி நீக்கம் செய்வது போன்றவற்றில் ஈடுபடாமல் தன் சகிப்புத் தன்மைக் குணத்தின் மூலம் அவர்களின் முதல் தவறைச் சகித்து, இரண்டாம் தவறைத் திருத்தி, மூன்றாம் தவறை முறைப்படுத்தினாரென்றால் அங்கு நான்காம் தவறின் நிகழ்வே நின்று போய்விடும். அத்தோடல்லாது தொடர்ந்து தவறே செய்த அந்தப் பணியாளர் குறிப்பிட்ட அந்தப் பணியில் நிபுணத்துவம் பெற்று விளங்கவும் சந்தர்ப்பம் ஏதுவாகின்றது. இதுபோன்ற சூழ்நிலையில் அந்த மேலாளருக்கு அவரின் சகிப்புத் தன்மைக் குணமே ஒரு பலமாகி அவருக்கும் பணியாளர்களுக்குமிடையே ஒரு பாலமாகவும் அமைகின்றது.

**சகிப்புத் தன்மை சிறந்த ஒழுக்க நெறி!**

சகிப்புத் தன்மை மறந்த குடும்பங்களில் கணவன்,மனைவி, உடன்பிறப்புக்கள் என்னும் உறவு முறைகள் யாவும் உடைந்து போய்விடுகின்றன. ஒற்றுமை நிலை கெட்டுக் குடும்பமே கலைந்து போகும் நிலை ஏற்பட்டுவிடும். சகிப்புத் தன்மைக் குணம் நிறைந்த குடும்பங்களில் ஒவ்வொருவரின் உறவு முறைகளும் உறவின் தன்மைகளும் தெளிவாகத் தெரிவதால் ஒற்றுமையுணர்வு ஓங்கும்.

அண்மைக் காலங்களில் குடும்ப நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவதற்கான மூலகாரணம் சகிப்புத் தன்மையைத் தொலைத்து விட்ட தன்மையே. ஒரு சிறிய நெல்லிக் கனியை எடுத்து கண்ணருகே வைத்துப் பார்க்க அது பூசணிக்காய் அளவில் பெரிய தோற்றத்தையே தரும். அதேபோல்தான் வாழ்க்கை ஓட்டத்தில் மனித உறவுகளுக்குள் ஏற்படும் சிறிய சிறிய பிரச்சினைகளும். அவற்றை நாம் வெகு அருகில் நின்று கூர்ந்து நோக்கினால் அவை பூதாகரமாய்த்தான் தோன்றும். வித்தியாசம் நம் பார்வையிலேதானன்றி பிரச்சினையில் அல்ல.

மனிதனுடைய சமுதாயப் பண்பாடுகளில் மிகவும் முக்கியமானவொன்று சகிப்புத் தன்மை. இது ஆண்டவன் தந்த பரிசு எனலாம். ஏனெனில் இது எல்லா மனிதர்களிடத்திலும் சமமான அளவில் இருப்பதில்லை. சிலர் மிகவும் சகிப்புத் தன்மை உடையவர்களாக இருப்பர். சிலரோ சிறிதும் சகிப்புத் தன்மை அற்றவர்களாக இருப்பர். பொதுவாகவே சகிப்புத் தன்மைக் குணம் அதிகமாய் உள்ளவர்கள் வாழ்க்கையை எல்லாச் சூழ்நிலைகளிலும் எளிதாகக் கடந்து விடுகின்றனர்.



**சகிப்புத் தன்மை ஏற்றத்தின் அறிகுறி!**

இன்றைய இளைஞர்கள் சகிப்புத் தன்மைக் குணத்தை இளமையிலிருந்தே பழகி வருதல் வேண்டும். அவ்வாறு பழகி வருவார்களேயாயின் அவர்களின் எதிர்கால வாழ்வு நிச்சயம் ஏற்றம்மிக்கதாகத்தான் அமையும். இளைஞர்கள் முதலில் தங்களின் சகிப்புத் தன்மையை தங்களிடத்திலேயே காட்டிக் கொள்ள வேண்டும். பிறகு மற்றவர்களிடத்திலும் காட்டுதல் வேண்டும். யாராவது ஏதாவது குறை கூறும் போது அதைப் பெரிய விடயமாகக் கொண்டு அதற்காக நொந்து போய் வருந்துவது, தங்களைத் தாங்களே மனத்தாலும், உடலாலும் வருத்திக் கொள்வது போன்றவை சகிப்புத் தன்மையற்ற தவறான அணுகுமுறைகள்.

அது மட்டுமல்ல மனிதப் பண்பையே மறந்த மாபெரும் குற்ற முறைகள்.ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கண்டிப்புக்கள் தங்களின் எதிர்கால வளத்தைமுன்னிறுத்தியே நிகழ்த்தப்படுகின்றன என்பதை உணர்ந்து, அவற்றைச் சகித்துத் தங்களைச் செதுக்கிக் கொள்ளும் பட்சத்தில் மாணவர்கள் மாமனிதர்களாக முடியும்.

**சகிப்புத் தன்மை ஓர் சமூகநெறி!**

'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்று கிறித்துவ வேதம் உரைப்பது போல, சகிப்புத் தன்மையை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், சமூகத் தீமைகள் குறைந்து நன்மைகள் பெருக நல்வாய்ப்பு அமைகின்றது. தொட்டில் தொடங்கி காடு வரை நம்மைப் பீடித்திருக்கும் பெரு நோய்களான சாதி மற்றும் மத பேதங்கள் போன்றவைகளுக்கு சரியான மாற்று மருந்து சகிப்புத் தன்மைக் குணமே. மற்றவர்களின் இடையூறுகளை நாம் சகித்துக் கொள்ளப் பழகிடும்போது, அதுவே அவர்களை வெல்லும் வழியாக மாறுகின்றது. அது மட்டுமன்றி நம்முடைய அந்தக் குணமே அவர்களுக்குத் தங்கள் தவறினை உணர்த்தி மாற்றத்தையும் ஏற்படுத்தி விடுகின்றது.

**சகிப்புத் தன்மை அற்புதமான அகிம்சை நெறி!**

வன்முறைகளாலும் போராட்டங்களாலும் சாதிக்க இயலாத பல அரும் பெரும் சாதனைகளை சகிப்புத் தன்மையென்னும் அகிம்சை ஆயுதத்தால் சாதிக்கலாம் என்பதை உலகுக்கு உணர்த்தியவர் காந்தியடிகள்.அதுவிதமே உணவு ஒறுப்பை மேற்கொண்டு உயிராயுதம் தனை ஈந்து ஈழத்தின் விடுதலை உணர்வையும், வேட்கையையும் இந்திய மேலாதிக்கத்துக்கும் உலகநாடுகளுக்கும் உணர்த்தியவர் தியாக தீபம் திலீபன்.அகிம்சை எப்போதும் இடர்தனை விரட்டும் வீரிய குணமாய் அமையும்.

*இருட்டு வெளிதனிலே இழுத்துச் செல்லும்*
*குருட்டு வாழ்விற்கோர் குந்தகம் நேராது*
*மருட்டும் பாதையிலே மலிந்துள இடர்தனையே*
*விரட்டும் வழிகாட்ட வீரியகுண மொன்றுண்டு!*

## வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி (வ.து)

### பதவி வெற்றிடம் (வெளிவாரியானது)

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை சங்க வேலை நாள்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர் வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி என்ற முகவரிக்கு 19.12.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அனுப்பிவைக்க வேண்டும்.

**1. பதவி பெயர் : முகாமையாளர்**

சம்பளக் குறியீட்டு இல.:-
115/10 (கூ.வே. ஆணைக்குழு சு.நி இ 04/2018 இன்படி)

சம்பள அளவுத்திட்டம் :-
17605... 21785 (சுற்று நிருப.இல.04/2018 இன்படி
198 X 10 - 220X 10

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத்திட்டம் தொடர்பாக துறை பதவியொன்றில் (03) மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டம் தொடர்பான வியாபாரப் பதவியொன்றில் ஆறு (6) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமைகள்

**அல்லது**

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர் தரம்) சான்றிதழ்/க.பொ.த (உயர் தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பொதுவானது.**

1. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
2. வயதெல்லை - 18 வயதிற்கும் 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். கூட்டுறவு சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்பமாட்டாது.
3. விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைக்க வேண்டிய பிரதிகள்
   1. கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
   2. வதிவிட உறுதிச் சான்றிதழ்
   3. தேசிய அடையாள அட்டை பிரதி
   4. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
   5. நற்சான்றிதழ்
   6. ஏனைய தகைமைப் பிரதிகள்

மேலதிக தொடர்புகளுக்கு: 076 711 1168

தலைவர்,
வலி. கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.
03.12.2018 (cs.21596) (13.17)

## மரண அறிவித்தல்

### பொன்னையா நல்லையா

**(ஓய்வுபெற்ற அதிபர் – நல்லூர் ஞானோதய வித்தியாலயம்)**



கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நல்லையா 01.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - குணரத்தினம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூரணம், நடராசா, நல்லசேகரம்பிள்ளை மற்றும் இராஜலட்சுமி கனகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுந்தரம் (கனடா), கனகசுந்தரம் (ஜேர்மனி), சறோஜினி (ஓய்வுபெற்ற ஆசிரியை - கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), கருணாதேவி (கனடா), செந்தில்நாதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினி (கனடா), இராசமணி (புஸ்பம் - ஜேர்மனி), அருணகிரிவாசன் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - கோண்டாவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற தவேஸ்வரன் மற்றும் யோகனந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாலகுமார், சர்மிலா, சர்மிலா, சங்கர், நிர்மலா, ஆனந்தகுமார் யாழினி, தினேஸ்குமார், கீர்த்தனா, சிவகரன், தர்சன், புஜிதா, டர்சன் (ஜேர்மனி), இகபரன் (North Link Engineering), யதுஸ்னா (மருத்துவபீட மாணவி - கொழும்பு பல்கலைக்கழகம்), கிசோன், ஆரணி (கனடா), கஜனிதா, சதுசன் ஆகியோரின் அன்புப் பேரனும், அபிசா, தனுஷ் சாகித்தியா, ஜெனிற்றா, நிக்ஷன், திவ்யன், லியான், றியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2018) புதன்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**திருநெல்வேலி** (CS/21595)(11,17)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**077 360 4456**

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை சாந்தலிங்கம்

கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சாந்தலிங்கம் நேற்று (03.12.2018) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்ற சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் சடாட்சலதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தர்மலிங்கம், குணலிங்கம், தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தகுமார் (ரவி, இலங்கை), கிருஷ்ணகுமார் (வசந்தன், லண்டன்), சுரேஷ்குமார் (அகிலன், லண்டன்), சுபாயினி (சாந்தி, லண்டன்), வினோதினி (வினோ, ஆஸ்ரேலியா), காலஞ்சென்ற சபேஸ்குமார் ஆகியோரின் அன்புதந்தையும் ஜெகதீஷ்வரி, கல்யாணி, புஷ்பலதா, ரவீந்திரன், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தாவன், பார்த்தீபன், ஆதவன், ஆசினி, திவ்வியா, துவாரகா, திசிதா, சாருயா, சானுயா, வாகீஸ், ருகேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2018) புதன் கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று ஊர்க்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். இவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்வோம்.

**கொம்மந்தறை,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0770698232/0770581872**

உதயன் விளம்பரத்தொடர்புகளுக்கு advt@uthayan.com

## வேலை வாய்ப்பு

**பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

- ★ Civil Engineers (B.Sc. Eng. Or Equivalent)
- ★ Trainee Engineers
- ★ Trainee Technical Officers

இடம் - கொழும்பு (Appartment Project)
தொடர்புகளுக்கு : Spiritmax Engineering (Pvt) Ltd.
Email : info@spiritmax.lk, Mobile : 077 074 3037

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் 2019

**கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 12.12.2018 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 12.12.2018 புதன்கிழமை பி.ப 01.00 மணிவரை**

**கேள்விகள் திறக்கப்படும் திகதி : 12.12.2018 புதன்கிழமை பி.ப 3.30 மணி**

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | கும்பலைச்சந்தை | | 165,400.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை | 1,000.00 | 44,600.00 | 1.000.00 | 1,000.00 |
| 03 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,250.00 | 595,200.00 | 10,000.00 | 1,000.00 |

**குறிப்பு :** மேலதிக விவரங்களை 19.10.2018 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பிரசுரமான வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடவும்.

**தலைவர்**
**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**03.12.2018** (IN/8579)(11,17)

**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி- 2018

01. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), வீதி நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல.04/2016(i) ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 04.12.2018– 18.12.2018 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 04.12.2018ஆம் திகதியில் இருந்து 18.12.2018 வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 19.12.2018ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 நாள்களுக்கு (06.02.2019வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 13.12.2018 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/06/ PSDG(B)/ 2018/13 | Construction of Sub lanes of Manatharai Veethy at ward no.03 | 1.763 | 1Week | C9/C8 | 18,000.00 | 06.03.2019 |

**ஆணையாளர்,**
**பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
03.12.2018

(IN/8578)(10)

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை வரவு செலவுத்திட்டம் - 2019

1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 2018.12.04 ஆம் திகதி தொடக்கம் 2018.12.18 ஆம் திகதி வரை பொது மக்கள் பார்வைக்கு எமது தலைமை, உப அலுவலகங்கள் மற்றும் எமது சபை பொது நூலகங்களிலும் வைக்கப்படவுள்ளது. குறித்த வரவு செலவுத்திட்டம் தொடர்பான கருத்துக்களை குறித்தகாலப்பகுதியினுள் சபையின் தலைமை மற்றும் உப அலுவலகங்களில் எழுத்து மூலம் தெரியப்படுத்தலாம் என அறியத்தருகின்றேன்.

**செ.பிரேமகாந்**
**தவிசாளர்,**
**பிரதேசசபை புதுக்குடியிருப்பு.** (in.8577) (13.17)

## 33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**E.K.சண்முகநாதன்**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர் தமிழ்ப்பகுதி – அகில இலங்கை)

தோற்றம்
14.12.1924

மறைவு
04.12.1985

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்த
எம் தெய்வமே!
ஆண்டுகள் பல கோடி சென்றாலும்
மறையாது உம் புகழ்

**இல.4 1/1, பரமேஸ்வரா வீதி,**
**திருநெல்வேலி.** (cs.21443) (13.17)

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



**திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு**

45, கொண்டலடி வீதி, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட திருமதி பரமேஸ்வரி திருநாவுக்கரசு கடந்த (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வு நிலை ஆசிரியர் திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகம் அம்மாக்குட்டி, அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சுரேஸ் (லண்டன்), சுகந்தி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற காங்கேஸின் அன்பு மைத்துனியும் கீதராஜ், அஜித்தா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான லட்சுமி, செல்லம்மா, தம்பிஜயா, சின்னத்துரை, சின்னம்மா, எஸ். பொன்னுத்துரை மற்றும் இராசமணி, மங்கையற்கரசி, சரவணமுத்து, இராஜேஸ்வரி, சரத்சந்திரன், சொல்வேந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கௌசிகா, கௌதரன், யாகுலன், இந்துஜா, கபாரினி, யாதவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**45, கொண்டலடி லேன்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**078 157 7005, 021 222 9064**

# MASSIVE VEHICLES AUCTION SALE

All Types Of Vehicles Including Two Wheel Tractors, Four Wheel Tractors, Harvesters, Motor Bikes, Trucks, Three Wheelers In Excellent Condition

**11th of December**

LOLC Vehicle Facility Centre
STATION ROAD, VAIRAVAPULIYANKULAM,

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View - 08th, 09th & 10th December

(Please refer the Udayan On 06th of December 2018 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 126 Years of Service Excellence.

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
No.6A, Fairfield Gardens, Colombo 8.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com

---

# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1523 சீட்டிழுப்பு திகதி 03.12.2018

வெற்றி இலக்கங்கள் 07 16 54 56 ஆங்கில எழுத்து J

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 22, 312, 472/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3117 திகதி: 2018.12.03 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நீலம்

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 03 22 24 28 D
போனஸ் இலக்கம் 30
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 53,142,875/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

# அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 453
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.03
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,589,125/-

வெற்றி இலக்கங்கள் 04 32 47 53 ஆங்கில எழுத்து G

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com, 021493 1111

---

**உயிரியல் (Biology) வகுப்புகள்**
**தனி** மற்றும் **குழு** வகுப்புகள் **தமிழ்** மற்றும் **ஆங்கில** மொழிமூலம் **076 869 1176**
(CS 867/15/17)

---

## தேவை

நீர்கொழும்புக்கும் கொச்சிக்கடைக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றுக்கு பழைய, பாவித்த தகரப்பொருள்கள் **(Charterd Tins Sheets)** தேவை. பொருள்களை இறக்குமிடத்தில் பணம் உடனடியாகத் தரப்படும்.

**071 494 8309**

---

## நாஹா மருத்துவ நிலையம்

அதி தீவிர கை, கால் செயலிழப்பு, பாரிச வாதம், ஆஸ்மா, தீராத புண்கள், கண்டறிய முடியாத நோய் - சிறப்பு சிகிச்சை

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு), மானிப்பாய். 077 321 2740

---

# ES Printers

2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்.




357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

---

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.
# மீள் கேள்வி அறிவித்தல் - 2019

**கீழ்க்காணப்படும் சந்தைகள், கோழி இறைச்சிக் கடைகளுக்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.**

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2018.12.04 – 2018.12.11 மு.ப 10.00 மணிவரை**

**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2018.12.11 ந.ப 12.00 மணிவரை**

**கேள்விதிறக்கும் திகதி : 2018.12.11 பி.ப 12.30 மணி**

குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்புநிலையத்துடன்), இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT நீங்கலாக) | கேள்விப் பிணைப்பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப் படாதகேள்விப் படிவக் கட்டணம் (VAT, NBTநீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானைமரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்புநிலையம் தவிர்த்து) | — | 7,353,150.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை நவீன மீன்சந்தை | — | 1,383,388.00 | 5,000.00 | 1,000.00 |
| 03 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 200,603.00 | 3,000.00 | 500.00 |
| 04 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 200,603.00 | 3,000.00 | 500.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடுசந்தை | — | 1,087,800.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | பல்லசுட்டிசந்தை | — | 30,450.00 | 1,000.00 | 250.00 |
| 03 | தொல்புரம் மத்தியசந்தை | — | 27,930.00 | 500.00 | 250.00 |
| 04 | பொன்னாலைவாராந்தச் சந்தை | — | 43,260.00 | 500.00 | 250.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தைசந்தை | — | 132,300.00 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டைபொதுச்சந்தை | — | 19,425.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 117,075.00 | 1,000.00 | 500.00 |

**கேள்வியில் / கேள்விகளில் சித்திபெறுவோர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2018.12.13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளல் வேண்டும். அத்துடன் மேலதிக விபரங்களை 2018.11.13 ஆம் திகதிய தினக்குரல் மற்றும் உதயன் பத்திரிகைகளில் பார்வையிடலாம்.**

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.
2018.12.04

தலைவர்,
உள்ளூர் அதிகாரபெறுகைச் சபை,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.

---

# Galaxy Star

வெற்றி வாரம் 280 / திகதி 02.12.2018

வெற்றி இலக்கங்கள் 07 18 20 26 56

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,469,820/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SNS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

---

HOME LOAN வீட்டுக் கடன்



## பாசமும், நேசமும் நிறைந்த கனவு இல்லத்தை நனவாக்கிடுங்கள்

பீப்பள்ஸ் லீசிங் "செனசும் பியச" வீட்டுக்கடன் திட்டம் மூலம் உங்கள் வீட்டுக் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள். வீடொன்றைக் கட்டுவதற்கு, வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு, வீடொன்றை புதுப்பித்துக்கொள்வதற்கு, வீட்டின் ஒரு பகுதியை கட்டியெழுப்புவதற்கு, மாடி வீடுகளை கொள்வனவு செய்வதற்கு, (முழுமையான அல்லது நிர்மாணிக்கப்படும்) அல்லது காணியொன்றை கொள்வனவு செய்வதற்கு இப்போது பல இலகுவான கடன் திட்டங்களை பீப்பள்ஸ் லீசிங் நிறுவனம் உங்களுக்கு வழங்குகிறது.

- மாறாத வட்டி வீதங்கள்
- உங்கள் வருமானத்திற்கு ஏற்றவகையில் மாதந்த தவணையை திட்டமிடுதல்
- இலவச காப்புறுதி
- காணியை விடுவித்துக்கொள்வதற்கு வேறொரு காணியை இழப்பீடாக சமர்ப்பிக்கும் ஆற்றல்
- எந்தவொரு தருணத்திலும் பணத்தைச் செலுத்தி கடன் தவணையை அல்லது காலத்தை குறைத்துக்கொள்ள முடியும்
- கடன் தொகையை வேறு ஒருவருக்கு மாற்றும் வசதி
- கடனை மீள் செலுத்துவதற்கு 5 வருடங்கள் வரையான கால அவகாசம்

HOTLINE 0112 206 300

PLC PEOPLE'S LEASING

www.melacks.agency

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் நாகேஸ்வரி திருநாவுக்கரசு

**(ஓய்வுபெற்ற ஆசிரியர் – நல்லூர் ஆனந்தா வித்தியாசாலை)**


**மலர்வு :- 23.10.1938**   **உதிர்வு :- 04.11.2018**

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **அமரர் நாகேஸ்வரி திருநாவுக்கரசு** கடந்த 04.11.2018 காலமானார். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் காலமான போது சகல வழிகளிலும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் தேவையான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**51, நொத்தாரிஸ் லேன்,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**   (CS/18586)(11.17)   **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



## Dr. நடராஜா சர்வானந்தா

நவாலியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. நடராஜா சர்வானந்தா நேற்று (03.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலநாயகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நடராஜா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சதானந்தன் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தர்சினி மற்றும் Dr. கணேஷ்குமார் (யாழ். போதனா வைத்திய சாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் துஷ்யந்தியின் அன்புமாமனும் சஞ்சய், சுருதிகா ஆகியோரின் அன்புப்பேரனும் யோகேஸ்வரி, காலஞ்சென்ற பரமேஸ் வரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் தெட்சணாமூர்த்தி, ஜெகதாம்பிகை, கனகாம்பிகை, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி பாரதிநாதனின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2018)செவ்வாய்க்கிழமை கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொற்பதி றோட்,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்**
**Dr. ச. கணேஷ்குமார் (மகன்)**
**021 221 2117**

# மரண அறிவித்தல்



## இராசநாயகம் தையல்நாயகி

திருநெல்வேலி, மடம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு மஞ்சவண்ணப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் தையல்நாயகி நேற்றுமுன்தினம் (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற இராசையா - இராசமணி தம்பதிகளின் மருமகளும் காலஞ் சென்றவர்களான சிவகாமசுந்தரி , சுந்தரவதனசிங்காரி, ஈஸ்வரி மற்றும் சிவஞானசுந்தரி ஆகியோரின் சகோதரியும் இராசலிங்கம் - இந்திராதேவி, இராஜேஸ்வரன் - உமாதேவி, இரத்தினேஸ்வரன் - இந்திரலீலா, இரத்தினகுமார் - சந்திராதேவி ஆகியோரின் மைத்துனியும் கௌரிபாலன், உமாசங்கர், கலைசெல்வி, ஞானசெல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் கஸ்தூரி, ஜெயகுமார், கலை வாணி, பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மஞ்சவண்ணப்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**   (CS 21604/15/18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# திருமதி பிரான்சிஸ் பிரபாவதி



*தோற்றம் 17.12.1951*   *மறைவு 03.12.2018*

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பாரதிவீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் பிரபாவதி கடந்த (03.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தேசு யோண் - யோண் பூபதி தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான அகஸ்ரீன் அந்தோனிப்பிள்ளை, திரேசம்மா (பிள்ளைமுத்து) தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அந்தோனிப் பிள்ளை பிரான்சிஸின் அன்பு மனைவியும் றெஜினோல்ட், றெமிஜியா, றெனோஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜேன் சுகந்தினி, றெறன்ஸ் சுதர்சன், றொஷானி ஆகியோரின் அன்பு மாமியாரும் யூட்சாம்சன், மேரி சானுஜா, யூட்டினேசன் ஹெய்டன், ஹான்ஸ்ரன், றயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குணசேகரம், அன்ரன் இராசகுமார், பரமேஸ்வரி, பத்மாவதி, சாந்தகுமார், இராசகுமாரி(அருந்ததி), அன்ரனி ஜெயக்குமார், காந்திமதி ஆகியோரின் சகோதரியும் இராசபுத்திரி (இந்திராணி), பொன்மலர், ஜெயராசா, அல்பிரட், சாந்தகுமார், வதனி, கண்ணன், காலஞ்சென்ற மஞ்சு ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற மரியதாஸ் (யோகம்) மற்றும் சூசைதாசன் (ராசு), கிறிஸ்தோப்பர் (குணம்), வோல்டர், அகஸ்ரீன் (ஜீவன்), இம்மானுவேல், அன்ரனிற்றா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சிங்கராசா விக்ரோறியாராணியின் (செல்வரத்தினம்) பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (04.12.2018) செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று இரங்கல்திருப்பலி ஆனைக்கோட்டை புனித அடைக்கலமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு அடைக்கலநாயகி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21602/15/17)

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 12 . 12 . 1944



மறைவு 02 . 12 . 2018

# நாகலிங்கம் சிவகுருநாதன்

*(அப்பு, பிரபல புகையிலை வியாபாரி)*

யாழ்.மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவகுருநாதன் கடந்த (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் ஆறுமுகம் - தில்லையம்மா தம்பதியரின் அன்புமருமகனும் கலாமணி யின் அன்புக்கணவரும் சசிகலா (இந்தியா), திசைரூபன் (கனடா), மேகலா (ஆசிரியை, வ/ இ.தி.த.க. பாடசாலை), புஸ்பகலா (கனடா), நவரூபன் (கனடா), லவகலா (ஆசிரியை - வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்), வித்தியரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் நகுலேந்திரன்(U.S.A), ஜெயக்குமார் (ஆசிரியர் ஆலோசகர் துணுக்காய் கல்வி வலயம்), ரஞ்சன் (கனடா), கேதீஸ்வரன் (அலுவலக உதவியாளர், வ/ இ.தி.த.க பாடசாலை), சுபாசினி (கனடா), நிலோசா ஆகியோரின் அன்புமாமனும் மகேஸ்வரி, நாகேஸ்வரி காலஞ்சென்ற இராசதுரை, இராஜேஸ்வரி, சிறிநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் நாகேஸ்வரி, பேரின்பநாயகம், பரமேஸ்வரி காலஞ்சென்றவர்களான தணிகாசலம், தருமநாயகம், தையல்நாயகி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் லெவீத், தெய்வீகா, பஸ்மிதா, பதுமிதா, அஸ்வந், தசாந், அஸ்மித், அசாந், சனாந், ஆகிந் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2018) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# திருமதி மனோன்மணி செல்வஞானபிள்ளை



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி செல்வஞானபிள்ளை நேற்று (03.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் செல்வஞானபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சோதிமணி, சற்குணமணி, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், குணமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கங்காதேவி, கோகலிநாதன், வள்ளி வடவைநாயகி, உ`த்தமிஉமையாள், சிவசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பரமசிவம், பத்மநாதன், சிவபாக்கியம் மற்றும் இந்திரன், காந்திதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் அருள்நம்பி, அருள்பரன், காலஞ்சென்ற அருள்வாணி மற்றும் அருள்ஈசன், தினுஷா, தாரணி, ரூபிகா, சியாமளா, நிறஞ்சிகா, காயத்திரி, மயூரன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மிதுஜன், மிதுஜா, அக்ஸ்சவி, அக்கீசன், அகிலதாஸ், சாதுஜன், பரணிதா, கௌசிகா, அஜே, அனுஷ்கா, நிறோசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 04.00 மணிக்கு ஊரெழு கிழக்கிலுள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வாணி இல்லம்,**
**ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.**

தகவல்: குடும்பத்தினர்.
021 205 4719

# நாவல் பழத்தின் மருத்துவ குணங்கள்



நாவல் பழத்தில் கல்சியம் அதிக அளவில் இருக்கிறது. இந்தப் பழத்தை அடுத்து சீதா பழத்தில்தான் கல்சியம் இருக்கிறது. இது தவிர சோடியம், தாமிரம் ஆகியவை கணிசமான அளவில் உள்ளது. விற்றமின் பி1, பி2, பி6 ஒன்றாக உள்ள மிகவும் அரிதான பழம் இது.

கல்சியம், எலும்புகளுக்கு உறுதியைக் கொடுப்பதுடன், உடலை வலிமையாக்கும். குருதியைச் சுத்திகரித்து குருதி விருத்தியடையச் செய்யும். குருதிச் சோகைக்கு மிகச் சிறந்த மருந்து நாவல் பழம். இதிலுள்ள வைட்டமின் சி உணவிலிருந்து இரும்புச் சத்தை உறிஞ்சும் திறனை அதிகரிக்கும்.

நாவல்பழத்திலுள்ள'ஜம்போலினின்'எனும் 'குளுக்கோசைட்' உடலில் ஸ்டார்ச்சை சீனியாக மாற்றும் செயற்பாட்டைத் தடுக்கிறது. இதனால் சர்க்கரை அளவு கட்டுக்குள் இருக்கும். சீனியின் நோய் ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் நாவல் பழத்தை உணவாக அல்லாமல் மருந்தாகப் பத்தியமிருந்து 1 மண்டலத்துக்குச் சாப்பிட்டு வர, சீனியின் அளவு குறைந்து கட்டுக்குள் இருக்கும். நாள்பட்டநீரிழிவுநோய் உடையவர்கள் நாவல் பழ விதை யைக் காயவைத்து பொடியாக்கி, புளித்த மோரில் கலந்து குடிக்கலாம்.

இந்தப் பழத்தில் 'குயுமின்' எனும் 'ஆல்கலாய்ட்' உள்ளது. இது தோலில் சுருக்கங்கள் விழுவதைத் தடுத்து வயதாவதைத் தள்ளிப்போடும். உடலில் புதிய செல்களைப் புதுப்பிக்கும் திறன்கொண்ட 'ஆன்டி ஆக்சிடன்ட்' அப்பிள், கரட், மாதுளையைவிட நாவல் பழத்தில் அதிகம். இதனால் தோலில் ஏற்படும் வெண்புள்ளி, அரிப்பு போன்றவற்றைக் குணப்படுத்தும்.

நாவலை தொடர்ந்து உண்டுவர தோல் பொலிவு கிடைக்கும். வாய் முதல் குடல் வரை ஏற்படுகிற புண்களைக் குணப்படுத்தும். அதிகமாக சிறுநீர் கழிக்கும் பிரச்சினை உள்ளவர்கள் இதனைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீர் போக்குக் கட்டுக்குள் வரும். பசியைத் தூண்டும்.

நாவல் பழம் குளிர்ச்சியானது என்பதால் உடல்சூட்டைத்தணிக்கும். கல்லீரல், மண்ணீரலில் ஏற்படும் நோய்களையும், மஞ்சள் காமாலையையும் குணப்படுத்தக்கூடியது. பெண்களுக்குக்கர்ப்பப்பை தொடர்பான சிக்கல், வெள்ளைப்படுதல், மாதவிடாயின் போது ஏற்படும் அதிக குருதிப்போக்கு ஆகியவற்றையும் நாவல் பழம் சரியாக்கும்.


நாவல் பழத்தைக் கர்ப்பிணி பெண்கள் சாப்பிடக்கூடாது என்பார்கள். இது தவறு! சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடக்கூடிய அற்புத பழம்.

## கண்ணீர் அஞ்சலி

பிரித்தானிய CCD நிறுவன
இணைப்பாளரும்
எமது நாறோ நிறுவன
நிதிப்பங்காளருமாகிய
வரதகுமார் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி பூமகாலட்சுமி**
**வைரமுத்து**

கடந்த 30.11.2018 காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்று
இருக்கும் அவரது குடும்பத்தின
ருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.




**நாறோ நிறுவன**
**நிர்வாக சபை மற்றும் ஊழியர்கள்.**

(AKN/602)(11,17)

உ

## அந்திம கிரியை அழைப்பு



(துசாக கிருஹயக்ஞம்)

நிகழும் விளம்பீ வருடம் கார்த்திகை
மாதம் 10 ஆம் நாள் (27.11.2018) திங்கட்கிழமை
பின்னிரவு அபரபட்ச சதுர்த்தித்திதியில்
சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சிவஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கள்**
**நடராஜக்குருக்கள்**

(சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர்
ஆலய பரம்பரைக்குரு)

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்

**05.12.2018 புதன்கிழமை - தசாகம் (பகல் 10 மணி)**
**06.12.2018 வியாழக்கிழமை - ஏகோதிஷ்டம், மாசியம் (பகல் 10 மணி)**
**07.12.2018 வெள்ளிக்கிழமை - சபிண்டீகரணம் (பகல் 10 மணி)**
**08.12.2018 சனிக்கிழமை - கிருஹயக்ஞம் (மதியபோசனம்) (நண்பகல் 12 மணி)**

**மேற்படி கிரியைகளில் தாங்களும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் 08.12.2018 சனிக்கிழமை அன்று மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரசாலை வடக்கு, சாவகச்சேரி.
077 968 3044

குடும்பத்தினர்

## தமிழீழம்...

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மீளத் தங்களை பலப்படுத்திகொண்டு மீண்டும் வருவார்கள். இவர்கள் வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவத்தினரை விரட்டியடிப்பார்கள் என்று நாம் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பாகவே கூறியிருந்தோம். அதற்கான ஏற்படுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. நாட்டைப் பன்னாட்டுச் சமூகத்துக்கு கூறுபோட்டேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழீழத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்படுமென்ற வாக்குறுதியை ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார்.

சட்டவாக்கம் மற்றும் நிறைவேற்றுத்துறையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க நீதித்துறை தலையீடு மேற்கொண்டுள்ளது. இதேவேளை, அரச உத்தியோகத்தர்களுக்கு மிரட்டல் விடுக்கப்படுவதால், அவர்கள் அச்சத்தில் இருக்கிறார்கள். பொதுத்தேர்தலை நடத்தி மக்களின் இறைமையின் அடிப்படையில் புதிய அரசு சொன்றை அமைப்பதே இதற்கெல்லாம் ஒரே தீர்வு - என்றார். (ற-5,10)

## நீதிமன்ற...

மாலை நடைபெற்ற 'நீதிக்கான மக்கள் குரல்' பேரணியில் கலந்துகொண்ட அவர், மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி நான் காலிக்கு வந்திருந்த வேளையிலேயே அவசரமாகத் தலைமை அமைச்சர் பதவியில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அது சட்டத்துக்கு முரணான நடவடிக்கை என அன்றே நான் கூறியிருந்தேன். எனினும், அவர்கள் அதைக் கண்டுகொள்ளவில்லை. இதையடுத்து நீதிமன்றத்தை நாடினோம். எமக்கு இடைக்கால நீதி கிடைத்துள்ளது. இன்று நான் காலியில் இருக்கும்போதே அந்த நற்செய்தியும் வெளியானது.

ஆகவே, நீதிமன்றத் தீர்ப்புக்கு மதிப்பளித்து கௌரவமான முறையில் பதவிகளை விட்டுச் செல்லுமாறு மகிந்த ராஜபக்சவிடமும் அவரது சகாக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். அரசமைப்பின் பிரகாரம் செயற்பட முன்வருமாறு அனைத்துத் தரப்புக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (உ-21)

## மகிந்தவால்...

உயிருக்கு ஆபத்து இருந்ததாக நீங்கள் திரும்பத் திரும்பக் கூறி வந்தீர்கள். அப்படியிருக்கும் போது, எந்த நம்பிக்கையின் அடிப்படையில் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமித்தீர்கள்? என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன பதிலளித்தார்.

"அவையெல்லாம் அரசியல் மேடைகளில் குற்றம்சாட்டப்பட்ட வெறும் அரசியல் பேச்சுக்கள். ஆனால் அண்மையது என்னைக் கொல்வதற்கான தெளிவான திட்டம் என்று அவர் பதிலளித்தார்.

அப்படியானால், ராஜபக்ச தேர்தலில் வென்றிருந்தால், நீங்களும் உங்களின் குடும்பமும், ஆறு அடி நிலத்துக்குள் புதைக்கப்பட்டிருப்போம் என்று தெளிவாக கூறியிருந்தீர்களே? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், 'மகிந்த ராஜபக்ச என்னைப் படுகொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார் என்று எந்த தகவலும் இல்லை. அவை வெறுமனே தேர்தல் மேடைகளில் அங்கிருப்பவர்களைக் கவருவதற்காக கூறியவை' என்று பதிலளித்துள்ளார். அது மட்டுமல்லாது பதிலைக் கூறி விட்டு செவ்வி கண்ட ஊடகவியலாளரைப்பார்த்துநக்கலாகசிரித்துமுள்ளார்.

அரச தலைவர் தேர்தலின் போது, தன்னைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக, குண்டுதுளைக்காத அங்கியுடன் பரப்புரை மேடைகளில் தோன்றிய மைத்திரிபால சிறிசேன, தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் மகிந்த ராஜபக்சவினால் தனது உயிருக்கு ஆபத்து இருந்தது என்று கூறியிருந்தார்.

2015ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி, பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், நானும் என்னுடைய பிள்ளைகளும், பாதுகாப்புக் காரணங்களுக்காக அரச தலைவர் தேர்தல் தினத்தன்று, இரவு நேரத்தில், குருநாகலில் உள்ள எனது நண்பன் ஒருவரின் வீட்டில் மறைந்திருந்தோம். தேர்தலில் நான் தோல்வியுற்றிருந்தால், என்னைச் சிறையிலடைப்பதற்கும் எனது குடும்பத்தினரை அழிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல் முடிவுகள் மாறியிருந்தால், நானும் எனது குடும்பமும், இந்நேரம் உயிரோடு இருந்திருப்போமா எனத் தெரியவில்லை. அதுதான் மகிந்தவின் ஜனநாயகம். அது எனக்கு நன்றாகத் தெரியும். இவர்கள் வெற்றி பெற்று, நான் தோல்வியடைந்திருந்தால், இந்த நேரம் பலர் கொல்லப்பட்டு, பலரது கைகால்கள் உடைக்கப்பட்டிருப்பதுடன் பலர் சிறைக்கும் சென்றிருப்பர், என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ற-5)

## ரணிலின்...

ஆதரவாகத் தமது கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று ரெலோ கட்சியின் செயலாளர் நாயகம் சிறிகாந்தா உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

➤ அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். காணி, பொலிஸ் அதிகாரம் கையளிக்கப்படவேண்டும்.

➤ அரசியல் கைதிகள் விடுதலை.

➤ அரச படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ள தனியார் காணிகள் டிசெம்பர் 31க்கு முன்னர் விடுவிக்கப்படவேண்டும்.

➤ பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும்.

➤ இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணும் வரைக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது ரெலோ.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி மீண்டும் ஆட்சியமைப்பதற்குத் தனது 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிப்பர் என்று ஆதரவு தெரிவித்துவிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் இந்த முடிவை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுக்கமுடியாது, அதன் ஒருங்கிணைப்புக் குழுவினரே எடுக்க முடியும் என்றுகூறிப் போர்க்கொடி தூக்கியது ரெலோ. இதையடுத்து கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை இன்று கூட்டவுள்ளார்.

தமது 5 நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ரணில் கையெழுத்திட்டால்தான், அவரது ஆட்சிக்கு ஆதவளிப்பது என்றும், அப்படியில்லையென்றால் கூட்டமைப்பு ரணிலுக்கு ஆதரவளிக்கக்கூடாது என்றும் இந்தக் கூட்டத்தில் தமது கட்சி வலியுறுத்தும் என்று சிறிகாந்தா தெரிவித்தார்.

கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தமது கட்சியின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். அதேநேரத்தில் மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்கான எந்த நடவடிக்கைக்கும் தமது கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (உ-26)

## 225 பேரும்...

அரச தலைவர் உடனடியாகவே நிராகரித்துவிட்டார். அதனால் எமது இன்றைய பேச்சு வெற்றியளிக்கவில்லை" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மேன்முறையீட்டுநீதிமன்றால் இன்று (நேற்று) வழங்கப்பட்ட கட்டளையை நான் இன்னும் ஆராயவில்லை. அதனை ஆராய்ந்த பின்னர் நாளை மீண்டும் சந்திக்கின்றேன் என்றும் அரசதலைவர் ஐக்கிய தேசிய முன்னணியிடம் தெரிவித்தார் என்று அறியமுடிகின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றின் இன்றைய கட்டளையை ஏற்றுக்கொள்வதாகவும் 24 மணித்தியாலயங்களில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அரசதலைவர் தம்மிடம் தெரிவித்தார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறிவித்த நிலையில் அரச தலைவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

அரச தலைவருக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இரவு அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்றது. சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. எனினும் முடிவேதுவும் எட்டப்படவில்லை என்று இருதரப்பும் குறிப்பிட்டுள்ளன.

"அரச தலைவருடனான சந்திப்பு நிறைவடைந்துள்ளது. சட்டப்படியான தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்காக நாங்கள் காத்திருக்கின்றோம்" என்று ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். சந்திப்பின் பின்னர் ரிசாத் பதியுதீன் இந்தக் கருத்தை தனது கீச்சகத்தில் வெளியிட்டுள்ளார்.

சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோகணேசன் எத்தனை பேர் ஆதரவு தெரிவித்தாலும் ரணிலை தலைமை அமைச்சராக்கவே முடியாது என்பதில் அரச தலைவர் உடும்புப் பிடியிலேயே இருந்தார். ரணிலைத் தவிர வேறு எவரை வேண்டுமானாலும் தலைமை அமைச்சராக நியமித்தால் அதற்கு தான் ஆதரவு தருவதாகவும் மைத்திரி தெரிவித்தார். எனவே இது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக ஐக்கிய தேசிய முன்னணியினர் இன்று காலை 10 மணிக்கு அலரி மாளிகையில் கூடிப் பேசுவது என்று முடிவுஎட்டப்பட்டுள்ளது-என்றார். (உ-21,26)

## மேன்முறையீடு....

இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்த நிலையில், அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளதாக முன்னாள் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தலைமை அமைச்சர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அந்தப் பதவிகளை வகிப்பதை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று மாலை அதிரடித் தீர்ப்பை வெளியிட்டிருந்தது. இதனால் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பை நிராகரிப்பதாக மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, லக்ச்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் நீதிமன்ற வளாகத்திலேயே திட்டவட்டமாக அறிவித்திருந்தனர்.

மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இன்று மேன்முறையீடு செய்யப்படும் என்று மகிந்த அறிவித்துள்ளார்.

அத்துடன், அரசமைப்புத் தொடர்பில் பொருள் கோடல் மற்றும் விளக்கமளிப்புக்களை செய்யக்கூடிய அதிகாரம் அரசமைப்பின் பிரகாரம் உயர்நீதிமன்றத்திற்கு மாத்திரமே உள்ளது என்றும் நேற்று இரவு வெளியிட்டிருந்த விசேட அறிக்கையில் மகிந்த ராஜபக்ச, தெரிவித்துள்ளார். (உ-10)

## மகிந்தவின்...

இடைக்காலத் தடை விதித்து நீதிமன்று உத்தரவிட்டது.

தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவும், அவரது அமைச்சரவையும் எந்த அதிகாரத்தைக் கொண்டு பதவியில் நீடிக்க முடியும் என்று விளக்கமளித்து அறிவித்தல் வேண்டும் என்றும், இந்த வழக்கு மீதான விவாதம் எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் இடம்பெறும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச மற்றும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளை வகிப்பதற்கு சட்டரீதியான உரிமையற்றவர்கள் என்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'யாதுரிமை நீதிப் பேராணை' மனு கடந்த 19ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதில் பிரதிவாதிகளாக மகிந்த ராஜபக்சவும், அவரது அமைச்சரவையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றிய ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் 122 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு கடந்த வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் தலைமை நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் அர்ஜுன ஓபேசேகர ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்கள் சார்பாக அரச தலைவர் சட்டத்தரணி கனக ஈஸ்வரன் சமர்ப்பணத்தை முன்வைத்தார். எதிர் மனுதாரர்கள் சார்பான சமர்ப்பணங்கள் நிறைவடையாததால் மனு மீதான விசாரணை நேற்றுத் தொடர்ந்தது.

மனுதாரர்கள் மற்றும் எதிர் மனுதாரர்கள் சார்பான சமர்ப்பணங்கள் நேற்று நண்பகலுடன் நிறைவடைந்தன. பிற்பகல் 3 மணிக்கு மனுவில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையைக் கருத்தில் கொண்டு தலைமை அமைச்சரும், அவரது அமைச்சரவையும் இயங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்த வழக்கு மீதான விவாதம் எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (ற-10)

## புலிகள்...

தொடர்புபடுத்திக் கதைப்பது வதந்தியாகும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அலரிமாளிகையில் சஜித் பிரேமதாஸ சந்தித்த வெளிநாட்டு ஊடகம் ஒன்றின் இலங்கைச் செய்தியாளருக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அதன் பிரதித் தலைவராக இருந்த கருணா அம்மானுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் பிளவுகளுடன் அப்போதைய தலைமை அமைச்சராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிவந்த கதை வெறும் வதந்தியாகும். கருணா அம்மானை ஐ.தே.க. காப்பாற்றி வைத்திருக்கவில்லை. அவருக்குப் பாதுகாப்பு, பிரதி அமைச்சுப் பதவி, சுகபோக வாழ்க்கை ஆகியவற்றை மகிந்த ராஜபக்ச அரசே வழங்கியிருந்தது. இது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

மகிந்த ராஜபக்சவின் கொடுங்கோல் ஆட்சியில் கருணா அம்மானின் அட்டூழியம் கிழக்கில் தலைவிரித்தாடியது. இதற்கு மகிந்த அரசு முழு ஆதரவையும் வழங்கியிருந்தது. இப்படிப்பட்ட மகிந்த ராஜபக்ச தரப்புடன்தான் தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகளினால் அரச தலைவராகத் தெரிவான மைத்திரிபால சிறிசேன இணைந்துள்ளார்.

கடந்த அரச தலைவர் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அமோக வாக்குகள் மைத்திரிபாலவுக்குக் கிடைத்தன. அதை அவர் உணர்ந்தும் உணராமல் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்.

2004ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து கருணா அம்மான் விலகினார். இந்த விவகாரத்தையடுத்து வெளிவந்த கட்டுக்கதையால் ரணில் விக்கிரமசிங்க மீது தமிழ் மக்கள் சிலர் அதிருப்தியில் இருக்கலாம். ஏன் ரணிலை எதிரியாகக்கூட அவர்கள் பார்க்கலாம். ஆனால், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்கள் மனங்களில் மறக்க முடியாத பச்சைத் துரோகி ஆவார்.

1993ஆம் ஆண்டு மே தினத்தன்று கொழும்பு நகரில் விடுதலைப்புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் அப்போதைய அரச தலைவராக இருந்த எனது தந்தை ரணசிங்க பிரேமதாச உயிரிழந்தார். அதற்காக விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்த வடக்கு, கிழக்கு தமிழ்மக்களைநான்வெறுக்கவில்லை. போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட அவர்களை எனது சகோதரர்களாகவே நான் பார்க்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறியதும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கியே தீரும். அந்தத் தீர்வு இலங்கையிலுள்ள சகல இனத்தவர்களும் ஏற்கும் தீர்வாக இருக்கும் - என்றார்.

இதே கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-5)



# வாள்களுடன் வந்தவர்கள் நேற்று கொழும்புத்துறையில் அட்டூழியம்

யாழ்ப்பாணம்,டிசெ.4
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இலந்தைக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை வாள்வெட்டுக்குழு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.
வாள்கள் பொல்லுகளுடன் வந்த 10 பேர் கொண்ட கும்பல் அந்தப்பகுதியில் வீடுகளின் வேலிகள், வீதியோரத்தில் இருந்த தண்ணீர்க் குழாய்கள், வீதித் திருத்தப் பணிக்காக வைக்கப்பட்டிருந்தார் பரல்கள் போன்வற்றை வாளால் வெட்டிச் சேதப்படுத்தியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்றமான நிலை காணப்பட்டுள்ளது.
அந்தக் குழுவினர் நடந்து வந்தே தாக்குதல்களை மேற்கொண்டனர். ஊர்மக்கள் ஒன்று கூட முற்பட்ட வேளை அங்கிருந்து தப்பித்து ஓடியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் ய்ாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (21.8)

# சமுர்த்தி வங்கிப் பாதுகாப்பு பணியாளர் மீது கத்திவெட்டு

## துன்னாலையில் சம்பவம்

சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் கத்தியால் வெட்டப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு துன்னாலையில் இடம்பெற்றுள்ளது. துன்னாலையில் உள்ள சமுர்த்தி வங்கியின் பாதுகாப்புப் பணியாளரே இவ்வாறு காயமடைந்தார்.
சமுர்த்தி வங்கியின் பின்பக்க மதிலால் உள்ளே பாய்ந்து வந்த நால்வரே இவ்வாறு தாக்குலை மேற்கொண்டுள்ளனர். பணியாளரின் அலை பேசியையும் பறித்துச் சென்றுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த பணியாளர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கபட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டனர். குற்றத் தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளில் ஈடுபட்டிருந்தனர். (21.26)

# அரசமைக்க கூட்டமைப்பு ஆதரவளித்தால் எதிர்க்கட்சியில் இருந்து நீங்க வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.4
நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பை வகிக்கும் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பினர் அரசமைக்க ஆதரவளிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியாயின் அவர்கள் எதிர்க்கட்சிப் பொறுப்புக்களில் இருந்து நீங்கிக்கொள்ளவேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைமைப் பொறுப்பை வகிக்கும் சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரளிப்பதாக அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது. உலகில் எந்த நாட்டிலும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிப் பொறுப்பை வகிக்கும் கட்சி அரசமைக்க ஆதரவளிப்பதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களிலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் ஆளுங்கட்சியின் தீர்மானங்களை ஆதரித்தே வந்துள்ளது - என்றார். (21)

## தான்...

இடமில்லை என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் சிறப்புக் கூட்டமொன்று நேற்று திங்கட்கிழமை காலியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை நிராகரித்துவிட்டு அரச தலைவரால் சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது. அதற்கு அரசமைப்பிலும், சட்டத்திலும் இடமில்லை. நிறைவேற்று அதிகாரத்தில் இல்லாத அதிகாரங்களை அவர் எவ்வாறு பயன்படுத்த முடியும்?
நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலமுள்ள தரப்புக்கே தலைமை அமைச்சர் பதவியை வழங்கமுடியும். பெரும்பான்மை உள்ளவரென ஏற்றுக்கொண்டுள்ள நபரையே தலைமை அமைச்சராக நியமிக்கவேண்டும். மக்கள் ஆணைக்குமதிப்பளித்துச்செயற்படுவதுஅனைவரினதும் கடமையாகும். அரசு மீது குறைகள் இருந்தால் அதற்கு மக்கள் தேர்தலில் பதிலளிப்பார்கள். அதுதான் மக்களாட்சி முறை.
அரச தலைவராக சந்திரிகா பண்டாரநாயக்க இருந்த தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியது. அப்போது விரும்பியோ, விரும்பாமலோ நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ள என்னைத் தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டியுள்ளது என்றார். அதுதான் முறை. சட்டரீதியான அரசின் கீழ் எந்தவொரு தேர்தலையும் சந்திக்க நாங்கள் தயாராகவே உள்ளோம். அனைத்துக்கட்சிகளும்தேர்தல்நடத்துவதாகத் தீர்மானித்தால் அதற்கு நாங்கள் மதிப்பளித்து மக்களாட்சி முறைப்படி தேர்தலை நடத்துவோம். அதேபோன்று மக்கள் வழங்கிய ஆணையை நாங்கள் ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம். அரசமைப்பின் படியே அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுப்போம் - என்றார். (உ-21,10)

## இப்படியும்...

கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித்த அபேகுணவர்ன மேற்கண்டவாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு வவுணதீவில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பத்திரிகையொன்றில் செய்தி வெளிவந்துள்ளது.
2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியிலிருந்து 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கில் பட்டாசு கொளுத்துவதற்கே மக்கள் அஞ்சினார்கள். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதிக்குப் பிறகு வடக்கில் பயங்கரவாதம் தலைதூக்க ஆரம்பித்தது. ஆவா குழு முளைத்தது. தமிழ் வர்த்தகர்கள் தாக்கப்பட்டனர். புலிகளை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. வடக்கில் தேசியக்கொடியை ஏற்ற முடியாது என்று மாகாண அமைச்சரொருவர் அறிவிப்பு விடுத்தார். அண்மையில் புலிகள் மீண்டும் வரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா கூறியிருந்தார்.
மாவீரர் தினம் நினைவுகூரப்படுவதை இம்முறை பொலிஸார் தடுத்தனர். அதற்கான பழிவாங்கல் நடவடிக்கையாகவே புலி ஆதரவாளர்களால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.
ஐக்கிய தேசியக் கட்சியே புலிகள் உருவாவதற்கான களத்தை அமைத்துக் கொடுத்தது. யாழ்ப்பாண நூலகம் எரிப்பு உள்ளிட்ட சம்பவங்களாலேயே புலிகள் உருவாகினர். பிரபாகரனால் ஆயுதம் மூலம் பெறமுடியாமல் போனதை பேனைமூலம் பெறுவதற்கு சுமந்திரன் முற்படுகின்றார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவதற்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்புநிபந்தனை அடிப்படையில் அவருக்கு ஆதரவு வழங்கியுள்ளது. இந்த நிபந்தனைகள் மீண்டும் புலிகள் உருவாகுவதற்கு பின்புலமாக அமையும். கூட்டாட்சி முறையை உள்ளடக்கிய அரசமைப்பு, வடக்கு - கிழக்கில் எந்தவொரு செயற்பாடுகளையும் கூட்டமைப்பினரின் அனுமதியில்லாது செய்யக்கூடாது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விரைவாகக் கண்டறிய வேண்டும் என்று பல நிபந்தனைகளை கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர் - என்றார்.
இதேவேளை, அரசியல் கைதிகளின் விடுதலையை எதிர்ப்புத் தெரிவிக்கும் நீங்கள், கருணா அம்மனையும் (விநாயகமூர்த்தி முரளிதரன்) பிள்ளையானையும் (சிவனேசத்துரை சந்திரக்காந்தன்) ஏற்றுக்கொண்டுள்ளீர்களே என்று வினவப்பட்டமைக்கு கருணா அம்மானும், பிள்ளையானும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் வெற்றிக்கு முதன்மைக் காரணமாக இருந்தனர். இவர்கள் இருவரும் தீவிரவாதத்தை விட்டு ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டவர்கள் - என்றார். (ற-5,10)

## பசில்...

நிறுத்திய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பசில் ராஜபக்ச தலைமையிலான குழுவுடன் பேச்சுக்களில் ஈடுபட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கடந்த வெள்ளிக்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் நடத்திய பேச்சுக்களில் முடிவு ஏதும் எட்டப்படாத நிலையில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு மீண்டும் சந்தித்துப் பேசுவது என்று முடிவு செய்யப்பட்டது. ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்கள் பேச்சுக்குத் தயாராகியிருந்த நிலையில், இந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது என்று திடீரென அரச தலைவர் செயலகம் அறிவித்தது.
தவிர்க்க முடியாத காரணங்களால் அரச தலைவரால் சந்திக்க முடியவில்லை என்று அரச தலைவர் செயலத்தில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணித் தரப்புக்குத் தகவல் அனுப்பப்பட்டது.
ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களுடனான சந்திப்பை நிறுத்திய அரச தலைவர், அதன் பின்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். திலங்க சுமதிபால, சுசில் பிரேம ஜெயந்த, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோருடன் பசில் ராஜபக்சவும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் விவரங்கள் வெளியாகவில்லை. (ற-5)

## அரசியல்...

குறிப்பிட்டுள்ளார். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று மாலை 4.30 மணியிலிருந்து 5 மணி வரை சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பில் சட்டமா அதிபர் கலந்து கொள்ளவில்லை. அவரது திணைக்களப் பிரதிநிதிகளே பங்கேற்றனர். பாதுகாப்பு அமைச்சின் செயலர், பொலிஸ் திணைக்களத்தினரும் பங்கேற்றிருந்தனர்.
அரசியல் கைதிகள் எவரும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் இல்லை என்றும், அவர்களுக்கு எதிரான வழக்குகள் பாரதூரமானவை எனவும் சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதன்போது கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன், தமிழ் அரசியல் கைதிகளின் விடயமானது வெறுமனே சட்டரீதியாக நோக்கப்படலாகாது என்றும் இது ஒரு அரசியல் பிரச்சினையாகும் எனவும் வலியுறுத்தினார். 1970ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணியின்ரின் போராட்டங்களை எடுத்துரைத்த சம்பந்தன் அவர்கள் தொடர்பில் ஒரு அரசியல் தீர்மானம் எடுக்கப்பட்டது போல இந்த விடயமும் நோக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தினார். மேலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கொலை முயற்சியின் சந்தேக நபரை அரச தலைவர் பொது மன்னிப்புக் கொடுத்து விடுவித்ததனை எடுத்துக்காட்டிய சம்பந்தன், இந்தக் கைதிகள் விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் சரியான நடைமுறைகளை மேற்கொண்டு இவர்களை விடுவிப்பதற்கான வழிமுறைகளை அரச தலைவருக்கு முன்மொழிய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.
பல வருடங்களாக சிறையில் வாடும் இந்த கைதிகளின் மனைவிமார், குழந்தைகளின் பரிதாபமான நிலைமையினை விளக்கிக் கூறிய இரா. சம்பந்தன், காலதாமதம் இல்லாமல் இந்த கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என வேண்டிக்கொண்டார்.
இதன்போது கருத்துத் தெரிவித்த மைத்திரிபால, பல நாடுகளில் இப்படியான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன என்றும் இந்தக் கைதிகள் விடயத்திலும் அவ்வாறான முடிவு எட்டப்படவேண்டும் எனவும் தெரிவித்த அதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு இன்னும் இரண்டு வாரங்களில் தேசிய பாதுகாப்புச் சபை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியோருடன் கலந்துரையாடி ஒரு தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார். (5,105)

## மகிந்த...

பட்ட யாதுரிமை நீதிப் பேராணை மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அதன்போது தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது அமைச்சரவையும் இயங்குவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.
வழக்கு மீதான விவாதம் எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.
மகிந்த ராஜபக்ச உட்பட 49 அமைச்சரவை உறுப்பினர்களை எதிர்வரும் 12ஆம் திகதி முன்னிலையாக வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ற)

## வென்றது விளைபூமி

யாழ்ப்பாணம், டிசெ. 4
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் அங்கத்துவக்கழகங்களுக் கிடையிலான பி பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரில் விளைபூமி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
கனகபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விளைபூமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் விளைபூமி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இளந்தளிர் அணி போராடி வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 4
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# சென். லூட்சியா மகுடம் சூடியது!

யாழ்ப்பாணம், டிசெ. 4
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் பள்ளிமுனை சென். லூட்சியா மகா வித்தியாலய அணி கிண்ணம் வென்றது.
ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பள்ளிமுனை சென். லூட்சியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து சாவற்காடு கில்லரி விளையாட்டுக் கழக அணி மோதியது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு கோல்கள் எவையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:3 என்ற கோல் கணக்கில் சென். லூட்சியா அணி வெற்றிபெற்றது. (ம-23)

## உதயதாரகை இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 4
கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் நடத்தும் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையிலான ஏ பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், டிசெ. 4
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பிளாஸ் ரைடர்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் எலைட் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலை பதிவுசெய்ததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)



## ரைகர்ஸ் அணி கால்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 4
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணி வெற்றிபெற்றது.
கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ஜக்குவார் அணியை எதிர்த்து கொலின்ஸ் ரைகர்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து இரண்டு நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டன. 1:0 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## கால்பந்தாட்ட பயிற்சிமுகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 4
இலங்கை கால்பந்தாட்டச் சமேளனத்தின் 23 வயதுப் பிரிவு தேசிய கால்பந்தாட்ட அணிக்கும், மூத்த பிரிவு கால்பந்தாட்ட அணிக்கும் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிமுகாம் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் வியாழக்கிழமை வரை மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
இலங்கை கால்பந்தாட்ட தேசிய அணியின் தலைமைப் பயிற்றுனர் பக்கீர் அலி தனது தலைமையின் கீழ் இந்தப் பயிற்சி முகாமை முன்னெடுக்கவுள்ளார். (ம-23)


# கபடி அணிக்கு மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 4
இலங்கை கபடிச் சம்மேளனம் நடத்திய தேசிய ரீதியிலான கபடித் தொடரில் மூன்றாம் இடத்தைத் தானதாக்கிய யாழ்ப்பாணம் மாவட்ட பெண்கள் கபடி அணியினர் யாழ்ப்பாணம் மாவட்ட கபடிச் சங்கத்தால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதிப்பளிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட கபடிச் சங்கத் தலைவர் பா.முகுந்தன் தலைமையில் பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை கபடிச் சம்மேளனத்தின் உபதலைவர் ஆர்.சஜீபன் கலந்து கொண்டார். (ம-23)



## இந்தியாவா அல்லது ஆஸ்திரேலியாவா புள்ளிவிவரங்கள் என்ன சொல்கின்றன?



அடிலெய்டில் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அடிலெய்டின் ஆடுகளம் எப்படி இருக்கும்?, புள்ளிவிவரங்கள் என்ன சொல்கின்றன? என்பதைக் காணலாம்.

**இதுவரை இந்தியாவுக்கு தொடர் கைகூடவில்லை**

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஆஸ்திரேலியாவில் இதுவரை இந்திய அணி டெஸ்ட் தொடரை வென்றதே இல்லை. ஆனால் ஆஸ்திரேலிய அணியில் முக்கிய வீரர்களான சிமித், வோர்ணர் இந்த முறை இல்லாத காரணத்தால் அந்த அணி பலவீனமடைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. அதனால்தான் எப்போதும் இல்லாத வகையில் இந்திய அணி இந்த முறை தொடரை வெல்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன என்று முன்னாள் வீரர்கள் பலர் தெரிவித்துள்ளனர். அதற்கு ஏற்றால் போல், இந்திய அணியில் சுழற்பந்துவீச்சு, வேகப்பந்துவீச்சு ஆகிய இரண்டும் சமகலவையில் பலம் பொருந்தியனவாக உள்ளன. இந்திய அணி துடுப்பாட்டத்திலும், பந்துவீச்சிலும் வலிமையாகவே இருந்து வருகிறது. ஆனால், ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்து கூடுதல் பந்துவீச்சாளர்களா அல்லது துடுப்பாட்ட வீரர்களாக என்ற தெரிவு கடைசி நேரத்தில் அமையும்.

**ஆடுகளம் எப்படி இருக்கும்?**

முதல் ஆட்டம் நடக்கும் அடிலெய்ட் மைதானத்தில் கடைசியாக நடந்த 4 டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாகவே அமைக்கப்பட்டது. கடந்த 4 டெஸ்ட் ஆட்டங்களும் பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களாக நடத்தப்பட்டதால் 5 நாள்களும் முழுமையாக நடைபெறவில்லை. 3 ஆட்டங்கள் 3 நாள்களிலும், ஒரு ஆட்டம் 4 நாள்கள் வரையும் நடந்துள்ளன. ஆதலால், இந்த முறை அடிலெய்ட் ஆடுகளம் எவ்வாறு அமைக்கப்பட உள்ளது என்ற எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

இதுகுறித்து ஆடுகளத்தின் பராமரிப்பாளர் ஹாவ், 'தி வீக்எண்ட் ஆஸ்திரேலியன்' நாளேட்டுக்கு அளித்த செவ்வியில், "இந்தியாஆஸ்திரேலியா டெஸ்ட் தொடருக்காக ஆடுகளத்தை ஏதும் புதிதாக மாற்றி அமைக்கப்போவதில்லை. பகலிரவு டெஸ்ட் ஆட்டம் நடந்தபோது இருந்த ஆடுகளத்தைப் போல இப்போதும் பராமரிக்கப்போகிறோம். என்னைப் பொறுத்தவரை 'பிங்க்' பந்தில் விளையாடும் போது இரு நாள்களுக்கு வேகப்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் வகையில் ஆடுகளத்தில் சிறிது புற்களை விட்டுவிடுவோம். அதேபோன்றுதான் இந்த டெஸ்ட் ஆட்டத்துக்கும் புற்களை விட்டுச் செல்வோம். அப்போதுதான் துடுப்பாட்டம், பந்துவீச்சு இரு துறைகளும் சமமாகச் செயல்பட முடியும். இல்லாவிட்டால், ஆட்டம் ஒருதரப்பாக அமைந்துவிடும்" எனத் தெரிவித்தார். ஆடுகளத்தில் குறைந்தபட்சம் இரு நாள்களுக்குப் புற்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்வோம் என்று சொல்வதன் மூலம் 2 நாள்களுக்கு வேகப்பந்துவீச்சுக்கு ஆடுகளம் ஒத்துழைக்கும் எனத் தெரிகிறது.

**இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக நாதன் லயன் இருப்பார்**

கடந்த 2014ஆம் ஆண்டு இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டபோது, 2ஆவது இன்னிங்ஸில் இந்திய அணி நாதன் லயனின் சுழற்பந்து வீச்சில்தான் 7 இலக்குகளைப் பறிகொடுத்து 48 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. அதிலும் கடைசி 8 இலக்குகளை 73 ஓட்டங்களுக்குள் இழந்தது.


ஆதலால், இந்த முறையும் நாதன் லயன் இந்திய அணிக்கு அச்சுறுத்தலாக இருப்பார் என்று எதிர்பார்க்கலாம். அதிலும் குறிப்பாக நாதன் லயன் டெஸ்ட் ஆட்டங்களில் பல்வேறு நாடுகளின் 15 வீரர்களை ஐந்துக்கும் மேற்பட்ட முறை ஆட்டமிழக்கச் செய்துள்ளார். அதில் இந்திய அணியின் 5 வீரர்கள் அடங்குகிறார்கள். அவர்களில் புஜாரா, கோக்லி, ரகானே உள்ளிட்ட பெருந்தலைகளும் உள்ளடக்கம்.

ஆஸ்திரேலியாவில் இந்திய அணிக்கு எதிராக நாதன் லயன் 30 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். அதிலும் அடிலெய்ட் நாதன் லயனுக்கு சொந்த மைதானம் என்பதால், அவரின் தாக்கம் அதிகமாகவே இருக்கக்கூடும். இதுவரை நாதன் லயன் அடிலெய்ட் மைதானத்தில் பந்துவீசி இலக்கைக் கைப்பற்றாமல் சென்றதில்லை என்ற வரலாறும் உண்டு. (ம)

ஸ்ராக், ஹசில்வூட், கம்மின்ஸால்

# விராட் கோக்லியைக் கட்டுப்படுத்துவோம்!

ட்ராவிஸ் ஹெட் சீண்டல்



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ராக், ஹசில்வூட், கம்மின்ஸ் ஆகியோரைக் கொண்ட கூட்டணியால் இந்திய அணியின் தலைவர் கோக்லியைக் கட்டுப்படுத்துவோம் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான ட்ராவிஸ் ஹெட்.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ட்ராவிஸ் ஹெட்.



"எங்களுடைய பந்து வீச்சாளர்கள் விராட் கோக்லியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. நான் ஸ்ராக், ஹசில்வுட், கம்மின்ஸ் ஆகியோரைச் சந்தித்ததால் அவர்கள் எவ்வளவு கடின பயிற்சி எடுத்திருக்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. விராட் கோக்லிக்கு போதுமான அளவு நெருக்கடி கொடுக்க எமது வேகப்பந்து வீச்சாளர்களால் முடியும். எனினும் கோக்லி சிறந்த வீரர் என்பதையும் அபாயகரமான வீரர் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு ஆட்டத்திலும் அவர் மீது சிறப்புக் கவனம் செலுத்துவோம்" என்று ஹெட் மேலும் தெரிவித்தார்.

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித், முன்னாள் உபதலைவர் வோர்ணர், முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் ஆகியோருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் இல்லாமல் ஆஸ்திரேலிய அணி இந்தத் தொடரை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பவார் நீக்கம்

மிதாலி ராஜின் குற்றச்சாட்டை அடுத்து இந்தியப் பெண்கள் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரமேஸ் பவாருடனான ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

உலகக்கிண்ண ரி20 தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் மிதாலி நீக்கப்பட்டமைக்கு ரமேஸ் பவாரே காரணம் என்று அவர் குற்றம் சுமத்தியிருந்தார். இந்த விவகாரம் பூதாகரமாகியிருந்தது. இது தொடர்பில் துரித விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன. பவாரின் ஒப்பந்த காலம் முடிவுக்கு வந்ததை அடுத்து அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு பதவி நீட்டிப்பு ஒப்பந்தத்தை வழங்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மறுத்துள்ளது. (ம)

## தயாரானார் தமீம் இக்பால்

பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தமீம் இக்பால் காயத்தில் இருந்து தற்போது மீண்டுள்ளார்.

ஆசியக் கிண்ணத் தொடரில் தமீம் இக்பாலின் கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் சுமார் 5 வாரங்கள் கட்டாய ஓய்வில் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு தொடர்ந்து ஓய்வில் இருந்த தமீம் இக்பால் தற்போது காயத்தில் இருந்து மீண்டு மீண்டும் களமிறங்கவுள்ளார். (ம)




# உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் இந்திய அணிக்கு டோனி மிகவும் அவசியமானவர்

## பிளெமிங் கருத்துப் பகிர்வு

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரை இந்திய அணி கைப்பற்ற வேண்டுமாயின் டோனி நிச்சயம் அணியில் இருக்க வேண்டும். அவர் மிகமிக வலிமையான வீரர் என்று தெரிவித்தார் பிளெமிங்.

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் தற்போது இந்திய அணியில் இருந்து டோனி புறக்கணிக்கப்பட்டு வருகிறார். அண்மையில் முடிவடைந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி20 தொடருக்கான இந்திய அணியில் இருந்து டோனி நீக்கப்பட்டார். இது பன்னாட்டுக் கிரிக்கெட் அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதனால் உலகக்கிண்ணத் தொடரில் இருந்தும் டோனி நீக்கப்படலாம் என்ற கருத்துக் கணிப்புக்களும் பரவலாக உள்ள நிலையில் இவ்வாறு தெரிவித்தார் பிளெமிங்.

"டோனி அடுத்த உலகக்கிண்ணத் தொடருக்குத் தேவையா இல்லையா என்ற விவாதமே மிகப்பெரும் தவறு. சந்தேகத்துக்கு இடமின்றி அவர் அற்புதமான வீரர். வலிமையான வீரர். அவரை உலகக்கிண்ணத் தொடருக்கான அணியில் இருந்து நீக்கினால் அது உலகக்கிண்ணம் நோக்கிய இந்திய கிரிக்கெட் அணியின் பயணத்துக்குப் பெரும் தடங்கலாக அமையும். டோனி எவ்வளவு ஆபத்தான வீரராக தற்போதும் உள்ளார் என்பது கடந்த ஐ.பி.எல். தொடரின் பெறுபேறுகளைப் பார்த்தால் தெரியும்" என்று பிளெமிங் மேலும் தெரிவித்தார்.



ஐ.பி.எல். தொடரில் டோனியும் பிளெமிங்கும் ஒரே அணியில் நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்றனர். சென்னை சுப்பர் கிங்ஸுக்குத் தடை விதிக்கப்பட்டு அந்த அணிக்குப் பதிலாக புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் சேர்க்கப்பட்ட போதும்கூட டோனியின் பரிந்துரையின் அடிப்படையில் புனேயின் பயிற்சியாளராக பிளெமிங்கே நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ஆஸ்திரேலிய அணி இன்று அறிவிப்பு

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொருக்கான ஆஸ்திரேலிய அணி இன்று அறிவிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. (ம)

**சிற்றூழியர் தேவை**

உதயன் நெல்லியடிக் கிளையில் பணியாற்றுவதற்கு சிற்றூழியர் தேவை. (வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்) ஆர்வமுள்ளோர் கீழ் காணும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

காலம் : 06.12.2018 வியாழக்கிழமை
முற்பகல் 9.00 - 12.00 மணிவரை

**உதயன் கிளைக் காரியாலயம்**
நெல்லியடி அலுவலகம்
இல.55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# மேலும் மெருகேறியது லுஸ்னிக்கி



ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின் போது பெரியளவில் பேசப்பட்ட லுஸ்னிக்கி அரங்கு மேலும் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

சுமார் 85 ஆயிரம் பேர் அமரக்கூடிய இந்தக் கால்பந்தாட்ட அரங்கு உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின்போது பன்னாட்டு ஊடகங்களின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்திருந்தது.

தற்போது மேலும் ஏராளமான கண்கவர் ஒளிவிளக்குகள், இருக்கைகள் என்பன பொருத்தப்பட்டு அரங்கு மேலும் அழகு படுத்தப்பட்டுள்ளது.

லுஸ்னிக்கி அரங்கின் தற்போதைய ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. (ம)

**நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மலர்வு 09 . 08 . 1939



உதிர்வு 04 . 11 . 2018

**அமரர் கணபதிப்பிள்ளை கமலாட்சி**

கடந்த (04.11.2018) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் தொலைபேசி, முகதுயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (04.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது சிறுப்பிட்டி இல்லத்தில் நடைபெறும். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. 076 242 0136

குடும்பத்தினர்.

**பிரத்தியேக/குழு வகுப்புகள்**
A/L 2019 & DAY / A/L 2020
கணக்கீடு:
Mr.BALAKAJEN
* கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5 - 7 p.m
* கொழும்புத்துறை Sat & Sun (2 - 5 p.m.)
T.P. 075 077 5660/ 076 565 5956

**வீனஸ் பாம் (புறொயிலர் விற்பனை)**
எமது பண்ணையில் வளர்க்கப்பட்ட புறொயிலர் இறைச்சி கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மொத்த கொள்வனவிற்கு விலைக்கழிவு வழங்கப்படும்.
வீனஸ்பாம்
கலாசாலை வீதி, 6 ஆம் ஒழுங்கை
திருநெல்வேலி.
தொ.பே : 077 844 8300

**வேலைக்கு ஆள்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கிவரும் Food City இற்கு பின்வரும் வேலைகளுக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
★ சிட்டை தயாரிப்பாளர்
★ காசாளர்
★ களஞ்சிய காப்பாளர்
★ பண வசூலிப்பாளர்கள்
தொடர்பு - 075 225 0543, 077 063 9883

**போட்டிப் பரீட்சை மாலைநேர வகுப்புகள்**
வடமாகாண அலுவலக பணியாளர்
செவ் (இன்று), புதன்
பி.ப. 4.30 - 6.30 மணிவரை
அதிபர் சேவை தரம் 3
செவ், வியாழன்
பி.ப. 4.30 - 7.30 மணிவரை
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

# பிருத்வி ஷா நலம்பெற்றார்

ஆஸ்திரேலியப் பதினொருவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் கணுக்காலில் காயமடைந்த பிருத்வி ஷா தற்போது நலமுடன் உள்ளார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பவுண்டரி எல்லையில் பிடியெடுப்பை மேற்கொள்ள முயற்சித்த போது பிருத்வி ஷாவின் கணுக்காலில் காயம் ஏற்பட்டது. பரிசோதனையில் அவரின் கணுக்காலில் தசைக் கிழிவு ஏற்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து மூன்று நாள்கள் அவருக்குக் கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. தற்போது அவர் நலமுடன் உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.